

1.96-9-6
Library

University of Jaffna
280
INO
249655(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*

# AL-HAJ
# M.I.M. NALEEM J.P.

**'SILMIYA MAHAL'**

**NALEEM HAJIAR MAWATHA**
**CHINA FORT, BERUWALA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்கிலாப்

# INQILAAB

280
INQ
AR

## VOLUME 5

## 1986/87

(HIJREE 1407)

University of Jaffna Sri Lanka
RECEIVED
1988 -9- 6
Periodicals Division
Library

249655

University of Jaffna
249655
Library

249655

ARCHIVES

# MUSLIM MAJLIS

## UNIVERSITY OF JAFFNA

## SRILANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியின் கருப்பொருளாய்
வான் வெளியில் வலம்வந்த — மதியினையும்
தன்மதியால் வெற்றி கொண்ட — மானுடனும்
தலைசாய்க்கத் தகுதியுடைத்
தனியொருவன் — அவன்பெயரால்
துவங்குகின்றோம் நம்பணியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Editorial Board

*EDITOR:*

**M. H. M. ALISABRI**

*SUB EDITOR:*

**MISS RAGIA SHERIEF**

*MEMBERS:*

M. A. ABUL MULAFFAR
M. S. M. RIZVI
M. A. C. M. NAUSHAD
MISS M. A. N. FEROZIA
MISS S. MARSOONA SUBAIR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*

# PARKER TRADERS

WHOLESALE & RETAIL DEALERS IN

**PARKER WALL CLOCKS**

★

*160, KEYZER STREET,*

*COLOMBO - 11.*

Grams: "PARKER" T' Phone: 26657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Executive Committee

| | |
|---|---|
| *Patron:* | M. I. Abdur Razzak M. A. (Khartoum) |
| *Senior Treasurer:* | M. H. M. Nasir B. Sc. (Hons) |
| *President:* | A. C. Mohamed Naffeel |
| *Vice President:* | M. S. Amanullah |
| *Secretary:* | M. I. M. Mahir |
| *Asst Secretary:* | C. M. Zarookdeen |
| *Social Secretary:* | M. K. S. M. Bishry |
| *Junior Treasurer:* | S. L. A. Gafoor |
| *Editor:* | M. H. M. Alisabri |
| *Sub-Editor:* | Miss Ragia Sherief |
| *Auditor:* | M. M. M. Sherief |
| *Members:* | Miss M. I. S. Nihara |
| | S. H. Abdullah |
| | H. C. Thangarajah |
| | M. I. Ibrahim |
| | Miss M. C. Rizana |
| | S. L. Jahufar |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments
of

# WIMAL STORES

Bazaar Street,
CHILAW.

Best Wishes From

# K. A. RAZAB & SONS

510, Main Street,
MATALE.

எமது வாழ்த்துக்கள்!

★ வீட்டு பாவனைப் பொருட்கள்
★ எவர்சில்வர் பொருட்கள்
★ சுவர் மணிக்கூடுகள்

போன்றவற்றுக்கு

நம்பிக்கையான தாபனம்

# உலிதாஸ்

பெரியகடை, மன்னார்.

எமது வாழ்த்துக்கள்!

# சிஹ்றுஸ் சென்டர்

48, மெயின்வீதி. ஏறுவூர்.

★ பைசிக்கள் உபகரணங்கள்,
★ அலங்கார பொருட்கள்
★ இரும்பிலான வீட்டு தளபாடங்கள்
★ பரிசுப் பொருட்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ மின் விசிறிகள் ★ கடிகாரங்கள்
★ பாதரட்சைகள் ★ மின் உபகரணங்கள்

அனைத்திற்கும்

ஏறுவூரில் 'சிஹ்றுஸ் சென்டர்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | துணைவேந்தரின் ஆசிச்செய்தி ... ... | ix |
| 2. | மஜ்லிஸ் போஷகரின் ஆசியுரை ... ... | x |
| 3. | Message From Majlis President ... ... | xi |
| 4. | அட்டையில்... ... ... | xii |
| 5. | எண்ணங்களை எழுதுகிறோம் ... ... | xiii |
| 6. | முகவரிக்கோர் முகவுரை... ... ... | xv |
| 7. | இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியங்களில் இந்துமத கலாசார செல்வாக்கு-ஒரு கண்ணோட்டம் ... | 1 |
| 8. | போர் உன் பெயர் சொல்லி அழைக்கிறது ... | 15 |
| 9. | The SriLankan Ethnic Crisis And Muslim-Tamil RelationShips- A Socio- Political Review ... | 17 |
| 10. | எச்சரிக்கை! ... | 37 |
| 11. | சமாதிக்குள் போகும் சமாதானங்கள் ... | 41 |
| 12. | அபூரய்ஹான் அல்-பெருனீ-மதங்கள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வின் ஒரு முன்னோடி ... | 43 |
| 13. | இலங்கை முஸ்லிம்கள்; ஒரு குடிசனப் புவியியல் நோக்கு | 53 |
| 14. | கடந்த காலங்களில் நம்பிக்கை ஏற்படக் கூடிய அத்திவாரங்கள் இடப்படாமையின் விளைவே இன்றைய தமிழ்-முஸ்லிம் இனக்கலவரங்களாகும்! ... | 65 |
| 15. | வட்டியில்லா வங்கிகள்-ஓர் அறிமுகம் ... | 77 |
| 16. | முஸ்லிம் மாதரும் தற்கால உலகில் அவர்களின் பங்கும் | 91 |
| 17. | தமிழ் பேசும் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அரபுமொழிப்பயன்பாடு | 105 |
| 18. | ஆப்கான் மக்களின் அறப் போராட்டம் | 115 |
| 19. | செயலாளரின் செயலேட்டிலிருந்து ... | 127 |
| 20. | Our Majlis Members ... | 133 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*

★

**E. M. CADERSAIB & CO. LTD**

62, Kotugodella Veediya,
KANDY.

*With Best Compliments From*

**HOTEL BUHARY**

31, Colombo Road,
PERADENIYA.
T. P. 08-88308

*With Best Compliments of*

**ANWER STORES**

Dealers in
Vegetable Seeds, Ceylon Products & Provisions.

11, POST OFFICE ROAD,
WELIMADA.

With Best Compliments From

**NAJEEM'S TEXTILES**

20 A, Main Street
Kattankudy - 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்தரின் ஆசிச்செய்தி

சாந்தி மார்க்கம் எனப் புகழ் பெற்று விளங்கும் இஸ்லாம், மக்களுக்கு அவசியமான தேவைகளுக்கு ஏற்றதாகவும், உண்மையோடு மாறுபடாத கொள்கைகளை உடையதாகவும் வளங்குகின்றது. ஒரு சமயத்தின் பெருமையை அதனுடைய உயரிய தத்துவங்களைக் கொண்டு மதிக்கக்கூடாது; அம்மதம் அனுட்டிக்கும் தன்மையைக் கொண்டே மதிப்பிட வேண்டும். இஸ்லாத்தில் உயர்ந்த எண்ணங்களும் அறிவுக்குரிய அனுட்டான முறைகளும் அடங்கியிருக்கின்றன.

இத்தகைய இஸ்லாம் மார்க்கத்தை இவ்வுலகில் இறுதியாக நிலை நாட்டியவர் முஹம்மது நபி(ஸல்)ஆவர். இப் பெரு நபியைத்தான் இம் மதத்தினர் வழிகாட்டியாகப் பின்பற்றுகின்றனர். இத்தகைய நபியவர்களைக் கொண்ட இஸ்லாம், தூய்மையான கடவுள் உண்மைகளை ஒன்று சேர்த்து, எல்லாக் காலத்துக்கும் எல்லாத் தேசத்துக்கும் எல்லாச் சாதியினருக்கும் பொருத்தமான மதமாக விளங்குகின்றது. இதன் வேதமாகிய திருக் குர்ஆன், கடந்த பதின்மூன்று நூற்றாண்டுகளாக ஓர் எழுத்தேனும் மாறுபடாமல் அன்றுபோல் இன்றும் ஒரேதன்மையதாய் இருந்து வருகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இஸ்லாம் மதத்தினைப் பின்பற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து மாணவர், சமூகத்தில் ஏனைய சமய மாணவரோடு சகோதரத்துவத்துடன் பயின்று வருகின்றார்கள். அவர்கள் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக 'இன்கிலாப்' எனப் பெயரிய சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் இஸ்லாமிய மாணவர் தொகை முந்தய காலங்களிற் கூடுதலாக இருந்தபோதும், கொழும்பில் உள்ள இஸ்லாமியப் பெரும் புள்ளிகளின் முயற்சியினாற் குறைந்து, இன்று பல்கலைக்கழக மாணவர் தொகையில் இஸ்லாமிய மாணவர் எண்ணிக்கை பத்திலொன்றாக அமைந்துள்ளது. ஆயினும் முஸ்லிம் மாணவர் தொடர்ந்து இங்கு கூடுதலாகப் பயில்வதற்கு ஏற்ற அறிகுறிகள் இப்போது காணப்படுகின்றன. எனவே அவர்களின் எழுத்தாற்றலையும் கட்டுரை வன்மையையும் எடுத்துக் காட்டும் வகையில்' இன்கிலாப்' அமைந்து வருவது பாராட்டத் தக்கது.

'இன்கிலாப்' தொடர்ந்து வெளிவர எமது வாழ்த்துக்கள்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன்
துணைவேந்தர்

25.09.1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஜ்லிஸ் போஷகரின் ஆசியுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ், அதன் தொடக்க காலத்தில் இருந்து மிகவும் பாராட்டத்தக்க பல முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளது. இவற்றுள் பிரதானமான ஒரு முயற்சியாக அது வெளியிட்டுவரும் 'இன்கிலாப்' எனும் ஆண்டிதழைக் குறிப்பிடலாம்.

1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற இனக் கலவரத்தையடுத்து தொடர்ந்து ஐந்து வருடங்களாக வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய அமைதியின்மை காரணமாக இன்கிலாப் வெளிவருவதில் தாமதமேற்பட்டது.

நடந்து முடிந்த கல்வியாண்டுக்குள் இன்கிலாப் இதழை வெளியிடுவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் முழு முயற்சியெடுத்தனர். எனினும் திடீரென சென்ற ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்ற வன்செயல்களினால் பல்கலைக் கழகம் பெருமளவு தாக்கப்பட்டது. எனவே, தான் இவ்விதழ் இவ்வளவு தாமதமாகி வெளிவருகின்றது. பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்திருக்கும் இழ்விதழை வெளிக்கொணர்வதில் முன்னின்று உழைத்த மஜ்லிஸ் சகோதரர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

வடகோணத்தில் இருந்து வெளிவரும் இன்கிலாப் பல புதுத் திருப்பங்களை இலங்கை இஸ்லாமிய சமுதாயத்தில் உண்டுபண்ண வேண்டும் என விழைந்து இன்கிலாப்பின் வளர்ச்சிக்காக ஆசி கூறுகிறேன்.

அல்ஹாஜ் மௌலவி
எம். ஐ. அப்துர் ரஸ்ஸாக் எம். ஏ.
(விரிவுரையாளர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
06-06-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Massage From Majlis President

In the name of Allah the almighty.

It is with great pleasure that I write this message to the 5th edition of "Inqilab" the magazine of the Muslim Majlis of the University of Jaffna.

Our Majlis has a great history. The number of entering Muslim students to the University of Jaffna increase yearly to a commentable extent. In this time it's realized the students must be under the shadow of Islam with our great culture & tradition and the Majlis bring them up under one roof and the students will make the best use of their stay here.

As in the Jaffna's past and present situation our students got & even getting many unforgettable real experience for their future life. I am sure, our students, even the female students, Who follow their cources in the University of Jaffna can face any problems, confrontations and solve them easily in their real life situation. This is a very valuable thing than our degrees. Because our students are not only graduates but also well experienced guides for our poor society.

Our Present Muslim Majlis committee did their best for the Muslim students & others amidst the recent violence & troubles. Also we had to lose an under graduate from Mannar District, during the October disturbances in the Island. We pray to Allah to grant him "Firdhous".

Also our period has been a very short period of time I am proud to say that our committee is accomplished much with the help of Allah.

Finally. I would like to thank the Magazine committee & especially editor to carry out their activities amidst violence, troubles & terrible Situations. And again thanking all those who helped to make this Magazine a Success

"Alhamdu lillah"

**A. C. MOHAMED NAFEEL**
**President**

*Muslim Majlis*
*University of Jaffna*
*Thirunelvely, Jaffna*
*Sri Lanka*
*18-05-87*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டையில்......

# நிமிர்ந்து நின்று மிதிபடுகிறேன்.

உதறிவிட்டுத்தான்
எழுந்து நின்றேன்
மறுபடியும் ஒட்டிக் கொண்டது
தூசு.

வெளிற்ற நினைத்து
ஆடைகளில் போட்டு
அழுத்தி அழுத்தித் தேய்த்தது
சோப்பையல்ல
அழுக்கைத்தான்.

விழிகளைத் துடைப்பதற்கே
விரல்களுக்கு அனுமதிப்பு
விழிகள் குடையப்பட்ட பின்தான்
விழிப்பே வருகிறது.

எந்த உணர்வுகளாயினும்
இதயக் கல்லறைக்குள்
அவலங்களாகிப் போக
நினைந்து......

ஊறிவருகின்ற எச்சிலால்
என்னை நானே துப்பி
நனைத்துக் கொள்கிறேன்
எனக்கேது சொரணை.

— மு. இ. அ. ஜப்பார் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களை எழுதுகிறோம்

புகழ் அனைத்தும் அல்லாவுக்கே. மீண்டும் சிறிது கால இடைவெளியின் பின்னர் இன்கிலாப் உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. எம் மீது சுமத்தப்பட்ட ஓர் அன்புச்சுமையை செவ்வனவே நிறைவேற்றிவிட்டோம் என்ற உவகையோடு உங்களை சந்திக்கின்றோம்.

மனித குலத்திற்கு இஸ்லாம் விடுக்கும் தூதை மிகத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டுமென்ற எண்ணமும், இலங்கை முஸ்லிம் சமூகம் பல்வேறு துறைகளிலும் பல்வேறு வழிகளினூலும் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அவற்றிற்கான தீர்வுகளை அறிஞர்களின் கண்ணோட்டத்தில் முன்வைக்க வேண்டும் என்ற எண்ணமும் இப்பொறுப்பை கையேற்கும் போது எம்முள் இருந்த துடிப்பாகும். இதனை ஆண்டுக்கொரு முறை வெளிவரும் இன்கிலாப்பின் மூலம் நிறைவேற்றுவது எவ்வளவு கடினமானது என்பதை நடைமுறைகள் எமக்கு சுட்டிக்காட்டின. எனினும் எமது நோக்கத்தில் மிக நுண்ணிய ஒரு பகுதியையாவது செவ்வனே நிறைவேற்றியுள்ளோம் என்ற வகையில் நாம் பெருமிதமடைகின்றோம். இவ்விதழ் தாங்கியுள்ள ஆக்கங்கள் அனைத்தும் முஸ்லிம் சமுதாயத்தை நோக்கிப் பேசும் பாணியில்; விலைமதிப்பற்ற " இஸ்லாம் " என்ற பொற்குவியலை கையில் வைத்துக் கொண்டு வெறும் போலிக்கற்களைத் தேடித் திரியும் ஒரு சமுதாயத்தை நோக்கி விடுக்கப்படும் அழைப்பாக; சிந்தனையைத் தூண்டும் அழைப்பாக அமைந்துள்ளன என்றே கருதுகின்றோம்.

எமது மஜ்லிஸின் இன்றைய செயற்பாடுகள் அனைத்தும் யாழ்ப்பாணத்தின் அண்மைக்கால வரலாற்றுப் போக்கினால் அள்ளிச் செல்லப்பட்டதொன்ருகவே அமைகின்றது. இன்கிலாப் சில காலம் வெளிவராமல் தடைப்பட்டமைக்கும் இதனையே காரணமாக முன்வைக்க வேண்டியவர்களாக உள்ளோம். வடக்கின் நிலைமைகளால் இன்கிலாப் ( புரட்சி ) பாதிக்கப்படுவதா என உங்கள் பார்வை எம்மை நோக்கி திரும்புவதாக உணர்கிறோம். எனினும் எமது இன்கிலாப் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் மனித உள்ளங்களை ஆழமாக சிந்திக்கக் கூடியதாக; தட்டி எழுப்பக் கூடியதாக அமைய வேண்டும். அதன் மூலம் தான் முஸ்லிம் சமூகம் எதிர் நோக்குகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சரியான தீர்வை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்ற நோக்கை கொண்டதாக அமைய வேண்டுமேயன்றி வெறும் " சடங்களை " மட்டும் நம்பியதாக அமையக் கூடாது என்பதே எமது எண்ணமாக இருந்தது.

முஸ்லிம் சமூகம் இஸ்லாத்தோடுள்ள தனது தொடர்பை பெயரளவில் மட்டுமன்றி எல்லாத் துறைகளிலும் மிக நெருங்கியதாக ஆக்கிக்கொள்ள வேண்டிய அவசரமானதும்; அவசியமானதுமான ஒரு கால கட்டத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்வகையில் உங்களை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டும் அம்சங்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் தாங்கியதாக இன்கிலாப் வெளிவர வேண்டும் என பெரிதும் முயன்றிருக்கின்றோம். இம் முயற்சியில் நாம் அடைந்துள்ள வெற்றியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வரும் பக்கங்களில் நீங்கள் மதிப்பிட்டுக் கொள்ளலாம். உங்கள் நடுநிலை விமர்சனங்கள் எதிர்கால இன்கிலாபின் உயிர்நாடியாகும்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் இன்றைய காலகட்டம் முக்கியமான ஒரு சந்தியாக அமைந்துள்ளதெனலாம். பல்வேறு கோணங்களில் இருந்தும் பல்வேறு சவால்களை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவை பௌதீக ரீதியான தாக்கங்களாக மட்டுமன்றி சிந்தனை ரீதியான பல குறிக்கோள்களையும் கொண்டுள்ளன. இவற்றை உரிய முறையில் எதிர்கொள்வதாயின் முஸ்லிம் சமூகம் இஸ்லாத்தின் நிழலில் ஒன்றுபட வேண்டியது அவசியமானதாகும். ஏனெனில் இன்று எமை வாட்டும் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்று ஒற்றுமையின்மையாகும். இஸ்லாம் எனும் சக்தி எம்மை நாடு, பிரதேசம், இனம், மொழி போன்ற எல்லாத்தடைகளையும் கடந்த ஒரு பிணைப்பில் ஒன்று சேர்த்திருக்கின்றது என்ற பேருண்மையை மனதிற்கொண்டு எம்மிடையே உள்ள, இஸ்லாத்தின் அடிப்படைகளை மறுக்காத சிற்சில வேறுபாடுகளை மறந்து நாம் ஒன்றிணைய வேண்டியது அவசியமாகும். இதனை நோக்கமாகக் கொண்டு ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட வேண்டியது எம் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். இதில் ஓர் அங்கமான எழுத்து மூலமான தொடர்பு மக்கள் உள்ளங்களில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியது. இதானையே நபி (ஸல்) அவர்களும் "எழுத்தாளனின் பேனமுனை புனித போராளியின் வாள் முனையை விட வலிமையாது" என்று கூறியிருக்கின்றார்கள்.

முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புக்கள் இஸ்லாமிய கொள்கைகளை சுமந்திருக்க வேண்டும். அல்குர்ஆனின் வழிகாட்டல்களும் ரசூல் (ஸல்) அவர்களின் நடைமுறைகளும்தான் படைப்புகளைப் பின்னிக் கொண்டிருக்க வேண்டும் கற்பனைகள்; சிந்தனைகள் இஸ்லாமிய வரையறைகளை எல்லைக் கோடுகளாகவும் மையமாகவும் கொண்டிருக்க வேண்டும். சூழ்நிலைத் தாக்கத்தினால் பாதிக்கப்படுகின்ற மனித சிந்தனைகளில் ஊற்றெடுக்கின்ற கொள்கைகளில் சிக்கி, இலட்சியத்தை இழந்து மேற்கின் நட்சத்திரங்களுக்கும், கிழக்கின் அரிவாள்களுக்கும் இரையாகாமல் இருக்க வேண்டும். இவ்வகையில் இளம் படைப்பாளிகளுக்கும் இன்கிலாப் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இறுதியாக, இன்கிலாப் வெளிவருவதில் ஆக்கமும், ஊக்கமும் அளித்து உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளை சமர்ப்பித்து மலரினுள் நுழைய இடம் விட்டு ஒதுங்குகின்றோம்.

ஆசிரியர்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு:
02 - 01 - 1967



இறப்பு:
12 - 10 - 1987

**எஸ். எச். எம். முஸாதிக்**
*10—ம் வட்டாரம்*
*விடத்தல் தீவு*

# முகவரிக்கோர் முகவுரை .....

*12.10.87*
அந்த நாள்
கீழே;
சப்பாத்துக்களின்
சறுக்கல்கள்
மேலே;
மேகத்துடன்
வானவூர்தியின் சல்லாபம்
புரிந்தது
ஏதோ நடக்கப்போகிறது

★

மௌனமான
இரவுகளுக்கு
இருமல்
உறங்கியிருந்த வீதிகளில்
சிறு சிறு புலம்பல்கள்,
ஓடிப் போவோம்
ஓடிப் போவோம்

தூசிபடிந்த பைகளோ
நம்மையெல்லாம்
முந்தியோட
நீயேன்
பிந்தி விட்டாய்
எல்லோருக்கும்
முதலே
செல்ல வேண்டுமென்று ?

★

காற்று
கனிவாகத்தானிருக்கும்
என்றிருந்தோம்
அன்றுதான் புரிந்தது
அது
இப்படியான சேதியையும்
கூட்டி வரும் என்று

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தக் கறைகள்
பார்த்துப் பார்த்து
இறுகிப்போன
இதயங்களே
அன்று
இலகியிருந்தது
கண்ணீர்த் துளிகளால்

★

உன்னோடு
விதைக்கப்பட்ட
விதைகளிங்கே
முளைகள் கிளப்புகையில்
உன் நினைவு
புதுசு புதுசாய் கிளம்பி
காய்ந்தே
கலங்கவைக்குதே

★

தாரகைகளெல்லாம்
மதிகளாக
உலாவுகையில்
மதியான உனக்கேன்
அமாவாசை

★

உன்னைப் பதம் பார்த்த
துப்பாக்கி ரவையே
தன்னுயிரை
மாய்த்துக் கொண்டதாம்
கைசேதத்தின் எல்லையிலே

★

முஸாதிக்கே
முறுவலையே சொத்தாய்க்
-கொண்டவனே
கல்வியின் முற்களில்
நடந்து வந்த
உன் பாதங்களுக்கு
சோபனம்
கிடைக்கவில்லையே
சோலைக்குள் நுழைந்திட...
ஆனால்
சுவர்க்கத்தில் நீ
சுற்றித் திரிவதை
கண்ட பின்பேனும்
எம்மைத்
தேற்றிக் கொள்வோம்
அதுவரை.....
இன்னா லில்லாஹி
வஇன்னா இலைஹி
ராஜிஊன்...,

களுத்துறை றிஸ்வி

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியங்களில் இந்து மத, கலாசாரச் செல்வாக்கு — ஒரு கண்ணோட்டம்

மௌலவி. எம். ஐ. அப்துர்ரஸ்ஸாக் M. A. (Khartoum)
(மொழி, கலாசாரத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

**1981-ம்** ஆண்டின் புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்படி இலங்கையில், இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 18, 71, 535 ஆகவும், இலங்கைமுஸ்லிம்களின் எண்ணிக்கை 10, 56, 972 ஆகவும் இருந்தது. 1971-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி முஸ்லிம் சனத்தொகை 9,09,941 ஆக இருந்தது. எனவே சென்ற தசாப்தத்தில் முஸ்லிம் சனத்தொகையில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்வதற்கில்லை. கிழக்கு மாகாணத்தில் —அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில்தான் முஸ்லிம்கள் பெரும் பான்மையாக வாழ்கின்றனர். முழு முஸ்லிம் சனத்தொகையில் 67% சதவீதமானோர் சிங்களப் பிரதேசங்களிலேயே வாழ்கின்றனர். எனினும் சிங்களப்பௌத்த கலாசார பிரதிபலிப்புக்களைவிட தமிழ், இந்து கலாசாரப் பிரதிபலிப்புக்கள் கணிசமானவளவு கூடுதலாக இவர்களிடம் இடம் பெற்றுள்ளது அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களிடம் இப் பிரதிபலிப்புக்கள் ஒருபடி கூடுதலாகக் காணப்பட்டாலும் பொதுவான சில அம்சங்கள் சிங்களப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களிடமும் இடம் பெற்றுள்ளதை அவதானிக்கும்போது தமிழ் கலாசாரச் செல்வாக்கை உணரமுடிகின்றது. இத்தகைய கலாசாரப் பிரதிபலிப்புக்கான சரித்திரப் பின்னணியைச் சுருக்கமாகவும் இலங்கை முஸ்லிம்களிடம் இடம்பெற்றுள்ள தமிழ், இந்து கலாசார அம்சங்களை விசேடமாகவும் இதற்கான காரணங்களைப் பொதுவாகவும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இஸ்லாமிய கலாசாரம்

கட்டுரைக்கு ஒரு முகவுரை போன்று இஸ்லாமிய கலாசாரம் பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகத்தைத் தருவது ஏற்புடைத்து என நினைக்கின்றேன். அல்-குர்ஆன், ஹதீஸ் என்பனவற்றின் போதனை கள்வழிகாட்டுதல்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுவதுதான் இஸ்லாமிய கலாசாரம். ஆரம்பகாலத்தில் இதன் மத்திய தானங்களாகப் பள்ளிவாயில்கள் விளங்கிவந்தன. இஸ்லாத்தில் மதம், கலாசாரம் எனும் சொற்கள் ஒன்றையொன்று வேறுபடுத்த முடியாதவளவுக்கு இறுக்கமான பிணைப்பைக் கொண்ட சொற்களாக விளங்குகின்றன.

அல்—குர்ஆன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இஸ்லாமிய கலாசாரம் முழுமையான தொன்றாகும். அரேபியாவின் மத்தியில் இஸ்லாம் தோற்றமெடுத்தபோது மக்கா, மதீனா முதலிய நகரங்கள் கலாசாரத்தில் பின்தங்கியனவாகவும் பொருளாதார நலிவுடையனவாகவும் காணப்பட்டன. வெளியுலகு பற்றிய அறிவு அற்றவர்களாக விருந்த மக்கத்து மக்களிடமும் பெருமானாரின் சுற்றத்தார்களிடமும் அவர் மூலமாக அருளப்பட்ட அல்—குர்ஆன் சிறந்த ஒரு கலாசாரத்தை அளித்தது. அல்—குர்ஆன் போதனைகள் பெருமானார் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலை அடிப்படைகளாகக் கொண்ட இஸ்லாமிய கலாசாரத்தில் கி.பி. 661 க்குப்பின் புதியன பல புகத் தொடங்கின. இஸ்லாம் அரேபியாவுக்கு வெளியிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கியதில் இருந்து ரோம, பாரசீக கலாசாரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குகள் இஸ்லாமிய கலாசாரத் துடன் ஒன்றித்தன. இந்திய, கிரேக்க கலாசார அம்சங்கள் கூட இஸ்லாத்தில் புகுந்தன. பெருமானார் (ஸல்) அவர்களது காலத்திலும் நாற்பெரும் நேர்வழிநடந்த கலீபாக்களது காலகட்டங்களிலும் இஸ்லா மியக் கலாசார மத்திய நிலையங்களாக விளங்கிவந்த பள்ளிவாயில்களும் அவற்றின் அந்தஸ்த்துக்களைப் படிப்படியாக இழக்க வேண்டியேற்பட்டன. இக்கலப்பின் காரண மாக முஸ்லிம்களின் நடை, உடை, பாவனை களில் பிரதபலித்த பிறகலாசார அம்சங்கள் ஒருபுறம் இருக்க இஸ்லாமிய கலாசாரத்தின் அடிப்படையான ஏகத்துவ நம்பிக்கையிலும் கூட பாதிப்புக்கள் ஏற்பட்டன. கி.பி. 700—750 க்கு இடைப்பட்ட காலத்தில் அதிகமான கிரேக்க, பாரசீக நூல்கள் அரபியில் மொழிபெயர்க்கப்பட்டதும் இதற்கு ஒரு முக்கிய காரணம் எனலாம். இஸ்லாத்தின் பரம்பல் கீழைத்தேச நாடு களில் குறிப்பாக இந்தியாவில் ஏற்பட் டதைத் தொடர்ந்து இந்து கலாசார அம்சங்கள் பல முஸ்லிம்களை ஆட்கொண் டன. இது தவிர்க்க முடியாதவொன்றே.

முஹம்மத் பின் காஸிமின் படையெடுப்பு.

பூர்வீக காலந்தொட்டு அரபு நாடு களுக்கும் கீழைத்தேய நாடுகளுக்குமிடையே தொடர்பு இருந்து வந்துள்ளதெனினும் அதிகார பூர்வமாக முஸ்லிம் குடியேற்றங்கள் இந்தியாவில் உமையாக்கள் காலத்தில்தான் ஏற்பட்டன. உமையா கலீபா அப்துல் மலிக் (கி.பி. 685—705) இன் காலத்தில் உண்ணாட்டுப் பிரச்சினைகள் மிகவும் குறைந்து காணப்பட்டமையால் இராச்சியப் பரம்பலில் அதிக கவனம் செலுத்தக் கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இவரது ஆட்சிக்காலத்தில் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் என்பவர் பஸ்ரு, கூபா முதலிய பகுதிகளின் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு முறை இலங்கைத்தீவில் இறந்துபோன அறபியரின் மனைவிமார், பிள்ளைகள், கவர் னருக்கான காணிக்கை முதலியனவற்றைத் தாங்கிச் சென்ற கப்பல் தேபல் துறைமுகத் தில் வைத்துக் கொள்ளையடிக்கப்பட்டது. இது பற்றிக் கேள்விப்பட்டு ஆத்திரமடைந்த ஹஜ்ஜாஜ் சிந்து நாட்டு மன்னனுக்குக் கடிதம் எழுதித் தனது குடிமக்களைப் பாது காப்பாகத் தன்னிடம் அனுப்பிவைக்குமாறு வேண்டினார் தாஉறிர் இவ்வேண்டுகோளுக்கு உடன்படாது ஹஜ்ஜாஜைப் போருக் கழைத்தான். கலீபாவின் அனுமதியைப் பெற்ற ஹஜ்ஜாஜ் 6000 போர் வீரர் களை அப்துல்லா அஸ்லமீ என்பவரின் தலை மையில் அனுப்பிவைத்தார். தாஉறிரின் சேனைகள் கடுமையாக யுத்தம் புரியவே தனது சகோதரன் மகன், முஹம்மத் பின் காஸிம் என்பவரது தலைமையில் இன்னொரு படையை ஹஜ்ஜாஜ்அனுப்பினார். 17வயது இளைஞான முஹம்மத்பின் காஸிம் தனது வீரதீரச் செயல்களினால் "மக்ரான்" மாகா ணத்தை வெற்றிகொண்டு பின், தேபல் துறைமுகத்தை முற்றுகையிட்டார். எதிரி களைத் தோற்கடித்து மன்னரது கோட்டை யையும் கைப்பற்றி அங்கு ஒரு மஸ்ஜிதை யும் நிர்மாணித்தார். ராஜாதாஉறிர் நேரடி யாக வந்து முஹம்மத் பின் காஸிமுடன் மோதியதில் அவரும் இறக்க வேண்டியேற் பட்டது. இதைத்தொடர்ந்து சிந்து நதி தீரம் முழுமையாக இஸ்லாமியரின் ஆதிக் கத்தின் கீழ் வரத் தொடங்கியது. இவ் வெற்றியை அடுத்து அறபு முஸ்லிம்களுக்கும் இந்தியர்களுக்குமிடையே தொடர்புகள் வலுப்பெற்றதுடன் கலாசாரப் பரிமாற்றங் களும் இடம்பெற்றன.

இவ்வெற்றிக்கு ஏறக்குறைய ஒரு நூற் றூண்டு காலத்துக்கு முன்பே —இஸ்லாத்தின் தோற்ற காலத்திலேயே இஸ்லாத்தைப் பற்றியும் அதன் ஸ்தாபகர் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றியும் இந்தியர் அறிந் திருந்தனர் என்பதற்கு சரித்திர பூர்வமான ஆதாரங்கள் இருக்கின்றன.

இந்தியாவில் இஸ்லாம்.

பெருமானார் (ஸல்) அவர்களின் அற்பு தங்களில் ஒன்றாக சந்திரன் இரண்டு துண்டுகளாகப் பிளந்து பின்பு ஒன்று சேர்ந்த நிகழ்ச்சி அல்—குர்ஆனில் "கமர்"— சந்திரன் எனும் அத்தியாயத்தில் விவரிக்கப் பட்டிருக்கின்றது. இந்நிகழ்ச்சியை அல்— குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமை நெருங்கிவிட்டது, (அதற்கு அறிகுறியாக) சந்திரனும் பிளந்துவிட்டது. எனினும் அவர்கள் எந்த அத்தாட்சியைக் கண்ட போதிலும் (அதனை) புறக்கணித்து ''இது தொடர்ந்த சூனியந்தான்'' என்று கூறுகின்றனர். (54:1,2) இந்நிகழ்ச்சியைப் புறக்கண்களால் கண்ட இந்திய மன்னன் ஒருவன் இஸ்லாத்தைத் தழுவிய சம்பவம் இப்னுபதூதாவின் பிரயாணக்குறிப்புக்களில் இடம்பெற்றிருக்கின்றது. இந்திய மலபார் இராச்சியத்தை (இன்றைய கேரளம்) ஆண்டு வந்த ஜமுரன் ஸாமிரி என்பவர் சம்பவம் நடைபெற்ற அன்றிரவு தனது மாளிகையின் உப்பரிகையில் உலாவிக்கொண்டிருந்தார். திடீரென சந்திரன் இரண்டாகப் பிளந்து ஒன்றுகூடிய அற்புதத்தைக் கண்டு திடுக்குற்றார். ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தால் அதை உடனுக்குடன் சர்க்கார் தினக்குறிப் பேட்டில் எழுதிவைக்கும் பழக்கத்தை இவர் மேற்கொண்டிருந்தார். அதற்கிணங்க இவ் வற்புத நிகழ்ச்சியையும் உடனே பதிவு செய்தார். அப்பால் அவ்வற்புத நிகழ்ச்சியின் விவரம் குறித்து விரிவாக ஆராயுமாறு தனது பிரதானிகளுக்கும் அரசவை அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார். தீர்க்க ஆராய்ந்த பின்னர் அரபுநாட்டில் புதியதூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் தோன்றியிருப்பதும் அவர்களாலேயே, இவ்வற்புதம் நிகழ்த்தப் பட்டிருப்பது அப்பெருமான் பற்றிய விவரங்களும் தெரியவந்தன. அப்பொழுதே பெருமானுரை ஒப்புக்கொண்டு இஸ்லாத்தைத் தழுவியதுடன் தனது இராச்சியப் பொறுப்பை இளவரசரிடம் ஒப்படைத்துவிட்டு பெருமானுரைச் சந்திக்க பாய்மரக்கப்பல் மூலம் அரபுநாட்டை நோக்கி புறப்பட்டார். ஆனுல் துரதிர்ஷ்டவசமாக வழியிலேயே காலஞ்சென்ருர். அவரது சடலம் எமன் நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இம்மன்னனது பரம்பரையில் வந்த சேரமான் பெருமானும் இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டு இஸ்லாத்தைத் தழுவிய ஒரு சம்பவம் தாரீகுல் இஸ்லாம், தார்கே பதூதா போன்ற கிரந்தங்களில் இடம் பெற்றிருக்கின்றது. ஆதம் நபியின் பாதத் தரிசனத்தை முன்னிட்டு அரபியரும் அரபியர் அல்லாதோரும் இலங்கையை நோக்கி வருவது வழக்கம். இவ்வாறு வந்த குழுவில் ஒரு சந்தர்ப்பத்தில் மாலிக் இப்னு தீனரின் குழுவினர் வந்தபோது அவர்களை ஏற்றி வந்த கப்பல் திசை தப்பி மலபாரின் பக்கம் திரும்பிட்டது. எனவே கள்ளிக் கோட்டைத் துறைமுகத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அங்கு இறங்கிய இவர்களை சேரமான் வரவேற்று தங்குமிட வசதிகள் செய்து கொடுத்தார். அவர்களைப்பற்றி மன்னன் விசாரித்தபோது தாங்கள் முஸ்லிம்கள் என்றும் முஉறம்மத் (ஸல்) அவர்கள் தங்கள்பால் அனுப்பப்பட்ட தூதர் என்றும் குறிப்பிட்டனர். உங்கள் அத் தூதர் பற்றிய நிலைகளையும் அற்புதங்களையும் அறிந்து கொள்ள விரும்புகின்றேன், என மன்னன் கூற சந்திரன் பிளந்த அற்புதம் எடுத்துக்கூறப்பட்டது. பெருமான் காலத்தினைக் குறிப்பிட்டு ஆராயப்பட்ட போது இந்நிகழ்ச்சி எழுதப்பட்டிருப்பதைக் கண்ணுற்ற சேரமான் பெருமான் இஸ்லாத்தைத் தழுவினுர். அரசவைப் பிரதானிகள் பற்றிய அச்சம் இருந்ததால் இதை அவர்கள் வெளியிட விரும்பவில்லை. தனது விருந்தினர்களான முஸ்லிம்களிடமும் இதைப் பகிரங்கப் படுத்தாதிருக்கும்படி வேண்டிக்கொண்டார்.

பல மதங்கள் இனங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறுபட்ட கால கட்டங்களில் இந்தியாவுக்கு வருகை தந்துள்ளனர். இவ்வகையில் முதன்முதலாக ஆரியர்களும் அதையடுத்து மத்தியாசியாவைச் சேர்ந்தோரும் மங்கோலியர்களும் வருகை தந்தனர். நாட்டை ஆக்கிரமித்து வெற்றி கொள்வது இந்தியாவின் செல்வ வளங்களைக் கவர்ந்து செல்வது கலைப் பொக்கிஷங்களைப் படித்தறிவது போன்ற பல்வேறு காரணங்களுக்காக இவர்கள் இந்தியாவுக்கு வந்தனர். அன்னியத் தாக்குதல்களுக்குப் பலமுறை இந்தியா உட்பட்டதன் காரணமாக கலப்புமுறையான கலாசாரப் பாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரியங்கள் பல தோற்றமெடுத்தது மறுப்பதற்கில்லை. இந்தியாவுக்குள் வெற்றி வீரர்களாகப் பிரவேசித்த முஸ்லிம்கள் தொடர்ந்து ஏறக்குறைய 850 வருடங்கள் இந்தியாவை ஆட்சி செய்திருக்கின்றனர். இவர்களுள் துருக்கி தேசத்தைச் சேர்ந்த மஹ்மூதுல் கஸ்னவி இந்தியாவை 17முறைகள் படையெடுத்து ஈற்றில் வெற்றி பெற்றார். மஹ்மூத் கஸ்னவியின் படையெடுப்புக்களின் பயனாக இந்தியாவின் தென் வட பகுதிகளில் பெரும் நிலப்பரப்பு இஸ்லாமியஆட்சியின் கீழ் வந்தது. இதன்பின் ஷிஉறாபுத்தீன் முஹம்மத் கோரி அவர்கள் இந்தியா மீது படையெடுத்த போது இஜ்மரிலும், டெல்ஹியிலும் பலம்வாய்ந்த அரசர்களாக பிரித்விராஜ் எனும் வகுப்பினர் இருந்து வந்தனர். இதைத் தொடர்ந்து அடிமைக்குல அரசர்களும் கல்ஜி குடும்பத்தினரும் இந்தியாவை ஆண்டனர். குதுபுத்தீன் என்பவரின் தலைமை ஆரம்பிக்கப்பட்ட அடிமைக்குல அரசாங்கத்தில் குதுபுத்தீன் அவர்களும் அவர்களது 40 அரசவை அதிகாரிகளும் அடிமைகளாக இருந்தமையால் இப்பெயர் கொண்டு இவ்வரசாட்சி அழைக்கப்பட்டது. துக்லக் குடும்பத்தினர் இந்தியாவை 130 வருடங்களாக ஆண்டனர். முகலாயர்கள் ஏறக்குறைய இரு நூற்றாண்டுகள் இந்தியாவையாண்டனர். முகலாயப் பேரரசர்கள் அக்பருடைய காலத்தில் (1556–1605) இந்து கலாசாரப் பிரதிபலிப்புக்கள் அதிக மானவளவில் முஸ்லிம்களிடம் புகவாரம்பித்தன.

### அக்பரும் இந்துசமயமும்:

ஒரு சமயத்தில் இருக்கும் நல்லவற்றை யிழக்கா முறையில் மற்றைய சமயங்களில் இருக்கும் நல்லவற்றை அங்கீகரிக்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இவரால் 1582ல் ஸ்தாபிக்கப்பட்ட தீனே-இலாஉறி (தெய்வீகமதம்) எனும் மதத்தில் இந்துமதக் கொள்கைகளும் ஆசாரங்களும் பல முக்கியத்துவம் பெற்றன. இறைச்சி சாப்பிடுவது தடைசெய்யப் பட்டதுடன் மாமிசம் உண்போரின் பாத்திரங்களை உபயோகிப்பதும் தடைசெய்யப்பட்டது. அவ்வாறானோரின் பெண்களை மணமுடிப்பது கூடத் தடை செய்யப்பட்டது. இந்து கலாசார ஆசாரங்களில் தனக்கிருந்த ஈடுபாட்டை வெளிக்காட்டுவதற்காகத் தனது தாய் இறந்த போது தலையை மொட்டையடித்துத் துக்கம் கொண்டாடினார். உறிந்து இராஜபுத்திர இளவரசி ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டதுடன் அவரது மகனுக்கும் மனைவியாக இராஜபுத்திர இளவரசி ஒருவரையே தேர்ந்தெடுத்தார். உறிந்து மக்களின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சிகளின் பயனாக இந்து கலாசார ஊடுருவல் இஸ்லாத்தில் நுழையவாரம்பித்தது. அக்பரிடத்தில் இந்துமதமே பெரிதும் ஆதரவு பெற்ற மதமாகத் திகழ்ந்தது. ஏனெனில் அதுவே நாட்டின் குடித்தொகையில் பெரும்பாலோருடைய மதமாக இருந்தது. இராஜ்யத்தை வலுப்படுத்தும் நோக்கத்துக்காக உறிந்துக்களுக்கு ஆதரவளிக்கவும் அவர்களைத் தம்பக்கம் சாய்த்துக்கொள்ளவும் வேண்டியிருந்தது. எனவே தீபாவளி, தஷ்உறரா, ராகபூணம், சிவராத்திரி போன்ற உறிந்துப் பண்டிகைகள் பேரார்வத்துடன் கொண்டாடப்பட்டன. அரசமாளிகையில் முறைப்படி ''உவைன்'' செய்யப்பட்டது. நாளொன்றுக்கு 4 முறை சூரியன் வணங்கப்பட்டு வந்தது, அதற்குரிய ஆயிரம் திருநாமங்கள் பக்தியோடு ஜெபிக்கப்பட்டன. தோள்கட்டைச் சுற்றி பூனூல் அணியப்பட்டது. பசு மிக உயர்ந்த பிராணியாக மதிக்கப்பட்டது. அக்பரின் இஸ்லாத்துக்கு மாற்றமான போக்கை உலமாக்கள் கண்டித்ததோடு முஜத்தித் அஉற்மத் ஸரஉறந்தி என்பவர் இத்துறையில் முன்னின்று உழைத்தார்.

### இந்து-முஸ்லிம் கலப்புக் கலாசாரம்:

முகலாயர் காலத்தில் குறிப்பாக அக்பருடைய ஆட்சியின்போது இந்து முஸ்லிம் கலப்பு பரவலாக ஏற்பட்டது. முஸ்லிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் வழிமுறைகளையும் ஆசாரங்களையும் உறிந்துக்கள் பின்பற்றத் தொடங்கிய துடன், உறிந்துக்களின் கலாசாரப் பாரம் பரியங்களை முஸ்லிம்கள் பின்பற்றத் தொடங்கினர். இதனாலேயே விவாகச் சடங் குகள் கூட இரு மதத்தினராலும் ஒரேமுறை யில் கொண்டாடப்படும் முறையேற்பட் டது. முஸ்லிம்களிடமிருந்து அரபு, பார சீகமொழிகளையும் கடுதாசித் தொழிலையும் உறிந்துக்கள் கற்றுக்கொண்டதுடன் முஸ் லிம்களால் இக்காலகட்டங்களில் கட்டப் பட்ட கட்டடக் கலைகளில் மத்தியாசியா பாரசீகக் கட்டடக் கலைகளுடன் இந்துமுறை களும் பின்பற்றப்பட்டன.

இக்கால கட்டங்களில் தோன்றிய பக்தி மார்க்கங்களும் இருகலாசாரங்கட்குமிடையே நெருங்கிய தொடர்பையேற்படுத்தப் பாடு பட்டிருக்கின்றன. மதுரைக்கு அண்மையில் தோன்றிய இராமானுஜர் எனும் பக்தி மான் உறிந்துக்கள் மிகவும் குறுகிய மனப் பான்மையுடையோராய் இருப்பதைக்கண்டு மனம் வருந்தினர். உயர் குலத்தவர் தாழ்ந்த குல மக்களோடு எவ்விதத்தொடர் பும் வைத்துக்கொள்ளாமல் இருப்பதைக் கண்டு வருந்தியதுடன் மதம் என்பது கருத் தற்ற வணக்கங்கள் அல்ல, சுயநலத்தை விட்டுவிட்டுச் சகோதர மனிதனை நேசித்து வாழ்வதே எனப் போதித்தார். கபீர் எனும் ஞானி நாம் அல்லாஹவையோ இராமாவையோ வணங்கலாம், ஆனல் இறைவன் ஒருவனே, இறைவன் கற்பனை யிலும் கிரந்தங்களிலுமன்றி அன்பு மனங் களிலேயே இருக்கின்றுன் எனப் பிரசாரம் செய்தார். ஆயிரக்கணக்கான உறிந்துக் களும் முஸ்லிம்களும் இவரது சிஷ்யர்களாக மாறினர்.

இந்தியத் துணை கண்டத்தில் இஸ்லாமி யருக்கும் தமிழர்களுக்குமிடையே ஏற்பட்ட தொடர்பு எட்டு நூற்ருண்டுகளுக்கு மேலாக முஸ்லிம்கள் இந்தியாவில் ஆட்சி யாளர்களாக விளங்கியமை அரேபிய ஆண் களுக்கும் உறிந்துப் பெண்களுக்குமிடையே நடைபெற்ற கலப்புத் திருமணம் தந்தை யின் மொழி அரபாகவும், தாயின் மொழி தமிழாகவும் இருந்து இவர்கள் இருவரும் சேர்ந்து அரபுத் தமிழை உருவாக்கியமை முதலிய காரணங்களால் இந்திய முஸ்லிம் களிடம் பிரதிபலித்த இந்துமதக் கலாசா ரங்கள் சமகாலத்தில் இலங்கை முஸ்லிம் களிடமும் தாக்கத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

### ஈழத்து முஸ்லிம்கள் :

இன்றைய ஈழத்து இஸ்லாமியரை இலங் கைச் சோனகர், இந்தியச் சோனகர், மலா யர்,பாகிஸ்தானியர் என வகைப்படுத்தலாம். இலங்கைச் சோனகர் எனப்படுவோர் நேரடி அரேபியத் தொடர்பால் இங்கு வாழ்ந்து வரும் அரேபியப் பரம்பரையில் வந்தோரா வர். இந்தியச் சோனகர்களோ அரேபிய ருக்கும் இந்தியருக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பின் பரம்பரையையுடையோரா வர். இதற்கு முக்கிய காரணமாக அமைந் தது கி. பி. 750ல் ஆரம்பிக்கப்பட்ட பக் தாதின் அப்பாசிய மன்னர்களது ஆட்சி 1258ல் மங்கோலிய வீரன் குலாகுல்உறி னின் படையெடுப்பினல் வீழ்ச்சியுற்றதா கும். பக்தாதின் வீழ்ச்சியின்போது இந்தி யாவில் முதலாவது நஸ்ருத்தீன் மஹ்முத் ஷாஉற் தில்லியில் ஆட்சி செய்துகொண் டிருந்தார். பக்தாத் வீழ்ச்சியையடுத்து பாரசீகக் குடாவிலும் இந்து சமுத்திரத்தி லும் முஸ்லிம்கள் பயணம் செய்வது தடைப் படவே இந்திய முஸ்லிம்கள் இலங்கை நோக்கி வரத் தொடங்கினர். எனவே பெரும்பாலான இந்துக் கலாசாரப் பிரதி பலிப்புக்கள் இலங்கை முஸ்லிம்களிடம் 13-ம் நூற்ருண்டின்பின்பே பிரதிபலிக்க ஆரம்பித்தன. 13-ம் நூற்ருண்டின்பின் இலங்கை இந்திய கலாசார உறவுகள் வலுப் பெற இஸ்லாமிய அடிப்படைக் கோட் பாடுகளைப் பாதிப்புறச்செய்யும் வகையில் வலிமார்களுக்கும் ஷைகுமார்களுக்கும் இலங்கை முஸ்லிம்களும் மதிப்பளிக்கத் தொடங்கினர். மலாயர் எனப்படுவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டச்சுக்காரர் காலத்தில் பாதுகாப்புப் படைகளில் சேர்ந்து பணிபுரிவதற்காக இந்தோனேஷியா, மலாயா, ஜாவா முதலிய நாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்டவர்களாவார். பாகிஸ்தானியரே 1949ன் பாகிஸ்தானிய இந்தியப் பிரஜாவுரிமை சட்ட அமுலுக்குப்பின் நிரந்தரக் குடிகளாக இலங்கைப் பிரஜாவுரிமை பெற்று வாழ்வோராவர்.

**தனித்துவ சமுதாயம் :**

நெடுங்காலமாக முஸ்லிம்கள் இந்நாட்டின் விசுவாசமிக்க பிரசைகளாக ஏனைய பெரும்பான்மை இனங்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். கல்வித்துறை பொருளாதாரத்துறைகளில் பின்தங்கியவொரு சமூகமாக இவர்கள் இருந்துவந்திருக்கின்றனர். என்றாலும் மதத்தை விட்டுக் கொடுக்க இவர்கள் ஒருபோதும் தயாராக இருக்கவில்லை. போர்த்துக்கேய டச்சுக்காரர் காலங்களில் இவர்கள் சொல்லொணாத் துன்பங்களிற்கும் கஷ்டங்களுக்கும் ஆளாக்கப்பட்டனர். சிலுவைப்போரின் கசப்பான நினைவுகளால் தூண்டப்பட்ட போர்த்துக்கேயர் முஸ்லிம்களிடம் பலிவாங்கத் திட்டம் தீட்டினர். டச்சுக்காரர் காலத்தில் இதைவிட ஒருபடி கூடுதலான துன்பங்கள் இவர்களுக்கு இழைக்கப்பட்டன. காணிகளையுடமையாக்கிக் கொள்ளும் உரிமை இவர்களுக்கு மறுக்கப்பட்டதோடு கீழ்த்தரமான வேலைகள் செய்யும் பொருட்டு 1659ல் காலி மாத்தறைப் பகுதிகளிலும், 1670ல் கொழும்பிலும் இவர்கள் பணிக்கப்பட்டனர். கரையோரப் பிரதேசங்களில் இருந்து துரத்தியடிக்கப்பட்டனர். இதனால் பொருளாதார நலிவுக்கு ஆளான இவர்கள் இயல்பாகவே கல்வித்துறையிலும் பின்தங்கவேண்டியேற்பட்டது. ஆனால் மதத்தை விட்டுக் கொடுக்கவோ கிறிஸ்தவப் பெயர்களை வைத்துக் கொள்ளவோ இவர்கள் விருப்பவில்லை அப்படிச் செய்யவுமில்லை. பிரிட்டிஷார் காலத்தில் ஆங்கிலக் கல்வியை இவர்கள் வெறுப்பதற்குக் காரணமாக இருந்ததும் கிறிஸ்தவ சூழலில் அக்கல்வி அளிக்கப்பட்டதேயாகும். இவ்வகையில் இந்நாட்டில் தனித்துவமான ஒரு இடம் இவர்களுக்குண்டு. இவர்களிடம் பிரதிபலித்த இந்து கலாசார அம்சங்களிலும் கூட மத நம்பிக்கையைத் திசை திருப்பி விடக்கூடிய அடிப்படை அம்சங்களிலன்றி இரண்டு வேறுபட்ட கலாசாரங்கள் தொடர்புபடும்போது ஏற்படும் கலப்பு தவிர்க்கமுடியாதன எனும் வகையிலேயே இவற்றைக் கவனிக்கவேண்டியிருக்கின்றோம். இனி இந்து-முஸ்லிம் கலாசாரத் தொடர்புகளினால் இலங்கை முஸ்லிம்களின் கலாசாரத்தில் பிரதிபலித்துள்ள இந்து கலாசார அம்சங்கள் பற்றிக் கவனிப்போம்.

**கடவுள் கொள்கையில் இந்துசமயமும் இஸ்லாமும்.**

இந்துமதக் கொள்கையில் கடவுள் அவதாரம், அத்வைதம் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. கடவுள் 24 முறை துன்பங்களில் சிக்கி அவற்றிலிருந்து மீள அவதாரங்கள் பல எடுத்ததாக இந்துக்கள் நம்புகின்றனர். அவற்றுள் பின்வருவன முக்கிய அவதாரங்களாகக் கணிக்கப்படுகின்றன:

(1) மச்சவதாரம் - வேதங்களை அபகரித்துக் கொண்டவனிடமிருந்து அவற்றை மீட்க மீன் அவதாரம் கொண்டது.
(2) கூர்மவதாரம் - கடலைக் கடைந்து அமிர்த மணத்தையெடுக்கும் பொருட்டு கொண்ட ஆமையவதாரம்.
(3) வராகவதாரம் - பன்றி உருவெடுத்தல்.
(4) நரசிங்க அவதாரம் - சிங்க முகமும் மனித உடலும் கொண்டது.
(5) வாமனவதாரம் - குள்ள அவதாரம்.
(6) பரசுமாவதாரம் - பழி தீர்த்த அவதாரம்.
(7) ராமாவதாரம் - ராமனைக் கொண்டு சீதையை மீட்டவதாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும் பொருள் அனைத்திலும் இறைவனைக் காணும் பண்பையே இந்துசமயம் அத்வைதம் எனக் குறிப்பிடுகின்றது. ஆனுல் இஸ்லாத்தின் கடவுட் கொள்கை இதற்கு முற்றுமே மாற்றமானதொன்று. இதுபற்றி அல்-குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

(நபியே! மனிதர்களை நோக்கி) நீர் கூறும்: அல்லாஹ் ஒருவன்தான். (அந்த) அல்லாஹ (எவருடைய) தேவையுமற்றவன் (யாவும் அவன் அருளையே எதிர்பார்த்திருக்கின்றன) அவன் (எவரையும்) பெறவுமில்லை. (எவராலும்) பெறப்படவுமில்லை. (ஆகவே அவனுக்குத் தகப்பனுமில்லை. சந்ததியுமில்லை) தவிர அவனுக்கு ஒப்பாகவும் ஒன்றுமில்லை (112: 1-4).

இறைவனுக்கு உருவம் கற்பிப்பது, இறைவனது படைப்புகளுக்குள் அவனைக் காண்பது போன்றன பிற்காலத்தில் இந்துசமய செல்வாக்கினுல் இஸ்லாத்தில் நுழைந்தன. ஆரம்பகால இஸ்லாமிய சூபிகளிடம் கூட இவ்வாருன கருத்துக்கள் காணப்படவில்லை. இஸ்லாத்தின் பரம்பலோடு இந்துமத ஞானிகளின் நடைமுறைகள் இஸ்லாமிய சூபித்துவத்தோடு கலக்க ஆரம்பித்ததுடன்தான் இவ்வாருன கருத்துக்கள் இஸ்லாத்துள் புகுந்தன. இதற்கு உதாரணமாகப் பின்வரும் தத்துவங்களை நோக்கலாம் இரண்டும் ஒன்றிற்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

சூபிகளின் தத்துவம்: அல்லாஹ்வின் மூச்சில் முஹம்மது மறைந்திருந்தார். முஹம்மதுவின் மூச்சில் ஆதம் மறைந்திருந்தார். ஆதம் என்பது மண்ணுல் படைக்கப்பட்ட (லிபர்ஸ்) உடை என்பதாகும். 'நூரே முஹம்மது' ஆதம் எனும் உடையை அணிந்து கொண்டதால் சூரத்தே முஹம்மது ஆயிற்று இதுவே மனிதன். இதனையே உறிந்து ஞானிகள் சிவன் சுவாசத்தில் நாராயணன் மறைந்திருந்தார். நாராயணன் சுவாசத்தில் ஆதிபிதா மறைந்திருந்தார். ஆதிபிதா என்பது மண்ணுல் செய்யப்பட்ட உடை. அந்த உடையை சிவன் தரித்துக் கொண்டதால் மங்களரூபமுடைய மனிதன் உருவத்தைப் பெற்ருன் என்கின்றனர். குணங்குடிமஸ்தான் சாஹிப் போன்ரேரின் பாடல்களில் இவ்வாருன கருத்துக்களைப் பரவலாகக் காணலாம்.

## திருமண சம்பிரதாயங்கள்.

இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்களில் அநேகமான இந்து கலாசார அம்சங்கள் இடம் பெற்றிருப்பது அவதானிக்கக்கூடியதொன்ருக இருக்கின்றது. இஸ்லாத்தில் திருமணம் என்பது மிகவும் எளிமையாக நடைபெறவேண்டிய ஒரு நிகழ்ச்சி எனினும் இந்துக்களின் திருமண சம்பிரதாயங்களில் முக்கியத்துவம் பெறும் தாலி, சீதனம் போன்றனவும் இன்றைய இலங்கை முஸ்லிம் திருமணங்களிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. தாலி இல்லாத திருமணம் ஒரு திருமணமேயல்ல என்றளவுக்கு இன்று இது முஸ்லிம்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. மணமகளுக்குத் தாலி அணிவிக்கும் சம்பவம் சில பணக்கார வீடுகளில் மிகவும் கோலாகலமாக நடத்தப்படுவதுண்டு. இது அணிவிக்கப்படும்வரை மணமகள் அலங்கரிக்கப்பட்ட ஒரு ஆசனத்தில் சிங்காரித்து வைக்கப்படுவாள். சில வேளைகளில் மணமகனிடமிருந்து தாலியைப் பெற்று அவனது சகோதரியோ நெருங்கிய பெண் உறவினரோ மணமகளின் கழுத்தில் அணிவித்துவிடுவதுமுண்டு. மணமகளது வீடுவரை தாலிப் பெட்டியை மணமகனது மைத்துனன் எடுத்துச் செல்வார்.

மணமகளை மணமகன் அடைவதற்குமுன் அவளுக்கு ஒரு தொகைப் பணத்தையோ பணத்தின் பெறுமதிக்கான ஒரு பொருளையோ கொடுப்பது இஸ்லாமிய திருமணத்தின் ஒரு முக்கிய அம்சம். இது ''மஹர்'' என அழைக்கப்படுகின்றது. இதன் அவசியத்தை அல்-குர்ஆன் வலியுறுத்திக் குறிப்பிடும்போது அவர்களிடம் நீங்கள் சுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்தால் அவர்களுக்குக் குறிப்பிட்ட மஹரை அவர்களிடம் (குறைவின்றி) நீங்கள் கொடுத்து விடுங்கள். எனினும் மஹரைக் குறிப்பிட்டதன் பின் (அதனைக் குறைக்கவோ கூட்டவோ) இருவரும் சம்மதப்பட்டால் அதனால் உங்கள்மீது யாதொரு குற்றமுமில்லை (4:24) எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் இன்று முறையாக இது கொடுபடுவதில்லை. இதற்கு மாற்றமாக மணப் பெண்ணிடம் இருந்தோ அவளது பெற்றோர் பாதுகாவலரிடம் இருந்தோ சீதனம் எனும் பேரில் மணமகன் பெற்றுக் கொள்ளும் ஒரு தொகைப்பணம் நகைநட்டு வீடுவளவு என்பனவே இன்றைய இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்களில் முக்கிய இடம் பெற்றுக் காணப்படுகின்றன. இஸ்லாத்தின் ஆரம்ப காலங்களில் இவ்வழக்கம் அறவே இருக்கவில்லை. இன்றுகூட இவ்வழக்கம் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வாழும் முஸ்லிம்களிடம் பிரபல்யம் பெற்று வழக்கில் இருந்து வருகின்றது. தமிழ் கலாச்சாரத்தின் இன்னொரு பிரதிபலிப்பே இது. சமுதாயத்தின் பெண்பகுதியினருக்கு முறையான கல்வி அளிக்கப்படாததும் முஸ்லிம் பெண்களில் பெரும்பாலானோர் தொழிலில் ஈடுபடாதோராக இருப்பதும் சீதனம் தாண்டவமாடக் காரணம் என்று முன்பு உணரப்பட்டது. படித்த பெண்களுக்குத் தகுதியான துணையைத் தேடும் பிரச்சினை இப்போது உருவாகியிருப்பதால் சீதனத்திற்குத் தற்போது இன்னும் ஒருபடி கூடுதலான மவுசு ஏற்பட்டிருக்கின்றது. சீதனத் தொகையை நிர்ணயிப்பதில் இடத்துக்கிடம் மாற்றமாக இருந்தாலும் பொதுவாக இன்று தீவின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் முஸ்லிம்களிடம் இவ்வழக்கம் இருந்து வருகின்றது.

நிகாஹ் எனப்படும் திருமணச் சடங்குகள் மிகவும் எளிமையான முறையில் இஸ்லாத்தில் ஆரம்ப காலத்தில் பள்ளிவாயில்களில் வைத்தே நிறைவேற்றப்பட்டன. அரேபியத் தீபகற்பத்தைத் தாண்டி இஸ்லாம் உலகின் ஏனைய பகுதிகளில் பரவத் தொடங்கியதோடு அவ்வந் நாடுகளில் காணப்பட்ட கலாசார அம்சங்கள் பல இஸ்லாத்தில் நுழைந்தன. ஐரோப்பியர்களைப் பின்பற்றி வந்த முஸ்லிம்கள் திருமணச் சடங்குகளை ஹோட்டல்களில் ஏற்பாடு செய்து நடாத்தி வருவது இதற்கு ஒரு உதாரணமாகும். இதே போன்றுதான் நாம் ஏற்கனவே கவனித்த சில இந்துக் கலாசார அம்சங்களும் முஸ்லிம் திருமணங்களில் இடம்பெறலாயின. இவை மாத்திரமன்றி மணமகனால் மணமகளுக்கு அளிக்கப்படுகின்ற பெறுமதி வாய்ந்த கூறைச்சேலையும் தமிழ்க் கலாசாரத்தைப் பின்பற்றி முஸ்லிம்களின் திருமணப் பாரம்பரியங்களில் பின்பற்றப்படும் ஒரு முறையாகும். மணமகனையும் மணமகளையும் ஒன்றாக வைத்து ஆராத்தி எடுத்தல் கூட இந்து கலாசாரப் பிரதிபலிப்பே. மணமகள் மணமகனிடம் செல்லும்போது பால் எடுத்துச் செல்லுதல் தீன் பண்டங்கள் செய்து பெண்வீட்டாரால் மணமகன் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சீர் எனவழைக்கப்படும் முறை கூட இந்து கலாசாரத்தின் ஒரு பிரதிபலிப்பே.

கூடு எடுத்தல்.

தமிழ் மக்கள் தேர் இழுப்பது போன்று முஸ்லிம்களிடம் கூடு எடுக்கும் பழக்கம் இருந்து வருகின்றது. திருத்தலங்களைத் தரிசித்து இந்துக்கள் நேர்த்திக்கடன் வைப்பது போன்ற நிகழ்ச்சிகள் முஸ்லிம்களிடமும் இடம் பெற்று விட்டன. இஸ்லாத்தில் இதற்கு எவ்வித அனுமதியும் இல்லை. இவ்வாறு நேர்த்திக்கடன் வைக்கும் இடங்களில் கதிர்காமம், ஜெய்லானி, வேர்விலை, கெச்சிமலை, கொழும்பு தெமட்டமரத்தடிப் பள்ளிவாயில் போன்றன விளங்குகின்றன, இஸ்லாமிய ஷரீஅத்துக்கு மாற்றமான முறையில் ஆண்களும் பெண்களுமாக ஒன்று சேர்ந்து நேர்த்திக்கடன் நிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். மேலும் ஸியாரங்களுக்குப் பக்கத்தில் குத்து விளக்குப்பற்ற வைத்தல், சந்தனத் திரிகொழுத்துதல் போன்றனவும் சுபகாரியங்களின்போது பாற்சோறு சமைத்தல் பால்பொங்குதல் முதலியனவும் இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்களைப் பின்பற்றி இலங்கை முஸ்லிம்கள் நெடுங்காலமாகக் கடைப்பிடித்து வரும் கலாசாரப் பாரம்பரியங்களே.

மொழிச் செல்வாக்கு

எல்லாவற்றிற்கும் மேலாக மொழிரீதியான உறவு இவ்விரு இனத்தினரையும் ஒன்றிணைக்கக் கூடியதொரு பாலமாகப் பண்டு தொட்டு நிலவி வருகின்றது. மதத்தால் இனத்தால் வேறுபட்டாலும் மொழியால் இவர்கள் ஒன்றுபடுகின்றனர். இலங்கை முஸ்லிம்கள் தாய்மொழி — அவர்கள் தீவின் வடக்கில் வாழ்ந்தாலும் தெற்கில் வாழ்ந்தாலும் தமிழாகவே இருக்கின்றது. இதற்குக் காரணம் இலங்கையின் பெரும்பான்மை இனத்தினின்றும் தம்மைப் பிரித்துக்காட்டுவதற்கும் அதன்மூலம் தமது மத, கலாசார பாரமபரியங்களை காப்பாற்றிக் கொள்வதற்குமே எனின் மிகையாகாது. வடக்கில் அல்லது கிழக்கில் தமிழில் கதைப்பது எழுதுவது என்பன சாதாரண விடயமே. ஆனால் நூற்றுக்கு நூறு சிங்கள சகோதரர்கள் வாழும் பகுதிகளில் தமிழில் பேசுவது எழுதுவது தமிழ்ப் பத்திரிகைகளைப் படிப்பது என்பது ஓரளவு சிரமமான காரியமே. ஆனால் முஸ்லிம்கள் சிங்களப் பகுதிகளில் எல்லாம் வீட்டு மொழியாகவும் தங்களுக்குள் தொடர்பு மொழியாகவும் தமிழையே பாவித்து வருகின்றனர். இது மாத்திரமன்றி பெரும்பாலான முஸ்லிம் மாணவர்களின் போதனு மொழியாகக்கூடத் தமிழே விளங்கி வருகின்றது. சிங்களமொழி உத்வேகம் 1956ன் பின்னே முஸ்லிம்களிடம் தளிர்விடத் தொடங்கியது. அதற்கு முன் நூற்றுக்கு நூறு வீதம் தமிழ்மொழியே போதனுமொழியாக இருந்தது. 1956ம் ஆண்டின் பின்னேற்பட்ட சமூக மாற்றம் தனிச் சிங்கள சட்ட அமுல், அரசாங்க உத்தியோகங்களில் உறுதிப்படுத்துவதற்காக சிங்கள மொழித்தேர்ச்சி கோரப்பட்டமை போன்றவற்றின் காரணமாகவே முஸ்லிம் பெற்றோர்களில் பலர் - குறிப்பாக தென்மேல், மத்திய மாகாணங்களைச் சேர்ந்தோர் தமது பிள்ளைகளைச் சிங்கள மொழியில் பயிற்றுவதில் ஆர்வம் கொண்டனர். அல்ஹாஜ் கலாநிதி பதியுத்தீன் மஹ்முத் அவர்கள் கல்வி மந்திரியாகவிருந்த சென்ற ஆட்சிக்காலத்தில் சிங்கள மொழியின் அவசியம் அவரால் வலியுறுத்தப்பட்டாலும் முஸ்லிம் மாணவர்களின் போதனு மொழியாக சிங்களத்தைப் புகுத்த முனைந்து அவர் தோல்வியே கண்டார். முஸ்லிம் மகாவித்தியாலயங்களிலும் மத்திய மகாவித்தியாலயங்களிலும் சிங்களப் பிரிவு தனியாக ஏற்படுத்தப் பட்டாலும் போதிய ஆசிரியர்களின்மை வசதியீனங்கள் காரணமாக இப்பிரிவுகள் உரிய முறையில் செயற்பட முடியாமற் போயின. இதுவரை தமிழ்மொழி மூலம் கற்றுவந்த மாணவர்கள் துடீரென சிங்கள மொழிமூலம் கற்க முனைந்தபோது மொழியாற்றலின்மையால் பரீட்சைகளில் சித்தியடையத் தவறினர். சிலர் தனிச்சிங்களப் பாடசாலைகளுக்குத்தமது பிள்ளைகளை அனுப்பினரெனினும் முஸ்லிம் மாணவர்களிடம் சிங்கள மோகம் கூடிக்கொண்டு வருவதைக் கண்ட பாடசாலை நிர்வாகிகள் முஸ்லிம் மாணவர்களுக்குத் தொடர்ந்து இடம் தர மறுத்தனர். ஒரு சில பாடசாலைகளில் புதிதாகத் திறக்கப்பட்ட சிங்களப் பிரிவில் முஸ்லிம் மாணவர்களின் தொகையைவிட சிங்கள மாணவர்களின் தொகை கூடிற்று.

முஸ்லிம்கள் தமிழைத் தாய்மொழியாகவும் போதனு மொழியாகவும் ஆக்கிக் கொண்டதோடு மாத்திரமன்றி தமிழின் வளர்ச்சிக்காகப் பல அரும் சேவைகளையும் ஆற்றி வந்திருக்கின்றனர்.

முஸ்லிம்களின் மொழித்தொண்டு

சமண பௌத்தர்கள் ஆற்றிய தொண்டினுல் திருக்குறள், மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் தமிழில் உருவடுத்தன. மேனுட்டில் இருந்து வந்த கிறிஸ்தவர்களின் தொண்டினுல் தமிழில் வசன நூல்களும் விஞ்ஞான நூல்களும் அகராதிகளும் தோன்றின. இதேபோன்று முஸ்லிம்களுக்கும் தமிழுக்கும் இடையில் காணப்பட்ட நெருங்கிய தொடர்பினுல் கன்னித்

தமிழ்க் காப்பியங்கள், கதைநூற்கள், செய் யுட்கள், புராணங்கள், படைப்போர்கள், கும்மிகள், தாலாட்டு, மசாலா, கலம்பகம் முதலிய புதிய பல படைப்புக்கள் தமிழில் தோன்றின. இஸ்லாமியத் தமிழ்ப் புலவர் களுக்கு செய்யுள் யாப்பிலக்கணங்களைப் பேணும் அதே வேளை சமயமரபையும் பேண வேண்டிய பொறுப்பும் இருந்தது. இவ் வகையில் 2 மரபுகளையும் செவ்வனே பேணித் தமிழ்ப்பணி செய்த இஸ்லாமியப் புலவர்களின் தொண்டு போற்றற்குரியதே. கடவுள் வாழ்த்துப் பாடலுக்குப் பதிலாக ஏகத்துவம் இவர்களது பாடல்களில் தொனிக்கக்கூடியதொரு முக்கிய அம்சமாகும்.

பிரபந்தங்கள் பாடுவதிலும் முஸ்லிம் புலவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர். பரிசில் பெற்ற பாவலன் ஒருவன் இன்னொரு புலவனைத் தான் பரிசில் பெற்ற மன்னனிடம் செல்லுமாறு வேண்டுவதையே ஆற்றுப்படுத்தல் அல்லது ஆற்றுப்படை எனத் தமிழ் மரபு கூறுகின்றது. இவ்வாறு தமிழில் தோற்றமெடுத்த ஆற்றுப்படை நூல்களில் மதுரைச் சங்கத்து ஆற்றுப்படை நூலும் ஒன்று. இதை இயற்றியவர் குலாம்காதிர் மதுரை நகர் நாவலராவார். இதில் மதுரைச் சங்கச் சிறப்பு பாண்டிய மன்னன் புகழ் மதுரை நகர்ச் சிறப்பு என்பன வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.

பிள்ளைத்தமிழ் நூல்கள் இயற்றுவதிலும் முஸ்லிம் புலவர்கள் கைதேர்ந்து விளங்கினர். நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ், முஹியிதீன் ஆண்டகை பிள்ளைத் தமிழ், பாத்திமா நாயகி பிள்ளைத்தமிழ் என ஆண்பால் பெண்பால் பிள்ளைத்தமிழ் நூல்கள் பலவற்றை இயற்றியிருக்கின்றனர். அந்தாதி பாடுவதிலும் இவர்கள் சளைத்தவர்களல்லர் என்பதை நிரூபிப்பது போன்று இப்ருஹீம் புலவரின் திருமதீனத்தந்தாதி விளங்குகின்றது. முருகப் பெருமானைப் புகழ்ந்து பாடிய அருணகிரிநாதரின் திருப்புகழைத் தழுவி முஸ்லிம் புலவர்களும் முஹம்மது நபியவர்களைப் புகழ்ந்து திருப்புகழ் பாடியிருக்கின்றனர். திருத்தலங்களைப் புகழ்ந்தும் முஸ்லிம் புலவர்கள் திருப்புகழ் பாடியிருக்கின்றனர். வேர்விலை கெச்சிமலையில் அடங்கியிருக்கும் அஷ்ஷெய்க் அஷ்ரப் வலியுல்லா அவர்களைப்புகழ்ந்து மக்கூனில் வாழ்ந்த அப்துல் ஹமீத்மரிக்கார் பாடியுள்ள பாடல்கள் இவ்வினத்தைச் சேர்ந்தவையே. முனாஜாத்துப் பாடலுடன் ஆரம்பிக்கும் இவரது பாடல்களில் இலங்கை, சைலான் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு ஹஸ்ரத் ஆதம் (அலை) அவரது பொற்பாதம் பதிந்த ஆதமமலை இங்கு இருப்பதால் என்னவோ தாங்களும் இங்குவந்து குடியேறினீர்கள் என வலியுல்லாவை விழித்துக் கேட்பதாக இருக்கின்றது.

கும்மியாடல் என்பது பெண்களுக்கேயுரிய ஒருவகை விளையாட்டு. பெண்கள் கூடிநின்று கைதட்டி ஆடிப்பாடும் வகையிலான இவ்விளையாட்டின்போது பாடப்படுவதற்கான பாடல்களையும் முஸ்லிம் புலவர்கள் யாத்துச் சென்றுள்ளனர். பெரியோர்களது ஜீவிய சரிதைகளைப் பொருளாக வைத்து இவ்வகையிலான பாடல்களை முஸ்லிம் புலவர்கள் யாத்துச் சென்றுள்ளனர். உதாரணமாக மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஜீவிய சரித்திரக்கும்மி, ஷய்குமுஸ்தபா வலியுல்லா காரண அலங்காரக் கும்மி, என்பனவற்றைக் குறிப்பிடலாம். முஸ்லிம் புலவர்களால் இயற்றப்பட்ட தாலாட்டுக்களில் ஞானத் தாலாட்டு, சுகானந்தத் தாலாட்டு, மீரான் தாலாட்டு, மணிமந்திரத் தாலாட்டு முதலியன முக்கியம் பெறுகின்றன. பாக்கள் மாலை போன்று கோர்க்கப்பட்டு இயற்றப்படுகின்ற நூல் மாலைபிரபந்தம் எனவழைக்கப்படுகின்றது.

இவ்வாறான மாலைப் பிரபந்தங்களில் முதுமொழிமாலை, அபூஷப்குமாலை, றசூல்மாலை, முபாரக்மாலை, ஒலியத்துமாலை என்பன இன்றும் முஸ்லிம்களிடம் பிரபல்யம் பெற்றிருக்கின்றன. இசைத்தமிழ் இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களில் ஏசல் என்பதும் ஒன்று. காத லைக் கருப்பொருளாக வைத்து பாடப் படுபவை. ஆனால் முஸ்லிம் புலவர்கள் மதப் பெரியார்கள் பேரில் கொண்ட அன்பை வெளிப்படுத்தக் கூடிய ஒரு இலக்கிய வடிவ மாகக் கொண்டு இதைப் பயன்படுத்தி வெற்றி கொண்டனர். முனாஜாத்து எனும் இன்னொருவகை இலக்கிய வடிவம் மாணிக்க வாசக சுவாமிகளின் நீத்தல் விண்ணப்பச் செய்யுள்களை ஒத்தன. கிஸ்ஸா என்பது கதைருபத்திலான ஒரு இலக்கிய வடிவமாக வும் மஸ்அலா என்பது கேள்வி—பதில்களை யுள்ளடக்கிய ஒரு வகை இலக்கிய வடிவ மாகவும் காணப்படுகின்றன.

தமிழ் மக்கள் சித்தர்களுடைய பாக் களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கின் றனரோ அதே போன்று இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் மெஞ்ஞானிகளின் பாடல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகின்றது. தாயுமா சுவாமிகளின் பாக்கள் தமிழ் மக்களது உள்ளத்தை உருக்கிவிடும் அளவுக்கு குணங்குடிமஸ்த்தான் சாஹிப் அவர்களுடைய பாக்கள் இஸ்லாமியருடைய உள்ளங்களை உருகச் செய்யக் கூடியனவாக இருக்கின்றன. மகாகவி பாரதிக்கு முன்பே தமிழ்ப்பாக்களில் எளிமையை புகுத்தியவரா கவும் மஸ்தான் சாஹிப் அவர்கள் மதிக்கப்படுகின்றார்.

தமிழ் மொழிக்கு வளம் சேர்த்த முஸ்லிம் புலவர்கள் வரிசையில் இலங்கையில் தோன்றிய புலவர்களும் குறிப்பிடத்தக்க வோர் இடத்தை வகிக்கின்றனர். பேருவலை ஷய்குமுஸ்த்தபாவலியுல்லாஉற், யாழ்ப் பாணம் சுலைமான்லெப்பைப் பாவலர், பதுருத்தீன் புலவர், கண்டி அருள்வாக்கி அப்துல் காதர் புலவர், கற்பிட்டி அப்துல் மஜீத், கொழும்பு ஷெய்குமுஉறம்மது அப் துல்லாஉற் போன்றோர் இவர்களுக்குள்ளே சுடர்விட்டு பிரகாசிக்கும் புலவர் மணிகளா கத் திகழ்கின்றனர். ஆரம்ப காலத்தில் இவர்களனைவரும் தமிழில் சிந்தித்து அறபு லிபியில் எழுதும் வழக்கத்தையே மேற் கொண்டிருந்தனர். இதனால் அறபுத்தமிழ் எனும் ஒரு புதுநடை தோன்றியது. முஸ்லிம் புலவர்களும் எழுத்தாளர்களும் கடந்த காலங்களில் தமிழ் இலக்கியத்துக்கு மகத் தான தொண்டு புரிந்திருக்கின்றனராயினும் ஆரம்ப காலத்தில் அவர்கள் அறபு எழுத்தி லேயே அவற்றை எழுதி வந்த காரணத் தினால் முஸ்லிம் அல்லாதார் அவ்விலக் கியங்களைப்பற்றி அறியாதிருந்தனர். முஸ் லிம் இலக்கிய நூல்கள் தமிழ் எழுத்துக் களில் ஆக்கப்பட்ட காலத்திலும் கூட அவற்றுள் பெருவாரியான அறபுப்பதங்களும் பார்ஸிப்பதங்களும் இடம் பெற்றமையால் முஸ்லிம் அல்லாதார் மத்தியில் அவை செல் வாக்கைப் பெறவில்லை. மேலும் பெரும்பா லான இலக்கிய நூல்கள் மதத்தை முற்றி லும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தமை யால் முஸ்லிம் அல்லாதாருக்கு அதில் சிரத்தை ஏற்படவில்லை. எனவே இந்த சூழ்நிலையில் அவர்கள் இஸ்லாமிய இலக்கியத் தில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்றோ அல்லது விரிந்த தமிழ் இலக்கியப் பரப்பில் எம் இலக்கியத்துக்குத் தக்கதோர் அந்தஸ்த்து அளித்திருக்க வேண்டும் என்றோ நாம் எதிர்பார்ப்பது பொருத்தமுடைய தாகாது எமது இலக்கியத்தை நாமும் போற்றிப் பிறரும் அறியச் செய்யும் பொ றுப்பு நம்முடையதாகும்.

> The five hundred thousand Muslims in the North and East must necessarily unite and come under an All-Island Muslim political party and enter into such understandings with the TULF as will enable us to establish our political identity in the Regional or Provincial Council or Councils, to prevent alienating our land-holdings and to have absolute justice in the future allocation of land within the region. Most of the Muslims in these areas are cultivators; nothing is more precious to them than their land. The understandings also must include provincial employment in the internal administrative services, including defence (police force) and adequate accommodation in all other activities.
>
> On the other hand, Muslims living in other areas must associate themselves with our Sinhala brothers and extend to them all possible help and associate for the development of their respective region or province, with our political identity established in the regionnal or provincial councils, through our political party.[25]

What then would be the constitutional framework which would meet the above demands? Whenever articulate Tamil political opinion has been confronted with this question, they respond with a reference to the Tamil speaking character of the Muslims implying thereby that linguistic unity is politically sufficient to assure constitutional security. It is seldom realised that this is an assumption based on the ideology of linguistic nationalism. As has been shown earlier, the emergence of the concapt of a Tamil speaking nation in Sri Lanka politics was in response to the language-based nationalist stance of the Sinhalese, which often denied a due place for minorities within the polity. It

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

should not be forgotten that this linguistic plane of Sinhala nationalism is only one level, of that consciousness; at a slightly deeper level, it has also a religious basis. Thus it has bee Sinhala-Buddhist in character.

The Tamils should not fail to realise that in the Sri Lankan Muslim psyche, the Tamil insistence on language is only an attempt on the part of the Tamils not to come to terms with the vital aspect of Muslim identity - viz. its religious character. As practitioners of a religion which has a well defined social policy (regulated through its religious laws), the Muslims, in situations of multi-ethnic existence, have always been insistent on preserving that socio-religious identity and have used Arabic as their main source of religio-cultural identity. It is not that Arabic is their mother tongue. But as the language of the Qur'an their religious text, which constitutes the framework of reference for their lives as believers in Islam, it is Arabic that is the foundation of their cultural identity. That is why, in the case of Tamil, they had to evolve a corpus of writing in Arabic Tamil (i.e. text in Tamil language written in Arabic script). [26] This ensures the exclusive continuity of both Arabic and Tamil in their lives.

Muslim fears in this question are, it should be admitted, justifiable; for there has always been a definite level of Hindu (Saiva) - Tamil consciousness among the Tamils which has been dominant in Tamil politics. This consciousness has always emphasised the "chosen" character of the Jaffna man for the continuity of the Saiva-Tamil heritage. And given the caste hierarchy that this ideology presume, it is well within reasonable limits of presumption for any Muslim in Sri Lanka, who, no doubt, speaks Tamil as his language, to be suspicious of the religio-cultural implications of the concept of a Tamil speaking nation.

It should be realised that it was within the historical context of Sri Lanka that this fear has been expressed. We must not forget the history of politicization which has led the Sinhalese to go from Sinhala Only to Sinhala Buddhism and the Tamils from Saiva-Tamil ideology to Tamil Unity.

It is therefore absolutely important that no opportunity is given for even the slightest doubt about the secular nature of the polity within which the Tamils and the Muslims are going to share political power within the Sri Lankan Tamil regions. The secular character of the arrangement should be well guaranteed, so as to assure the continuity of the religio-cultural specificities of each group. It is the duty of the Tamil political groups to ensure this.

The concept of "an autonomous region" as it is known in the USSR, could, if creatively applied, show a way out.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NOTES AND REFERENCES

1. This is a revised version of the paper read at the Social Scientists Association in June 1985. The author wishes to thank Charles Abeysekera and Newton Gunasingha for their criticisms of the first draft. The author is greatly indebted to Qadri Ismail for some of the important documents referred to in this paper.

2. In 1984-85 the government had an All-Party Conference (in which SLFP did not participate) to work out a solution for the ethnic crisis. There was a set of proposals callad Annexure 'C' which had emerged out of the discussions held by A. Parthasarathy in Colombo and J.R. Jayewardene and H.W. Jayewardene in New Delhi. (Annexure 'A' comprised "press communiques, releases, interviews, etc." and Annexure 'B' "Matters that have been suggested for the formation of an agenda by the All-Party Conference.)

   Annexure 'C' spoke of "Regional Councils", but a close study of that document reveals that hardly any distinction was made between a "region" any a "province". Whereas the first proposal (1) ("The District Development Councils in a Province be permitted to combine into one or more Regional Councils if they so agree by the decisions of the Councils and approved by Referendum in that district") seems to imply that the region is beyond provincial limits, the ninth proposal ("The armed forces of Sri Lanka will adequately reflect the national ethnic position. In the *Northern and Eastern Regions,* the Police forces for internal security will also reflect the ethnic composition of *these regions*") is quite categorical that the region does not mean the bringing together of the Northern and the Eastern provinces.

   Such has continually been the ambiguity on this vital point, which continues to be the prime obstacle to a meaningful solution.

3. "An Appeal to the Muslims of the District of Batticaloa and Amparai" (unsigned and undated). Though the name of the person or persons who issued this pamphlet are not mentioned, the use of the state apparatus in distributing the pamphlet and the print, especially the letter types used, left no one in doubt as to its origin.

4. Report of the Fact Finding Committee on the Tamil-Muslim Conflict in the Eastern province, Department of Muslim Affairs - Colombo April 1985. This is a very interesting document. It records as its finding that apart from being the common vehicle of oral communication, Tamil strangely enough seems to have forged no tangible links between these two communities. Except for economic exchanges born of compelling mundane realities, there appears to be hardly any cultural cross pollination or social intercourse. "Living together, they have grown up as strangers" (p. 20).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This contradicts known facts about the social organisation of the Eastern province Muslims they share the *Kudi* kinship systems with the Tamils and their literary expression in oral literature, the much celebrated Batticaloa Tamil folk songs, are largely the expression of Muslims; in written literature, Muslim writers from Batticaloa have produced some major Islamic works in Tamil (Sheriffdeen) and have contributed to modern Tamil literature (Abdul Samad, Namtur Kottan and others).

5. This letter signed by A.L.M.Hashim, Hony. General Secretary of the All Ceylon Muslim League had been sent to the Minister from Colombo on 8-5-1985. The rest of the letter refers to the incidents that led to the hartal and its aftermath of Tamil-Muslim clashes and calls for "immediate action to save the Eastern province from a holocaust".

6. This letter is signed by M.I.M. Mohideen, President of the Amparai District Federation of the All-Ceylon Muslim League. It refers to the manner in which land holding of Muslims have been reduced in Amparai. It also states that "Tamil should be the language of the administration in Amparai district as provided in the constitution ... but the Kacheheri continues to administe in Sinhala against the will of more than 63% of the Tamil-speaking people of the district which was supposed to be the only Muslim majority administrative district in this country". (page 2 para 8).

7. R. Sivachandran, Ilankayil Tamil Paramperiyappiratecaltin Kutitto Kaippanpukalum porulatara Valankalum - Jaffna 1981.

8. For Muslim social organisation in Tamil areas, see Dennis B. McGilvray: *Caste and Matriclan structure in Eastern Sri Lanka* in Modern Ceylon Studies Vol. 4: 1&2 January and July 1973 Peradeniya, Sri Lanka Nur Yalman – *Under the Bo-Tree*, Studies in Caste and Kinship in the Interior of Ceylon-Berkeley 1967.

9. K.D.G. Wimalaratne - *Muslims in Sri Lanka (Ceylon) under British Rule (1796-1948)*. Paper read at the seminar on Muslim Minorities in Sri Lanka. South and South East Asia Jan. 5-9-1984 Naleemiah Institute of Islamic Research, Beruwela, Sri Lanka.

10. Such a statement was made for the first time in 1885 by P. Ramanathan; M. C. Siddi Lebbe, who is credited with having first brought about a solidarity consciousness among the Muslims, through his journal "Muslim Nesan" and through his activities in the field of education, challenged the views of Ponnambalam Ramanathan in his journal.

See also - A.M.A. Azeez. *The West - Reappraised* Colombo1961.

It is interesting to note that Siddi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lebbe had in his journal, opposed the activities of Ramanathan since the latter's statement. Reading through the old issues of *Muslism Nesan*, one cannot detect any sense of an anti-Tamil spirit which later becomes a feature of Muslim-Tamil relationships.

11. I.L.M. Abdul Azeez - *A criticism of Mr. Ramanathan's Ethnology of the 'Moors' of Ceylon* (originally published in 1907) Reprint - Colombo - 1957 p. 2

The timing of the reprint is significant; in 1957 language was a hot political issue and the Muslims had to take a stand on it.

The Sri Lankan Muslims call themselves Sonahar (and Moors, as they were referred to first by the Portuguese) and had been rather careful about their "Sonahar" identity for it marks them off from the Coastal Muslims who had come from Tamilnadu primarily in pursuit of trade. These 'Coastal Muslims' are referred to as 'Sampaikarar' and till recently had not been considered equal of the leading Moor families. Of late these distinctions have become blurred. Anagarika Dharmapala's main target of attack was these Coastal Muslims. This 'enculturation' of Coastal Muslims with the local Sonaha population is seen today at the level of Muslim leadership too. M.H. Mohamed, Minister of Transport in the present Cabinet and M.P. for Borella comes from a leading coastal Muslim family.

12. For a discussion of the Riots of 1915, K.M. de Silva - *A History of Sri Lanka*, London 1981.

K.D.G. Wimalaratne – loc. cit., Kumari Jayawardena – *Ethnic and Class Conflict in Sri Lanka*. Centre for Social Analysis - Colombo 1985;

*"The 1915 Riots in Ceylon: A Symposium"* Journal of Asian studies XXIX(2) 1970.

13. K.M. de Silva, op. cit. p. 381

14. The occasion was a discussion on expanding the scope of existing Tamil language text books to include chapters depicting Muslim life. It was thought that the Tamil readers were too Tamil oriented and did not provide a sense of relevance to Muslim children. The present writer was present at the meeting. Another important statement made by that minister is worthy of great attention: "The Tamil language in this country is shared by two different communities with two different cultural backgrounds".

15. K.M. de Silva - *Muslim leaders and the Nationalist Movement*. Paper presented to the Seminar on Muslim minorities in Sri Lanka, South and South East Asia-Beruwela, January 5-9, 1984.

16. Mohamed M. Zafar - *Sir Razeek Fareed* (Tamil) Colombo, 1982 p.107

17. Resolutions of the ITAK at its first Convention. See Ilankai Tamil

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasu Kadchi - Silver Jubilee Volume – Jaffna - 1974. Section 4-p. 7.

18. Entry on CEYLON in The Encyclopaedia of Islam (New Edition) Vol. II F 23 Leiden and London 1960. "Tamil is the home language of the great majority of the Muslims of Ceylon".

19. K.M. de Silva - *Muslim Minority in a Democratic Polity - Reflections on a theme.* Seminar on Muslim in Sri Lanka, South and South East Asia, Beruwela - 1984.

20. A.C.L. Ameer Ali. *Islamic Revivalism (2) The roots of Conservation* in *Lanka Guardian* Vol. 5 - No. 16, December 15, 1982 - Colombo.

21. K.M. de Silva - loc. cit.

22. This document, which is undated seems to have been prepared after the breakdown of the All - Party Conference (p. 8).

23. It is significant to note that some of the ardent Hindu supporters of the ACTC resented this term. They argued rather sarcastically that this was also meant to refer to the Christians (S.J.V. Chelvanayakam was a Christian) who spoke Tamil but could not claim to be inheritors of the Tamil cultural legacy, for, in their opinion, Tamil is synonymous with Saivaism.

24. ITAK, Silver Jubilee Number Section II p. 67

25. The document has been signed by M.H.M. Saheed, President, All-Ceylon Moor Association.

★ ★ ★

Yahyaa b. Sa'id reported that Abu Bakr Siddeeq Sent an army to Syria, he said to Yazid b Abu Sufyaan who was the Commander of a quater of the Forces: I instruct you in ten matters: Do not kill women or Children; nor the old and infirm; do not Cut fruit-bearing trees; do not destory any town; do not cut the gums of sheep or Camels except for the purpose of eating; do not burn date trees nor Submerge them; do not steal from booty and do not be Cowardly.

— **Muwatta' Imam Malik**

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# SANYO CENTRE

DEALERS IN RADIOS, WATCHES
&
FANCY GOODS

**41A, FRONT STREET, COLOMBO-11**
**Telephone: 548783**

With Best Compliments From:

# NEW CROWN

180/12 H, KEYZER STREET,
COLOMBO-11

**T'phone : 545604**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை!

- ஒட்டமாவடி அஷ்ரஃப் -

''வான் வெடிக்கும் பால்வீதித் தாரகைகள்
விழிதிறந்து கண்சிமிட்டத் தான் மறக்கும்!
சாண் நடக்க நிலமெங்கும் நடுநடுங்கும்;
சரிந்து விழும் மலையெல்லாம்! சூ. . . . என்றிட்டால்
தேன் கசக்கும்; தேங்காயில் பிழிந்த பாலும்
தண்ணீராய் மாறு''மெனத் தருக்கிவிட்டு
கூன் விழுந்த முதுகோடு குறுகி நிற்பாய். . . .
கை கொட்டிச் சிரிக்கின்றார்! கேவலம் தான்!

வாய்திறந்தால் கடல்நீரைக் குடிப்பேன் என்பாய்!
வரலாற்றுப் பெருமைகளை வெட்டித் தீர்ப்பாய்!
ஓய்ந்திருக்க மாட்டேனென் றுறுதி செய்வாய்
ஒரு மூச்சும் இஸ்லாத்துக் கென் றடித்துச் சொல்வாய்!
ஏய்த்திருக்கும் கூட்டத்தை எரிப்பேன் என்பாய்
ஏழைகட்கே என்வாழ்வென் றெடுத்துச் சொல்வாய்
'பேய்க்காட்டல்' முழக்கத்தைச் செய்துவிட்டு
படுத்திருப்பாய் மூலையிலே குறட்டை விட்டு!

ஒரு பெண்ணால் உனைமயக்க முடியும் என்றும்
ஒரு பதவி உனைமடக்க போதுமென்றும்
எருமையென எதையும் நீ சுமப்பாய் என்றும்
எல்லோரும் நன்றாக அறிந்துள்ளார்கள்.
தெருவளப்பாய் நீமட்டும்; தெரிந்தவர்கள்
தேவைகளை உன்தலையில் சுமத்திவிட்டு
கருவறுப்பார்! உன்சமூகம் உளுக்கும்! உந்தன்
கண் குருடா என்றெம்மை எண்ணவைக்கும்!

உனது இனம் உனதுமதம் உன்சமூகம்
உருக்குலைந்து சீரழிந்து சிதைந்து போக
தினம் இந்த தலைமுறையை ஏய்க்கநாடி
'தகிடு தத்த' விளையாட்டைப் போட்டுக் கொண்டு
பணத்துக்கும் பதவிக்கும் சமூகம் விற்கும்
பழக்கத்தை திரைமறைவில் தொடர்ந்து-இன்ப
கனவினிலே மிதக்க இன்னும் துணிந்தால் உந்தன்
காலின் கீழ்ப் பூமியொரு நாள் பிளக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

# LACE HOUSE

IMPORTERS, WHOLESALE AND RETAIL DEALERS IN THREAD, TRIMMINGS & FANCY GOODS, READY MADE GARMENTS.

**NO. 180/5, Keyzer Street,**
**COLOMBO - 11.**

T'Phone : 20955, 27585

Res; 95938

*With Best Compliments From:*

# CYCLE CENTRE

148, (230) K. K. S. ROAD,
JAFFNA.

DEALERS IN :

CYCLES, CYCLE PARTS,
ELECTRICAL GOODS
& WALL CLOCKS.

Phone: 23807

# FARMILAS

DEALERS IN
TEXTILE ITEMS,

★

34 Colombo Road,
PUTTALAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From :

★

**THAJMAHAL**
**HOTEL & BAKERY**

**MAINSTREET,**
**PUTTALAM.**

With Best Compliments From :

# Fazmina Textile

Dealers in:

★ Textiles and Readymade garments
★ Fancy Goods
★ Umbrellas and Suit Cases Etc.

**No. 13, Shopping Complex,**
**BANDARAWELA.**

With Best Compliments From :

# NMSR

Dealers in: Fancy Goods. Presentation Articles, Sundries. Stainless Steel Wares, Glass, Enamel & Aluminium Wares, Stationery Groceries, Oilmans, etc. etc.

**123, 125, K. K. S. Road,**
**JAFFNA.**

Phone: 23769
22531

*With Best Compliments From*

# STAR
## SHOE PALACE

**Dealers in :**

★ Bata ★ Elasto
★ D. S. I. ★ Cypa
★ Ranpa ★ D. I.

**46, NUWARA-ELIYA ROAD,**
**WELIMADA.**

T. Phone: 057 - 5163

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Space Donated By

# DEEN TEA STORES

414/6, K. CYRIL C. PERERA MAWATHA
COLOMBO - 13.

*DEALERS IN QUALITY TEA*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதிக்குள் போகும் சமாதானங்கள்

வல்லரசு வண்டுகள்
சமாதானப் பூங்காவில்
சிம்மாசனம் அமைத்துவிட்டன !
அதனுல்தான்
சமாதானம்
சமாதிக்குப் போய்க்கொண்
டிருக்கிறது !

★

அங்கு
அவை
அணுகுண்டு மலர்களை
உண்டு சுவைப்பதால்
கருணைச் செடிகள்
கிளைகள் ஒடிந்து
கல்லறையில் கிடக்கின்றன !

★

தேசிய ஆலயத்தில்
ஒற்றுமைக் கடவுளுக்கு
நேசப் பூக்களை — அவை
சோடித்து வைக்கின்றன !
ஆனல்
பாதீட்டு ஒதுக்கத்தில்
யுத்தக் கடவுளின்
பாதுகாப்பு பூஜைக்கு
ஆயுதப் பூக்களை
ஆயிரமாய்க் குவிக்கின்றன !

★

தென்றல் உலாவும்
சமாதானப் பூங்காவில்
சந்தோஷப் பறவைகள்
சல்லாபம் புரிந்திட்ட
அமைதிக் கிளைகளில்
யந்திரப் பறவைகள்
யுத்தம் புரிகின்றன !

★

அந்த —
வல்லரசு வண்டுகள்
சமாதானப் பூங்காவை
சாக்கடையாக்கும்வரை .....
உலகில்
யுத்த நாற்றம்
வீசிக் கொண்டுதானிருக்கும் !

**எச். எம். உவைஸ்,**
வணிகத்துறை — 2-ம் வருடம்.

---

எவ்வித ஆதாரமும் இன்றி சன்மார்க்கத்திற் புகுந்துள்ள ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடேயாகும். சிலர் சுயநலம் கருதி அவை நல்லவை எனக்கூறினும் சரியே. இவற்றை ஒழிப்பது கட்டாயமாகும். ஆனல் ஒன்று: **இவற்றை ஒழிக்க முனையும் போது இவற்றை விடகேடான விளைவு வந்துவிடக்கூடாது.**

— **இமாம் ஹசனுல்பன்னுஹ் (ரஹ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# SUPER DEAL

WHOLESALE, RETAIL DEALERS

IN

TEXTILES AND FANCY ITEMS

**Lucky Paradise Super Market**

53A/9, Keyzer Street,

COLOMBO 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபூ ரய்ஹான் அல் - பெருனீ - மதங்கள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வின் ஒரு முன்னோடி

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
(பணிப்பாளர் நளீமிய்யா இஸ்லாமிய
கலா நிலையம்)

மத்தியகாலப்பிரிவில் தோன்றிய, மிக அரிதான, அதிசயிக்கத்தக்க ஆளுமை படைத்த அறிஞர்களுள் அபூரய்ஹான் அல் - பெருனீயும் ஒருவர். எதனையும் பகுத்தாய்ந்து உணரும் வேட்கை, சத்தியம் எங்கிருப்பினும் அதனைத்தேடி அறியும் தனியான தாகமும், பல்வேறு விடையங்களை ஒன்று திரட்டி, அவற்றை ஒன்றிணைத்து (Synthesise) அவற்றினூடே இழையோடி நிற்கும் ஒருமைப்பாட்டைத் தரிசிக்கும் சிந்தனை பாங்கும், உளப்பண்பும் கொண்ட அகலுலகு நோக்குப் படைத்த அற்புத மனிதர் அல் - பெருனீ.

வானவியல், கணிதம், புவியியல் ஆகிய பல்வேறு கலைகள் தொடர்பான எண்ணற்ற நூல்களை எழுதிய அவர், மதங்கள் பற்றிய ஒப்பீட்டாய்வின் முன்னோடியாகவும் வரலாற்றில் காட்சி நல்குகின்றார்.

அல் - பெருனீ மத்திய ஆசியாவிலுள்ள குவாரிஸ்ம் என்னும் பிரதேசத்தில் பிறந்தார். அவரது காலப்பிரிவில் டிரான்ஸ் ஸொக்ஸியானா (Transoxiana) எனஅழைக்கப்பட்ட இப்பிரதேசம், தற்போது சோவியத் சோஷலிசக் குடியரசில், உஸ்பெகிஸ்தான் என வழங்கப்படும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. அல் - பெருனீ இயற்கையிலேயே எதனையும் நுட்பமாக ஆராய்ந்து உணரும் தன்மை மிக்கவராக விளங்கினர். புகழ்பூத்த முஸ்லிம் தத்துவஞானி ராஸியின் நூல் ஒன்றைப் படித்துக்கொண்டிருக்கும் போது அதில் 'மானி' (Mani) யின் நூல் ஒன்றைப் பற்றிய குறிப்பு காணப்பட்டது அவரது கவனத்தை ஈர்த்தது. அந்நூலைத் தேடிக் கொண்டிருக்கும் முயற்சியில் நாற்பது ஆண்டுகள் தொடர்ந்து அவர் ஈடுபட்டார் என வரலாறு குறிப்பிடுகிறது. இவ்வாறு அவர்பால் இயற்கையாகக் காணப்பட்ட அறிவு வேட்கையும், அவர் பிறந்து, வளர்ந்த பிரதேசத்தில் நிலவிய சமூக, பண்பாட்டுச் சூழ்நிலையுமே அவரை பிற பண்பாடுகள் பற்றி ஆராயவும், அவற்றை ஒப்பிட்டு நோக்கவும் தூண்டின எனலாம். அவரது வாழ் நாள் முழுவதும், இஸ்லாமிய பண்பாடு, நாகரிகத்தோடு மட்டுமன்றி, ஏனைய நாகரிகங்களோடும், பண்பாடுகளோடும் தொடர்புள்ளவராகவும், பரிச்சயமுள்ளவராகவும் அவர் விளங்கினர். அவர் பிறந்த பிரதேசமான 'குவாரிஸம்' அவரது காலப்பிரிவில் மிக வளர்ச்சியடைந்த நாகரிக, பண்பாட்டு நிலையைக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் அப்பாஸியரின் கீழும், பிற்காலப் பிரிவில் பாரசீக ஸமனிதுகளின் கீழும் (Samanid) இப்பிரதேசம் அறிவு, கலைத்துறையில் சிறப்பான வளர்ச்சியைக் கண்டது. கிரேக்க, ஸிரிய (Syriac), பஹ்லவீ மொழிகளில் காணப்பட்ட பல்வேறு கலைகளைத்தழுவிய நூல்கள், குவாரிஸமிலுள்ள நூலகங்களில் காணப்பட்டன. அத்தோடு பல்வேறு இனத்தவர்களைக் கொண்ட சமூக அமைப்பும் அங்கு நிலவியது.

கி.பி. 1017ம் ஆண்டு குவாரிஸம் பிரதேசம் கஸ்னவி ஆட்சியாளர்களால் கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றப்பட்டதைத் தொடர்ந்து அல்-பெருனிக்கு மஹ்மூத் கஸ்னவியுடன் தொடர்பு ஏற்பட்டது. மஹ்மூத் கஸ்னவி குவாரிஸம் பிரதேசத்திலிருந்து பல முக்கிய அறிஞர்களைச் சிறைப்பிடித்து கஸ்னிக்கு எடுத்துச் சென்றார். இக்காலப்பிரிவில் வானவியல், கணிதம், தத்துவம், புவியியல் ஆகிய துறைகளில் புகழ்பூத்த அறிஞராக விளங்கிய அல்-பெருனியும் கஸ்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கஸ்னியில் இந்தியாவைச் சேர்ந்த பல அறிஞர்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

கி.பி. 1020-30க்குமிடையில் இந்தியாவிற்குச் சென்ற அவர் அங்கு ஸமஸ்கிருத பண்டிதர்களையும் அறிஞர்களையும் சந்தித்து, அவரது 45வது வயதில் ஸமஸ்கிருத மொழியைக் கற்றார். ஏற்கனவே அப்பாஸிய காலப் பிரிவில் அரபியில் பெயர்க்கப்பட்ட இந்திய நூல்களோடு அவருக்குப் பரிச்சயமிருந்தது. ஆனால், அந்த மொழிபெயர்ப்புகளில் பல குறைகள் இருப்பதை அவர் அவதானித்தார். உதாரணமாக ஜீவ (Jiva) என்னும் ஸமஸ்கிருதச் சொல் அரபியில் ஜீப் (Jeeb) என மாற்றப்பட்டு, ஐப் என்னும் அரபுப்பதம் தரும் வேறு ஒரு கருத்துடன் இணைக்கப்பட்டு கருத்து மயக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருப்பதை அவரது ஆய்வுகள் அவருக்கு உணர்த்தின. அல்-பெருனியினால் கண்டுபிடிக்கப்பட்ட இத்தகைய தவறுகள் அவரை ஸமஸ்கிருதத்திலுள்ள மூல நூல்களைப் படித்தறிவதற்காக, ஸமஸ்கிருத மொழியைப்படிக்கத் தூண்டின. எனவே, அவருக்கு கஸ்னியை வந்தடைந்து ஹிந்துக்களுடன் நேரடியான தொடர்பு ஏற்பட்ட போது, அச்சந்தர்ப்பத்தை அவர் பூரணமாகப் பயன்படுத்தினார். ஸமஸ்கிருத மொழியைப் படிப்பதற்கு நீண்ட காலம் சென்றதென்றும், படிப்படியாக முன்னேறி இறுதியில் அம்மொழியில் தேர்ச்சி பெற்றார் என்றும் தனது 'கானுன் அல்-மஸ்ஊதி' என்னும் நூலில் அவர் குறிப்பிடுகின்றார். நூல்களைத்திரட்டி ஹிந்துப் பண்டிதர்களின் துணைகொண்டு, காலத்தையும், நேரத்தையும் அர்ப்பணித்து இந்த மொழியைத் தாம் கற்றதாக அவர் குறிப்பிடுகின்றார். ஏறக்குறைய 2500 சமஸ்கிருத சொற்களை அவர் அறிந்திருந்தாரென பேராசிரியர் ஸுனிதகுமார் சட்டர்ஜி தனது 'அல்-பெருனியும் சமஸ்கிருதமும்' என்ற ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்திய மக்களின் நம்பிக்கைகள், ஆசாரங்கள், கோட்பாடுகளை மிக லாவகமாக அவர் விளக்குவதானது, மொழியிலும், அவர் எடுத்துக்கொண்ட பொருளிலும் அவருக்கிருந்த ஆற்றலையே காட்டுகின்றன என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஸமஸ்கிருத உச்சரிப்பில், சாதாரண மக்களின் உச்சரிப்பு முறையை விடுத்து, பண்டிதர்களின் பண்பாடான உச்சரிப்பு முறையையே அவர் பின்பற்றினார். இந்துக்களின் பேச்சு வழக்கு மொழிக்கும், எழுத்துவடிவமான மொழிக்குமிடையிலான வித்தியாசத்தை அவர் நன்கு அறிந்திருந்தார். அக்காலப்பிரிவில் நிலவிய பல்வேறு எழுத்து வடிவங்களையும் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு பொருட்களையும் அவர் விளக்குகின்றார். மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை சித்ஹ மத்ரிகா (Sidha Matrika) என அவர் குறிப்பிடுகின்றார்.

அல்-பெருனியின் காலப்பிரிவிற்கு முன்பிருந்து முஸ்லிம்கள் ஏனைய பண்பாடுகள், மதங்கள் பற்றி அறிவதில் ஆர்வம் செலுத்தியுள்ளனர். புராதன இனங்களைப் பொறுத்தளவில் கிரேக்கர்கள் ஏனைய பண்பாடுகள் பற்றி அறிவதில் ஆர்வம் செலுத்தினர், என வரலாறு குறிப்பிடுகின்றது. முஸ்லிம்கள் அவர்களது வரலாற்றின் ஆரம்ப காலப்பிரிவில் இஸ்லாத்தில் தோன்றிய பொதுவான சமய மரபிற்கு முரணான அம்சங்களைக் கொண்ட (Heretical Sects) பிரிவுகள் பற்றி ஆராய்வதில் கவனம் செலுத்தினர். அல்-அஷ்அரீ (மரணம்-கி.பி. 953) அல்-ஜாஹிஸ் (கி.பி 869) நவ்பக்தி (கி.பி. 912) இப்னு ஹஸம் (கி.பி. 1064) யாகூபி (கி.பி. 889) அல்-மஸ்ஊதி (கி.பி. 956) ஆகியோர் இஸ்லாத்தில் தோன்றிய பிரிவுகள், பிற பண்பாடுகள், மதங்கள் பற்றி ஆராய்

வதில் ஆர்வங்காட்டினர். இவர்களுள், ''அல்-பஸ்ல் பில் மிலல் வல் அஹ்வா உன் நிஹல்'' என்னும் நூலை எழுதிய ஹஸம், மதங்கள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வின் முன்னோடியாக விளங்குகின்றார். (Honour of being the first scholar in the field of Comparative Religion) எனப் பேராசிரியர் ஹிட்டி குறிப்பிடுகின்றார்.[1]

இத்தகைய ஓர் அறிவுப் பாரம்பர்யத்தின் வாரிசாகவே அல்-பெருனீ தோன்றினார். அல்-பெருனியின் ஆர்வம் குறிப்பாக இந்திய பண்பாடு, ஹிந்து மதம், அதனோடு தொடர்புடைய ஆசாரங்கள், பழக்க வழக்கங்கள், வேத நூல்கள் பற்றியதாகவே அமைந்தது. அல்-பெருனியின் 'கிதாப் லி தஹ்கீக் மாலில் ஹிந்த்' என்னும் நூலில் இவை பற்றிய சிறந்த பல விளக்கங்களை அளித்துள்ளார். இந்நூலின் முன்னுரையில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"எனது நோக்கம் மதம் பற்றிய வாதப் பிரதிவாதங்களில்(Polemics) ஈடுபடுவதன்று. நான் நேரடியாக அவதானித்தவற்றை மிக நேர்மையாக அப்படியே உள்ளவாறு சித்திரிப்பதாகும்''[2]

எனவே அல்-பெருனியின் இந்த விளக்கங்களைப்பொறுத்தளவில், அவருக்குப் பிற் காலத்தில் தோன்றிய மதங்கள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வோடு தொடர்புடைய ஒரு கலையான Phenomenology யின் சாயல்கள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறு தான் நேடியாக அவதானித்ததை விளக்கும் போது, அவருக்கு முந்திய காலப்பிரிவில் எழுதப்பட்ட நூல்களில், வெறும் செவிவழிச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, அந்நூலாசிரியர்கள் விளக்கியுள்ள தவறான விளக்கங்களைச் சுட்டிக் காட்டியுள்ள அல்-பெருனி உண்மையையும், சத்தியத்தையும் அறியும் அறிவுப் பயணத்தை மேற்கொண்டார். அவர் தன்னையே விமர்சனத்துக்கு உள்ளாக்கினர். ''இந்துக்களின் மதம் பற்றி விளக்கும் போது நான் கூட சிலவேளைகளில் தவறாக விளங்கி அதனை விளக்க இடமுண்டு'' எனக்குறிப்பிடுகின்றார். எனவே ''உண்மையான விபரங்களையன்றி, தவறான தகவல்கள் என்னால் அளிக்கப்படுவதிலிருந்து நான் இறைவனிடம் பாதுகாவல் தேடுகின்றேன்''என தனது''கிதாபுல் ஹிந்த'' என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். எனவே அல்—பெருனி தாம் நேரடியாகக் கண்டு அவதானித்தவற்றை மிக நுட்பமாகப்பதிவு செய்ய முற்பட்டாரேயன்றி, அவற்றை விளக்கி விமர்சிக்கும் பணியில் இறங்கவில்லை. இதனால் தான் அல்-பெருனி இந்தியாவிற்குச் செவிமடுக்கும் ஒருவராக விளங்கினரேயன்றி இந்தியா குறித்துத்தீர்ப்பு வழங்கிய ஒருவராக விளங்கவில்லை. (Al-Beruni became a person who listens to India, not pass judgement) என அவரைப் பற்றி ஒரு வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றார்.

அல்-பெருனி ஹிந்துக்களின் நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் பற்றி சிறந்த விளக்கமொன்றை அளித்துள்ளார். ஹிந்துக்களின் இறைவனைப் பற்றிய கோட்பாடு, மறு பிறப்பு பற்றிய விசுவாசம் ஆகியவற்றை விளக்கும் அவர், இந்தியப் பிராமணர்களின் (Brahamins) மத்தியில் நிலவிய இந்த நம்பிக்கைகளை கிரேக்கர்களின் நம்பிக்கையோடு ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். கிறிஸ்தவ மதத்தின் தோற்றத்திற்கு முன்னர், ஹிந்துக்களின் நம்பிக்கைகள் போன்றே கிரேக்கர்களின் நம்பிக்கையும் அமைந்திருந்தது.

ஹிந்துக்கள் தங்களது நூல்களை ''ஓம்'' என்னும் வார்த்தையோடு ஆரம்பிப்பார்களென்றும், இது முஸ்லிம்கள் ''பிஸ்மில்லாஹ்'' (இறைவனது நாமத்தால்) என ஒன்றை ஆரம்பிப்பது போன்றது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.[3]

ஹிந்துக்கள் மத்தியில் காணப்படும் கடவுள் கொள்கை, திருமணச்சடங்குகள், பிரேதங்களை எரித்தல், எழுத்து முறை, கணிதக் கலை பற்றிய விடயங்களை ஒப்பு நோக்கி அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியுள்ளார். ஹிந்துக்களைப் போன்றே புராதன கிரேக்கர்களும் இறந்தவர்களின் சடலங்களை எரித்தனர் எனக் குறிப்பிடும் அவர், ஹிந்துக்கள் குறிப்பிடும் ''இந்திரனின் வில்லை'' பாரசீகர்கள் மத்தியில் மரபு வழியாக வழங்கப்பட்டு வரும் ருஸ்துமின் வில்லிற்கு உவமிக்கிறார்.

ஹிந்துக்களின் நம்பிக்கைகள் தத்துவங்களை அவர் ஸம்ப்கிய (Sampkiya), பதஞ்சல் (Batanjal), பகவத்கீதை (Gita) ஆகிய நூல்களை மூலாதாரமாகக்கொண்டு விளக்கியுள்ளார். இந்நூல்களில் சில கருத்துக்களை பிளேட்டோவின் Dialogueல் காணப்படும் சில கருத்துகளுக்கு ஒப்பு நோக்கி அவர் விளக்கியுள்ளார். மேலும் ஹிந்துக்களின் சில தத்துவங்கள் பைபிலுள்ள மத்தேயுவின் சுவிஷேசம் லூக்கின் சுவிஷேசம் ஆகியவற்றிற்கும், பாரசீகத்திலுள்ள ''கிதாப் ஈரான் ஷஹ்ரி'' யில் காணப்படும் சில கருத்துகளையும் ஒப்புநோக்கி விளக்கியுள்ளார். ஹிந்துக்கள் மத்தியில் காணப்படும் அத்வைதக் கோட்பாட்டை, சில தீவிரவாதிகளான ஸூபிகளில் காணப்படும் "வுஜூத்" பற்றிய கோட்பாட்டோடும், கிரேக்க நியோ பிளேட்டோனிய தத்துவத்தோடும் ஒப்பு நோக்கி அவர் விளக்குகின்றார்.[4]

அல்-பெருனி தனது ஒப்பு நோக்கு முயற்சியில் வெறும் நூல்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை. மக்களின் வாழ்வின் நிகழ்வுகளையும் தனது ஒப்பு நோக்கு முயற்சிக்கு அடிப்படையாகக்கொண்டார். ஹிந்து மதத்தை விளக்குவதில் அவருக்கு ஏற்பட்ட சில சிரமங்களை அவர் குறிப்பிடுகின்றார். நூல்களில் குறிப்பிடப்படும் கருத்துக்களோடு மக்களின் வாழ்விற்கும் இடையில் காணப்படும் இடைவெளியும், சமஸ்கிருத மொழிக்கும் மக்களின் அன்றாட பேச்சு (Dialects) மொழிக்குமிடையில் காணப்படும் வித்தியாசமும், இத்துறையில் பல சிரமங்களைத் தோற்றுவிப்பதாக அவர் குறிப்பிடுகின்றார்.

சமுகத்தின் சாதிகளின் (Caste) தோற்றம் பற்றியும் அல்-பெருனி ஆராய்ந்துள்ளார். மதக்கட்டளைகளின்றி, புராதன அரசர்கள் தங்களது பிரஜைகளை அடிமைப்படுத்தி வைக்கும் முயற்சியே சமுகத்தில் சாதிப்பிரிவினையைத் தோற்றுவித்தது எனக் குறிப்பிடும் அல்பெருனி, இதனை விளக்க ஈரானிலும், இந்தியாவிலும் காணப்பட்ட சாதிப்பாகுபாட்டு முறைகளை எடுத்துக்காட்டுகின்றார். ஈரானில் காணப்பட்ட ஏழு சாதிகள் பற்றி அல்-பெருனி குறிப்பிடுகின்றார். இது மெகஸ்தினஸ் (Megasthenes) குறிப்பிடும் இந்தியாவில் காணப்பட்ட ஏழு சாதிகளை ஒத்துள்ளது.

அவர் நான்கு சாதிகளின் தோற்றத்தினையும், அவற்றிற்கிடையே காணப்படும் வித்தியாசத்தையும் விளக்குவதோடு, நான்கு சாதிகளுள் வைஷியரும் (Vaisya) சூத்திரரும் (Sudra) பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நெருங்கி, ஒன்றாகக் கலந்து பழகினர் என கூறுகின்றார். இந்த நான்கு தவிர, ''அந்தயாஜ'' (Antyaja) என அழைக்கப்பட்ட, எந்த ஒரு தொழிலையும் புரியாத இரு சாதிகள் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[5]

பிராமணர்களின் வாழ்க்கை பற்றி அவர் விரிவான விளக்கமொன்றை அளித்துள்ளார் அவர்களின் முக்கிய இரு பிரிவுகள் (Agnihotras, Dikshats) பற்றியும், அவர்களது வாழ்க்கையின் நான்கு பிரிவுகள், பழக்கவழக்கங்கள் பற்றியும் அவர் குறிப்பிடுகின்றார். பிராமணர்களின் கடமைகளாக, பக்தி, தருமம் புரிதல், தருமம் பெறுதல், வேதங்களைப் படித்தல், போதித்தல் ஆகியன இருந்தன. வெங்காயம், வெள்ளைப்பூடு ஆகியன அவர்களுக்குத் தடுக்கப்பட்டிருந்தன. ஷத்திரியர் (Kohatriya) வேதங்களை ஒதிப்படித்தனர். ஆனால், போதிக்கவில்லை. புராணங்களின் விதிப்படி நடந்து, அவர்களின் போர்களில் பங்குபற்றினர். வைஷியர் விவசாயிகளாகவும், கால்நடைகளை வளர்ப்போராகவும் தொழில் புரிந்தனர். சூத்திரர் பணியாட்களாக விளங்கினர்.

இந்தியாவில் காணப்பட்ட திருமணச் சடங்குகள் பற்றியும் அவர் விளக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்ய திருமணங்கள் வழக்கிலிருந்தன. சீதனம் பற்றிய எந்த ஒரு குறிப்பும் காணப்படவில்லை. திருமணத்தின் போது கணவன் மனைவிக்கு, தான் பொருத்தமானது எனக் கருதுகின்ற ஓர் அன்பளிப்பை அளிப்பான். இதனைத்திரும்பப் பெறும் உரிமை அவனுக்கில்லை. ஆனால் மனைவி விரும்பினால் அதனை அவனுக்குக் கொடுத்துவிடமுடியும். நான்கு திருமணங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டன.

ஒரு குழந்தையின் சாதி அக்குழந்தையின் தாயின் சாதியைப் பொறுத்தே அமைந்தது எனக்குறிப்பிடும் அல்-பெருனீ, கணவன் இறந்ததும், மனைவி உடன்கட்டை ஏறும் சதி (Sati) என்னும் வழக்கம் பற்றியும் விளக்குகின்றார். ஹிந்துக்களின் பல்வேறு பழக்கவழக்கங்களைப் பற்றிக் குறிப்பிடும் அவர், அவர்கள் மத்தியில் காணப்பட்ட சதுரங்க ஆட்டம் பற்றியும் விளக்கியுள்ளார்.

இந்தியாவில் காணப்பட்ட எழுத்து முறை பற்றி விளக்கும் அவர், பல்வேறு வகையான எழுத்து முறைகளையும், அவற்றின் பெயர்களையும் குறிப்பிடுகின்றார். ''சித்தமெத்ரிகா'' (Sidha Matrika) என்பது மிகப்பிரபல்யமான எழுத்து முறையாகும். கஷ்மீர், மத்யதேஷ் (தற்போதைய உத்தர பிரதேசம்) பகுதிகளிலும் வாரணாஸி (Benares) யிலும் இது வழக்கிலிருக்கிறது. கஷ்மீரே இந்த எழுத்து முறையின் பிறப்பிடம் என மரபுவழிக் குறிப்புக்கள் உணர்த்துகின்றன. இன்னொரு மரபுவழிக் கதையின் படி கஷ்மீரிலேயே முதன் முதல் வேதங்கள் எழுதப்பட்டன.

எழுதுவதற்குப் பயன்பட்ட சாதனங்கள் பற்றியும் அல்-பெருனீ குறிப்பிடுகின்றார். இந்தியாவின் வடமத்திய பகுதியில் ''தூஸ்'' (Tuz) என்னும் மரத்தின் பட்டைகள் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. இம்மரப்பட்டையின் மேல்பகுதியில் எண்ணெய் பூசப்பட்டு, அவை கடினமாகவும், வழவழப்பாகவும் அமையும் வகையில் ஆக்கப்பட்டன. அவற்றில் எழுதப்பட்ட பின்னர் அத்தகைய பக்கங்கள் புடைவையால் சுற்றப்பட்டு, அதே அளவுள்ள இரண்டு தடித்த அட்டைகள் இரு பகுதியில் வைக்கப்பட்டுக் கட்டப்பட்டன. இத்தகைய ஒரு நூல் ''புதி'' (Puthi) என அழைக்கப்பட்டது.[6]

அல்-பெருனீ வேதங்கள் பற்றி மிகச் சிறந்த விளக்கமொன்றை அளித்துள்ளார். வேதங்கள் பிராமணர்களுக்கு உரியவையாக இருந்தன. அவை பாடல் அமைப்பில் எழுதப்பட்டு கட்டளைகளை, துதிப்பாடல்களை உள்ளடக்கியிருந்தன. அவற்றைப் பாடும் முறைகள் வித்தியாசமாக அமைந்திருந்தன.

வேதங்களுக்கு அடுத்தபடியாக புராணங்கள் விளங்கின. பதினெண் புராணங்களாக அமைந்த இவை ரிஷி (Rishi) களினால் இயற்றப்பட்டன. இந்தப் பதினெட்டுப் புராணங்களில் மத்ஸ்ய (Matsya), அதித்வ (Aditva), வாயு (Vayu) புராணங்களின் சில பகுதிகளைத் தனக்குக் காணும் சந்தர்ப்பம் கிடைத்ததாக அல்-பெருனீ குறிப்பிடுகின்றார். வேதங்களிலிருந்து (Vedas) பெறப்பட்ட ஸ்மிருதிகளின் (Smiriti) கட்டளைகளையும், விளக்கங்களையும் இவை உள்ளடக்கியிருந்தன. அல்-பெருனீ ஸ்மிருதிகளை இயற்றிய இருபது நூலாசிரியர்களைக் குறிப்பிடுகின்றார். அத்தோடு பதன்ஜலி (Patanjali), விஷ்ணு தர்ம (Vishnu Dharma) ஆகிய வேறு நூல்களையும் குறிப்பிடுகின்றார். அதே நேரத்தில் ஹிந்துக்களின் இந்த நூல்களை விளக்குவதில் அந்நியர் ஒருவர் எதிர்நோக்கும் சிரமங்கள் இடர்பாடுகளையும் அவர் விளக்கியுள்ளார்.

வியாசரின் மகாபாரதம் பற்றியும் அல்-பெருனீ குறிப்பிட்டுள்ளார். ஒரு லட்சம் பாடல்களைக் கொண்டுள்ள இந்நூல், பர்வன் (Parvan) என அழைக்கப்படும் பதினெட்டுப் பாகங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிடுகின்றார். இராமாயணம், பகவத்கீதை பற்றிய குறிப்புக்களும் அவரது நூலில் காணப்படுகின்றன. இராமன் விஷ்ணுவின் அவதாரம் என்ற நம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கை மக்கள் மத்தியில் காணப்பட்டதாக அவர் குறிப்பிடுகின்றார்.

அல்-பெருனீ பௌத்த மதம் குறித்தும் அறிந்திருந்தார். 'புத்த' என்ற பெயரை அவர் அறிந்திருந்தார். ஆனால், பௌத்தர்களை ''ஷம்அனிய்யா'' (Shamaniyya) என அவர் அழைக்கின்றார். இந்துக்களைப் போன்றே பௌத்தர்களும் மறுபிறப்பில் நம்பிக்கைகொண்டவர்களென்றும், இவ்வுலகம் எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் என்பது பற்றி அவர்களிடையே வித்தியாசமான கருத்துக்கள் நிலவுவதாகவும் அல்-பெருனீ குறிப்பிடுகின்றார். ஆனால், "புத்த" "தர்ம" "ஸங்க" பற்றிய தெளிவான குறிப்புகள் அவரது நூல்களில் காணப்படவில்லை. பெரும்பாலும் இக்காலப்பிரிவில் பௌத்த மதத்தின் செல்வாக்கு அல்-பெருனீக்கு பரிச்சயமாக இருந்த பகுதிகளில் குறைந்திருக்கலாமெனவும் எனவே அவருக்கு பௌத்தம் பற்றி விரிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு இருந்திருக்காதென்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஸொராஸ்திர்யா (Zoroastianism) மதம், மனீகிய மதக்கோட்பாடு (Manichacism) பற்றியும் அவர் நீண்ட விளக்கங்களை அளித்துள்ளார். அல்-பெருனீயின் காலப்பகுதியில் கணிசமன அளவு ஸொராஸ்திர்யர் காணப்பட்டிருத்தல் வேண்டும். ஸொராஸ்திர்யப் பிரதேசங்களில் (பாரசீக குராஸானிய) இஸ்லாமிய ஆட்சி பரவினும், இஸ்லாம் படிப்படியாகவே இப்பிரதேசங்களில் பரவியது. எனவே, ஸொராஸ்திர்ய மதக் கோட்பாடுகள், பழக்கவழக்கங்கள் பற்றி நேரடியாக அவதானித்து அறியும் வாய்ப்பு அவருக்கு இருந்திருத்தல் வேண்டும். ஸொராஸ்திர்ய மதம் பற்றி சில குறிப்புகளை அளித்துள்ள இரண்டு கிறிஸ்தவர்களை அவர் குறிப்பிடுகின்றார். அவர்களது மத நம்பிக்கைகள், சடங்குகள், திருவிழாக்கள் பற்றிய தகவல்களை அவர் அளித்துள்ளார். மனீகிய மதக்கோட்பாட்டை நிறுவிய மனீ பற்றி அவர் நன்கு அறிந்திருந்தார். இறைவனும், பிசாசு(Devil) என்னும் தீய ஆவியும் என்றும் நிலைத்திருக்கும் சக்திகள் என்ற நம்பிக்கையுடைய இருமைவாதிகளே (Dualits) மனீகியா ஆவர். இக்கோட்பாட்டை நிறுவிய மனீ (Mani) பல மதங்கள், தத்துவங்களிலிருந்து பல கோட்பாடுகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றினை ஒன்றிணைத்தே அவரது தத்துவக் கோட்பாட்டை உருவாக்கினார். இந்து, பௌத்த தத்துவங்களிலிருந்து மறுபிறப்புக் கோட்பாட்டையும், கிறிஸ்தவர்களிலிருந்து வேத நூல் பற்றிய கோட்பாட்டையும், யூத, கிறிஸ்தவ சமய மரபிலிருந்து சுவர்க்கம் பற்றிய கோட்பாட்டையும் மனீ பெற்றுக் கொண்டிருக்கலாமென அல்-பெருனீ குறிப்பிடுகின்றார்.

கிரேக்கர்களின் மத நம்பிக்கைகள் பற்றியும், அல்-பெருனீ பல குறிப்புகளை அளித்துள்ளார். பிளேட்டோ, சோக்கிரடீஸ், அரிஸ்டோட்டல், தொலமி, கலன் (Galen) போன்ற கிரேக்க சிந்தனையாளர்கள் பற்றிய குறிப்புகள் இவரது நூல்களில் காணப்படுகின்றன. புராதன கிரேக்க மதம், சிலை வணக்கம், இறைவனுக்கு மனிதப் பண்பினை அளிக்கும் கொள்கை (Anthropomorphism) ஆகியவற்றை உள்ளடக்கியிருந்ததாக அவர் குறிப்பிடுகின்றார். ஹிந்துக்களின் சட்டங்கள், நியாயங்கள் ரிஷிகள் மூலமாகப் பெறப்பட்டது போல, கிரேக்கர்களின் சட்டங்களும், மரபுகளும் பைதோகரஸ் (Pythogarus) மைனேஸ் (Minos) போன்ற ஞானிகள் மூலம் பெறப்பட்டதாக அவர்கள் கருதுகின்றனர். யூத மதம், கிறிஸ்தவ மதம் பற்றிய விளக்கங்களையும் அவர் அளித்துள்ளார். பழைய ஆகமம் பற்றிய குறிப்புகள் அவரது நூல்களில் காணப்படுகின்றன. ஜெரூஸலம் யூதர்களின் மதப்பாரம்பரியத்தில் வகிக்கும் முக்கியத்துவம், சனிக்கிழமையை ஓய்வு நாளாக கருதும் அவர்களது Sabbath பற்றிய கோட்பாடு ஆகியவற்றையும் அவர் விளக்கியுள்ளார். கிறிஸ்தவ மதம், அதோடு தொடர்புடைய விசுவாசக் கோட்பாடுகள், உட்பிரிவுகள் பற்றிய அழகிய விளக்கமொன்றை அல்-பெருனீ அளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தேயுவின் சுவிசேஷம், லூக்கின் சுவிசேஷம் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவ மதத்தின் அடிப்படைக் கோட்பாடான "திரித்துவக் கோட்பாடு" (Trinity) பற்றி விளக்கும்போது ஹிந்துக்களின் முதற் காரணமான பிரஹ்ம, இரண்டாவது சக்தியான நாராயண (Narayana) மூன்றாவது சக்தியான ருத்ர (Rudra) பற்றிய கோட்பாடானது, பிதா (Father) குமாரர் (Son) பரிசுத்த ஆவி (Holy Ghost) என்ற கிறிஸ்தவ திரித்துவக் கோட்பாட்டோடு ஒத்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக நோக்குமிடத்து அல்-பெருனீ மதங்கள் பற்றிய ஒப்பீட்டு முயற்சியின் முன்னோர்களில் ஒருவராகக் காணப்படுகின்றார். எத்தகைய விருப்பு வெறுப்புமின்றி நடுநிலை நின்று, தான் அவதானித்தவற்றையும், அறிந்தவற்றையும் மிக நுட்பமாக அவர் பதிவு செய்துள்ளார். மிக அண்மைக்காலம் வரை இத்தகைய பாரபட்சமற்ற ஒரு நோக்கினை ஒப்பீட்டு ஆய்வு முயற்சியில் நாம் காண முடியாது, என பேராசிரியர் ஜேப்ரீ, அல்-பெருனீ பற்றி மிகச் சிறந்த முறையில் மதிப்பீடு செய்கிறார்.

அல்-பெருனீ ஒரு அறிஞர் என்ற நிலைக்கு அப்பாற்பட்டவர். அவர் நீதியின் வழியில் நின்று செயல்பட்ட ஒரு மனிதர். அவரது மதத்தில் அவருக்கிருந்த ஆழ்ந்த நம்பிக்கையானது ஏனைய சமூகத்தவரின் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் குறைவாக நோக்கி எடைபோடும் குறுகிய நோக்கை அவரில் தோற்றுவிக்கவில்லை. அவரது காலப்பிரிவில் மிக, அகலுலக நோக்குடைய சர்வதேசிய அறிஞராக அவர் ஒருவர் மட்டுமே விளங்கினார், எனப் பேராசிரியர் ஸுனித குமார் சட்டர்ஜி, அல்-பெருனீயை நோக்குகின்றார்.

இஸ்லாமியப் பண்பாடு தோற்றுவித்த பரந்த மனப்பான்மை, பரஸ்பர நல்லுறவு, பிறறைப் புரிந்து வாழும் தன்மை அகலுலக நோக்கு ஆகியவற்றின் பிரதிபலிப்பே அல்-பெருனீயின் ஆளுமையும், அறிவுப்பங்களிப்புமாகும்.

★

## REFERENCES


1. Philip K. Hitti, History of Arabs, London 1960 — p. 558.
2. Al Beruni, *Tahqiq Malik Hind* — p.8.
3. Al Beruni, *Tahqiq*, op. cit. — p.173
4. Gunidar Kaur, Al Beruni, An Early Student of Comparative Religions, *Islamic Quarterly* — Volume No. 2, 1982 — p. 61.
5. Hakim Sa'id and Dr. Zahid Khan op. cit. — p. 52.
6. *Ibid* 114

★ Hakim Sa'id and Dr. Zahid Khan *Al Beruni, His Times, Life and Works* Karachi 1981.

★ Sunit Kumar Chattergi, Al Beruni and Sanskrit in *Al Beruni Commemoration Volume* Calcutta, 1981.

★ A. Jeffery, Al Beruni's Contribution to Comparative Religion in *Commemoration — Vol.*


★ ★

University of Jaffna Sri Lanka
RECEIVED
1988-9-6
Periodicals Division
Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

# YAPPAN JEWELLERS

(K. ARUMUGAMPILLAI & SON)

64, KANNATHIDDY ROAD,
JAFFNA

T' phone : **22518**

*With Best Compliments From*

# VOGUE JEWELLERS

வோக் ஜுவல்லர்ஸ்

JEWELLERS GEM, DIMOND & GOLD SMITH TOOLS MERCHANTS

**213 D, Kasthuriar Road,
JAFFNA.**

With Best Compliments From:

# RAUMANIYA STORES

*DEALERS IN
TEXTILES AND OILMAN GOODS*

**No. 61, NUWARA - ELIYA ROAD,
WELIMADA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

# BASHEER BROS

GLASS & PICTURE MERCHANTS

சிப்போட், போமிகாசிட்,

காட்போட், பிளைவுட் பிளாஸ்டிக்

பொருட்களுக்கு விஜயம் செய்யுங்கள்

311, K.K.S Road, JAFFNA.

SPACE DONATED BY:

# JENS TEXTILES

MAIN STREET,
KATTANKUDY,

With Best Compliments
From:

# ALMAAZ JEWELLERS

Specialist in:
22 Carret sovereign
GOLD Jewellery making.

33, Kotugodella Veediya,
KANDY.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# MATARA NISAM JEWELLERS

88, Main Street,

MATARA.

**T. Phone: 2166**

---

*Vist For:*

Sweets And Cakes

AT ANY TIME

# GAYA BAKERY

(Prop :- *R. M. Athamlabbe)*

KALI KOVIL ROAD,

ERAVUR.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முஸ்லீம்கள்: ஒரு குடிசனப்புவியியல் நோக்கு

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை PhD.

இலங்கை பல இன, மத, மொழி பேசும் மக்களைக் கொண்டதொரு நாடாகும். இந்நிலைப்பாட்டை, அண்மையில் செய்யப்பட்ட இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கை ஏற்றுக்கொண்டிருப்பது முக்கியமானதொன்றாகும். இதற்குமுன், இலங்கையின் சமூகப் பல்லினத்தன்மை உத்தியோக பூர்வ நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லையெனலாம். பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைப் பின்பற்றும் மக்கள் இந்நாட்டில் உள்ளனர். பௌத்தர்கள் சிங்களவராகவும், இந்துக்கள் தமிழராகவும், முஸ்லீம்கள் சோனகராகவும், மலாயர்களாகவும், கிறிஸ்தவர்கள் சிங்களவரிலும் தமிழரிலும் சிறு தொகையினரைக்கொண்டு காணப்படுகின்ற ஒரு பொதுத்தன்மை தென்படுகிறது. 1981 இல் எடுத்த குடிசனக்கணிப்பின் படி இலங்கையில் 1,134,556 பேர் முஸ்லீம்களாக இருந்தனர். இத்தொகை இலங்கையின் மொத்தக் குடிசனத்தொகையில் 7.6 வீதமாகும். முஸ்லீம்களின் குடிசனத்தொகையில் இலங்கைச் சோனகர் 1,056,972 பேராகவும் (83.17%) மலாயர் 43,378 பேராகவும் (3.82%) ஏனையவர்கள் 34,206 பேராகவும் (3.01%) இருந்தனர்.

இலங்யையின் குடிசனத்தொகை மத அடிப்படையில் எண்ணிக்கையிலும், வீதாசாரத்திலும் அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ளது. 1871 இல் முஸ்லீம்களின் குடிசனத்தொகை இலங்கைக் குடிசனத்தொகையில் 7.1வீதமாகவும் 1881 இல் 7.2 வீதமாகச்சற்று அதிகரித்தும், பின்பு 1946 ஆம் ஆண்டுக் கணிப்புவரை தொடர்ச்சியாகக் குறைவடைந்தும் வந்துள்ளது. 1946க்குப் பின்னர் ஒவ்வொரு குடிசனக் கணிப்பிலும், முஸ்லீம்களின் வீதம் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளதைக் காணலாம். 1981 இல் பதிவுசெய்யப்பட்ட 7.6 வீதமே இதுவரை பதிவுசெய்யப்பட்ட முஸ்லிம்களின் குடிசனத்தொகை வீதங்களுள் மிகக்கூடியதொன்றாகும்.

பௌத்தர்களினதும், முஸ்லீம்களினதும் குடிசனவீதம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதனையும் இந்துக்களினதும், கிறிஸ்தவர்களினதும் குடிசனவீதங்கள் தொடர்ச்சியாகக் குறைவடைந்து வருவதனையும் காணலாம். பெரும்பாலும் இந்துக்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் இருக்கும் இந்தியத் தமிழர்கள் 1948 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகத் தாயகம் திரும்பிக் கொண்டிருப்பதும் இலங்கையிலிருந்து பல நாடுகளுக்கு இடம்பெயர்ந்த மக்களில் மிகக்கூடிய தொகையினர் இந்துக்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் இருந்ததும் இவர்களின் குடிசனவீதம் குறைய முக்கியகாரணமாக இருந்தது. ஆகவே, இந்துக்கள் கிறிஸ்தவர்களில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏனைய இரு சமயப் பிரிவினர்களின் சதவீத உயர்ச்சிக்குக் காரணமாக இருக்கலாம்.

அட்டவணை II இல் மாகாண அடிப்படையில் இலங்கையில் முஸ்லீம்களது பரம்பல் (1981 இல்) காட்டப்பட்டுள்ளது. சிங்களவர், தமிழர்களுடன் ஒப்பிடுமிடத்து முஸ்லீம்கள் நாடளாவிப் பரவிக் காணப்படுவதுடன், குறித்த எந்த வொரு மாகாணத்திலும் பெரும்பான்மையினராகவும் இல்லை. இலங்கை முஸ்லீம்களின் மொத்தத் தொகையில் 52.6 வீதத்தினர் கிழக்கு, மேற்கு மாகாணங்களில் வாழ்கின்றனர். மிகுதி 47.4 வீதத்தினரே ஏனைய ஏழு மாகாணங்களில் வாழ்கின்றனர். ஊவா மாகாணமே மிகக்குறைவான வீதத்தையும் தொகையையும் கொண்டுள்ளது. வடக்கு, தெற்கு, சப்பிரகமுவா, வடமத்திய மாகாணங்களில் முஸ்லீம்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரேயளவானதாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை I.

## மத அடிப்படையில் இலங்கையின் குடிசனத்தொகை 1871—1981

| ஆண்டு | பௌத்தர்கள் தொகை | பௌத்தர்கள் வீதம் | இந்துக்கள் தொகை | இந்துக்கள் வீதம் | முஸ்லீம்கள் தொகை | முஸ்லீம்கள் வீதம் | கிறிஸ்தவர்கள் தொகை | கிறிஸ்தவர்கள் வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1871 | 15,20,575 | 63.3 | 465,944 | 19.4 | 171,542 | 7.1 | [redacted] | — |
| 1881 | 16,98,070 | 61.5 | 593,630 | 21.5 | 195,776 | 7.2 | 277,977 | 10.1 |
| 1891 | 18,77,043 | 62.4 | 615,932 | 20.5 | 211,995 | 7.0 | 302,127 | 10.1 |
| 1901 | 21,41,404 | 60.1 | 826,826 | 23.2 | 246,118 | 6.9 | 349,239 | 9.7 |
| 1911 | 24,741,70 | 60.3 | 938,260 | 22.8 | 283,631 | 6.9 | 409,200 | 10.0 |
| 1921 | 27,69,805 | 61.6 | 982,673 | 21.8 | 302,532 | 6.7 | 443,400 | 9.8 |
| 1946 | 42,94,932 | 64.5 | 1,320,352 | 19.8 | 436,556 | 6.6 | 603,235 | 9.1 |
| 1953 | 52,09,439 | 64.5 | 1,610,561 | 19.9 | 541,506 | 6.7 | 724,461 | 8.9 |
| 1963 | 70,03,287 | 66.2 | 1,958,394 | 18.5 | 724,043 | 6.8 | 883,900 | 8.4 |
| 1971 | 85,67,570 | 67.4 | 2,239,310 | 17.6 | 909,941 | 7.1 | 996,687 | 7.8 |
| 1981 | 102,92,586 | 69.3 | 2,295,858 | 15.5 | 1,134,556 | 7.6 | 1,111,727 | 7.5 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை II

## மாகாண அடிப்படையில் முஸ்லீம்களின் குடிசனத்தொகை: 1981

| மாகாணம் | தொகை | வீதம் |
|---|---|---|
| மேல் மாகாணம் | 279587 | 24.64 |
| மத்திய மாகாணம் | 168040 | 14.81 |
| தென் மாகாணம் | 52545 | 4.54 |
| வட மாகாணம் | 54828 | 4.83 |
| கிழக்கு மாகாணம் | 317177 | 27.96 |
| வடமேல் மாகாணம் | 114459 | 10.09 |
| வடமத்திய மாகாணம் | 61422 | 5.41 |
| ஊவா மாகாணம் | 34509 | 3.04 |
| சப்பிரகமுவா மாகாணம் | 51989 | 4.58 |
| | 1134556 | 100.00 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புக்கள்

அட்டவணை III இல் 1981 ஆம் ஆண்டு குடிசனக்கணிப்பு மாவட்ட அடிப்படையில் முஸ்லீம்களின் பரம்பல் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அவ்வவ்மாவட்ட மக்கள் தொகையில், முஸ்லீம்களின் தொகையும் அவர்களது உபபிரிவான இலங்கைச் சோனகர், மலாயர் வீதங்களும் காட்டப்பட்டுள்ளன. மாவட்ட அடிப்படையில் முஸ்லீம்களின் பரம்பலை நோக்கின் எண்ணிக்கையிலும், வீதாசாரத்திலும் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களே முக்கியமானவைகளாகக் காணப்படுகின்றன. முஸ்லீம்கள் இலங்கையின் எந்தவொரு மாவட்டத்திலும் பெரும்பான்மையினராக இல்லை. அம்பாறை மாவட்டக் குடிசனத் தொகையில் முஸ்லீம்கள் 41.5வீதமாக இருப்பதுடன், சிங்களவர், தமிழரிலும் பார்க்கக் கூடுதலாகவும் இருக்கின்றனர். கொழும்பு மாவட்டத்திலேயே முஸ்லீம்கள் எண்ணிக்கையில் கூடுதலாக வாழ்கின்ற பொழுதும் அம் மாவட்டத்தின் மொத்தக் குடிசனத்தொகையில் இவர்கள் 9.5 வீதமாகவே இருக்கின்றனர். நாட்டின் மொத்த மலாயரில் 46.2 வீதத்தினர் கொழும்பு மாவட்டத்தில் இருப்பது முக்கிய சிறப்பம்சமாகும். கொழும்பு மாவட்டத்துக்கு அடுத்ததாக கண்டி, களுத்துறை மாவட்டங்களில் எண்ணிக்கையில் கூடுதலான முஸ்லீம் மக்கள் வாழ்கின்றனர். முல்லைத்தீவு, மொனறாகலை, வவுனியா, அம்பாந்தோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களும் பத்தாயிரத்துக்குக் குறைவான முஸ்லீம்களைக் கொண்டுள்ளன. நுவரெலியா, யாழ்ப்பாணம், பொலனறுவை, இரத்தினபுரி மாத்தறை ஆகியன 10,000-20,000 இடைப்பட்ட தொகையையும் மாத்தளை, காலி, மன்னார், பதுளை ஆகியன 20,000-30,000 இடைப்பட்ட தொகையையும் கேகாலை, அநுராதபுரம், கம்பஹா ஆகியன 30,000-50,000 இடைப்பட்ட முஸ்லீம்களையும் ஏனைய மாவட்டங்கள் 50,000 மேற்பட்ட தொகையையும் கொண்டுள்ளன. கொழும்பு, அம்பாறை, கண்டி ஆகிய மாவட்டங்கள் 1,00,000க்கு அதிகமான முஸ்லீம்களைக் கொண்டுள்ளன.

இலங்கை முஸ்லீம்களின் பரம்பலை மாவட்ட அடிப்படையில் நுணுக்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட அடிப்படையில் முஸ்லீம்களின் குடிசனத்தொகை: 1981

| மாவட்டம் | மாவட்டக் குடிசனத் தொகை | இலங்கைச் சோனகர் | | மலாயர் | | முஸ்லீம்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை | விதம் | தொகை | விதம் | தொகை | விதம் |
| கொழும்பு | 1698322 | 140461 | 8.3 | 20041 | 1.2 | 168956 | 9.5 |
| கம்பஹா | 1389490 | 45807 | 3.3 | 8077 | 0.6 | 47850 | 3.4 |
| களுத்துறை | 827189 | 61706 | 7.5 | 712 | 0.1 | 62781 | 7.6 |
| கண்டி | 1126296 | 112052 | 9.9 | 2643 | 0.2 | 125646 | 11.2 |
| மாத்தளை | 357441 | 25836 | 7.2 | 514 | 0.1 | 26603 | 7.4 |
| நுவரெலியா | 522219 | 14668 | 2.8 | 1113 | 0.2 | 15791 | 3.0 |
| காலி | 814579 | 25896 | 3.2 | 158 | 0.0 | 26359 | 3.2 |
| மாத்தறை | 644231 | 16457 | 2.6 | 61 | 0.0 | 16853 | 2.6 |
| அம்பாந்தோட்டை | 424102 | 4732 | 1.1 | 4380 | 1.0 | 9333 | 2.2 |
| யாழ்ப்பாணம் | 831112 | 13757 | 1.7 | 46 | 0.0 | 14169 | 1.7 |
| மன்னார் | 106940 | 28464 | 26.6 | 23 | 0.0 | 30079 | 28.1 |
| வவுனியா | 95904 | 6640 | 6.9 | 31 | 0.0 | 6764 | 7.1 |
| முல்லைத்தீவு | 77512 | 3777 | 4.9 | 17 | 0.0 | 3816 | 4.8 |
| மட்டக்களப்பு | 330899 | 79377 | 24.0 | 49 | 0.0 | 79662 | 24.0 |
| அம்பாறை | 388786 | 161481 | 41.5 | 179 | 0.0 | 161754 | 41.5 |
| திருக்கோணமலை | 2556790 | 74403 | 29.0 | 735 | 0.3 | 75761 | 29.5 |
| புத்தளம் | 493344 | 61343 | 12.4 | 1201 | 0.1 | 64213 | 13.0 |
| குருணாகலை | 1212755 | 47959 | 3.9 | 882 | 0.1 | 50246 | 4.1 |
| அநுராதபுரம் | 587822 | 41833 | 7.1 | 266 | 0.0 | 43801 | 7.1 |
| பொலனறுவை | 262753 | 17091 | 6.5 | 132 | 0.1 | 17621 | 6.7 |
| பதுளை | 642893 | 26808 | 4.2 | 1300 | 0.2 | 28759 | 4.5 |
| மொனராகலை | 279743 | 5322 | 1.9 | 152 | 0.1 | 5750 | 2.1 |
| இரத்தினபுரி | 796468 | 13531 | 1.7 | 410 | 0.1 | 15441 | 1.7 |
| கேகாலை | 682411 | 34832 | 5.1 | 251 | 0.0 | 3654 | 81.5 |

மூலம்: இலங்கைக் குடிசனத் தொகை: 1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை IV

## மாவட்ட அடிப்படையில் முஸ்லீம்களின் நகர/கிராம வீதங்கள்: 1981

| மாவட்டம் | நகரம் | | கிராமம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | தொகை | வீதம் | தொகை | வீதம் | |
| கொழும்பு | 166605 | 98.6 | 2351 | 01.4 | 168[illegible]59 |
| கம்பஹா | 22850 | 47.8 | 25000 | 52.2 | 47850 |
| களுத்துறை | 44815 | 71.4 | 17966 | 28 6 | 62781 |
| கண்டி | 27316 | 21.7 | 98330 | 78.3 | 125646 |
| மாத்தளை | 2746 | 32.9 | 17857 | 67.1 | 26603 |
| நுவரெலியா | 4278 | 27.1 | 11513 | 72.9 | 15791 |
| காலி | 18890 | 71.7 | 7469 | 28 3 | 26359 |
| மாத்தறை | 8108 | 48.1 | 8745 | 51.9 | 16853 |
| அம்பாந்தோட்டை | 5459 | 58.5 | 3874 | 41.5 | 9333 |
| யாழ்ப்பாணம் | 12342 | 87.1 | 1827 | 12.9 | 14169 |
| மன்னார் | 3494 | 11.6 | 26585 | 88.4 | 30079 |
| வவுனியா | 1520 | 22.5 | 5236 | 77.5 | 6764 |
| முல்லைத்தீவு | 690 | 18.1 | 3126 | 81.9 | 3816 |
| மட்டக்களப்பு | 34806 | 43.7 | 44856 | 56.3 | 79662 |
| அம்பாறை | 28449 | 17.6 | 133305 | 82.4 | 161754 |
| திருகோணமலை | 32478 | 42.7 | 43[illegible]83 | 57.3 | 75761 |
| குருணாகலை | 6366 | 09.9 | 57847 | 90.1 | 64213 |
| புத்தளம் | 20145 | 40.0 | 30101 | 60 0 | 50246 |
| அநுராதபுரம் | 4177 | 09.5 | 39624 | 90.5 | 43801 |
| பொலனறுவை | 628 | 03.7 | 16993 | 96.3 | 17621 |
| பதுளை | 6100 | 28.2 | 20659 | 71.8 | 28759 |
| மொனறாகலை | 168 | 02.9 | 5582 | 97.1 | 5750 |
| இரத்தினபுரி | 6167 | 39.9 | 9274 | 60.1 | 15441 |
| கேகாலை | 14082 | 38.5 | 22466 | 61.5 | 36548 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்பு 1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கின் நாட்டின் மொத்த முஸ்லீம் களில் கொழும்பு (14.9%) அம்பாறை (14.3%) கண்டி (11.0%) மட்டக்களப்பு (7.0%) திருகோணமலை (6.8%) புத்தளம் (5.7%) களுத்துறை(5.5%) குருனுகல் (4.5%) ஆகிய எட்டு மாவட்டங்கள் மொத்தத் தொகையில் 69.7 வீதத்தைக் கொண்டுள் ளன. கொழும்பு, அம்பாறை, கண்டி ஆகிய மூன்று மாவட்டங்களும் மொத்தத் தொகை யில்40 வீதத்தைக் கொண்டுள்ளன.

முஸ்லீம்களின் குடிசனப்பரம்பல், மாவட்டங்களுக்குள் எவ்வாறு பரம்பியிருக் கின்ற தென்பதை நகர முஸ்லீம்களின் குடித்தொகையை நகர அடிப்படையிலும் கிராமிய முஸ்லீம்களின் குடித்தொகையை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அடிப்படை யிலும் நோக்கலாம். இலங்கையின் முஸ்லீம் களுள் 42.4 வீதத்தினர் நகரப் புறங்களில் வாழ்கின்றனர். எனினும் இலங்கையின் குடிசனத்தொகையில் இவர்களின் பங்கு 7.6 ஆக இருக்கும்பொழுது நகரக் குடிசனத் தொகையில் இவர்களின் பங்கு 15 வீதமா கும். இலங்கையின் ஏனைய இனங்களின் நகராக்கப் பண்புடன் இவர்களது நிலையை ஒப்பிடும்பொழுது, முஸ்லீம்கள் கூடுதலான நகராக்கப்பண்பு பெற்றவர்களாகக் காணப் படுகின்றனர்.

இலங்கையில் 1981 இல் 135நகரங்கள் இருந்தன. இந் நகரங்களில் முஸ்லீம்களின் சனத்தொகையை நோக்கின் வீத அடிப்ப டையில் காத்தான்குடி, கிண்ணியா நகர் கள் மிகக்கூடிய முஸ்லீம் குடிசனத்தொகை யைக்கொண்டிருக்க, எண்ணிக்கையில் கொழும்பு நகரிலேயே கூடுதலான முஸ்லீம் கள் இருந்தனர். இலங்கை நகரங்களில் முஸ்லீம்களின் வீதாசார இயல்பு பின்வரு மாறு:—

| வகுப்பு | (நகரக்குடிசனத்தொகையில் முஸ்லீம்களின் வீதம்) | நகரங்கள் |
|---|---|---|
| I | 90-100 | காத்தான்குடி, கிண்ணியா (2) |
| II | 80-90 | சம்மாந்துறை, தர்கா நகர் (2) |
| III | 70-80 | மூதூர், ஏறூவூர், பேருவளை (3) |
| IV | 60-70 | புத்தளம், மாவனல்லை, கல்முனை, கல்பிட்டி (4) |
| V | 50-60 | இல்லை (0) |
| VI | 40-50 | அம்பாந்தோட்டை (1) |
| VII | 30-40 | நாவலப்பிட்டி, ரத்தோட்டை, பசற, வறக் காப்பொலை, கம்பளை (5) |
| VIII | 20-30 | கொழும்பு, கொச்சிக்கடை, களுத்துறை, கெசல்வத்தை, தெல்தெனிய, காலி, மன்னார், மாதம்பை, கெக்கிராவ, அப்புத்தளை, ஹாலிஎல, றம்புக்கண (12) |
| IX | 15-20 | கடுகண்ணுவ, மாத்தளை, ஹற்றன்டிக்கோயா, குருநாகல, லுணுகல, வெலிமட, பலாங்கொட, றக்குவானை, தெகிவளை. (9) |
| X | 10-15 | நீர்கொழும்பு, வனுத்தமுல்ல, அழுத்கம, கண்டி, புசல்லாவ, பூண்டல்ஓயா, கந்தளாய், நாத்தாண்டிய, பதுளை, பண்டாரவளை, காவத்தை, எட்டியாந்தோட்டை, தலுகம(13) |
| XI | 5-10 | கொலன்னுவ, பிலியகொட, மினுவாங்கொட, வத்தேகம, கல்லேவல, தம்புள்ள, நுவரெலிய, தலவாக்கெல, தொடந்துவ, பலப்பிட்டிய, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பா ணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோண மலை, குளியாப்பிட்டி, சிலாபம், அனுராத புரம், இரத்தினபுரி, முல்லைத்தீவு, கொட்டிகா வத்தை, வத்தேகம (24) |
| XII | 0-5 | இப்பிரிவில் 56 நகரங்கள் இருக்கின்றன. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நகரக்குடிசனத்தொகையில் முஸ்லீம்கள் கொண்டுள்ள பங்கினை நோக்கின் பன்னிரண்டு நகர்களில் இவர்கள் பெரும்பான்மையாக வாழுகின்றனர். இவற்றுள் ஆறு நகரங்கள் கிழக்கு மாகாணத்திலும் இரு நகரங்கள் புத்தளம் மாவட்டத்திலும் இரண்டு களுத்துறை மாவட்டத்திலும் அமைந்துள்ளன. கிழக்குக் கரையோரம், மத்தியமலைநாடு ஆகிய பகுதிகளில் உள்ள நகரங்களின் குடிசனத்தொகையில் முஸ்லீம்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

அட்டவணை IV இல், மாவட்ட அடிப்படையில் முஸ்லீம் மக்களின் கிராம-நகர வீதங்கள் காட்டப்பட்டுள்ளன. கொழும்பு, யாழ்ப்பாணம், களுத்துறை, காலி ஆகிய மாவட்டங்களில் வாழும் முஸ்லீம்களில் மிகக்கூடிய பங்கினர் நகர்ப்புறங்களில் வாழ்கின்றூர்கள். அம்பாந்தோட்டை, கம்பஹா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வாழும் முஸ்லீம்களில் 40 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் நகர்ப்புறங்களிலே வாழ்கின்றூர்கள். மொனருகலை மாவட்டத்தில் உள்ள மொனருகலை நகரில் 168 முஸ்லீம்களே வாழ்கின்றனர். பொலனறுவை, குருநாகல், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் வாழும் முஸ்லீம்கள் குறைந்தளவில் நகரங்களில் வாழ்கின்றனர்.

முஸ்லீம்கள் மிகப்பெரும்பான்மையாக இருக்கும் நகரங்கள் இஸ்லாமிய கலாசாரத்தைப் பிரதிபலிப்பனவாக இருக்கின்றன. ஏனைய நகரங்களில், முஸ்லீம்கள் நகரில் ஒருசில பகுதிகளில் வாழும் இயல்பினைக் காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக, யாழ்ப்பாண நகரில் சோனகத் தெருப்பகுதி. இவர்களுடைய பரம்பல் பண்பு நகரங்களின் பருமனிற்கேற்ப வேறுபடும் போக்கினைக்காணலாம் பெரிய நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட முஸ்லீம் பகுதிகள் காணப்படுவதனையும் சிறிய நகரங்களில் அநேகமாக ஒரு பிரதான முஸ்லீம் வாழிடப்பரப்பு இருப்பதனையும் காணலாம். கொழும்பு மாநகரில் முஸ்லீம்கள் 24 வீதமாக இருந்தபோதிலும் இலங்கையில் வேறு எந்த நகரிலும் இருக்கும் முஸ்லீம்களின் எண்ணிக்கையிலும் பார்க்க இந்நகரிலேயே அவர்கள் மிகக்கூடுதலாக வாழ்கின்றனர். 1981 இல் கொழும்பு நகரில் 142,292 முஸ்லீம்கள் இருந்தனர். இத்தொகை கொழும்பு மாவட்ட முஸ்லீம்களின் தொகையில் 84.2 வீதமாகும். மேலும் கொழும்பு நகரில் உள்ள முஸ்லீம்கள் இலங்கை முஸ்லீம்கள் தொகையில் 12.5 வீதமாகும். கொழும்பு நகரில் இவர்கள் பரவி வாழ்கின்ற போதும் சில பகுதிகளில் குறிப்பாக மெசஞ்சர்வீதி, கிராண்ட்பாஸ், நியூபஸார், மாளிகாவத்தை, அளுக்கடை, கொச்சிக்கடை தெற்கு, கொம்பனித்தெரு, மருதானை போன்ற பகுதிகளில் முஸ்லீம்கள் கூடிய தொகையில் ஆனல் சிறிய பரப்பில் செறிந்து காணப்படுகின்றனர்.

கிராமிய முஸ்லீம் மக்கள் பரம்பலை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அடிப்படையில் நோக்குமிடத்து, இலங்கையில் 1981 இல் இருந்த 235 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் கிராம குடிசனத்தொகையில் 49 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கிராமிய முஸ்லீம்கள் 5 வீதத்திற்கு மேல் உள்ளனர்.

அட்டவணை V.

## உதவி அரசாங்க அதிபர் பிரிவு அடிப்படையில் கிராமியக் குடிசனத்தொகையில் முஸ்லீம்களின் வீதம்

| வகுப்பு | உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எண்ணிக்கை | வகுப்பு | உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 0-5% | 186 | 40-50% | 1 |
| 5-10% | 13 | 50-60% | - |
| 10-20% | 17 | 60-70% | 5 |
| 20-30% | 6 | 70-80% | 1 |
| 30-40% | 4 | 80-90% | 2 |

மூலம்: இலங்கைக் குடிசனக்கணிப்பு, 1981.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய முஸ்லீம்கள் பெரும்பான்மை யாக இருக்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுள் ஒன்றைத்தவிர ஏனையன கிழக்கு மாகாணத்திலேயே அமைந்துள்ளன. வட மாகாணத்தில் முசலிப்பத்து உதவி அர சாங்க அதிபர் பிரிவு ஒன்றே முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரிவாகும். கம்பஹா மாவட்டத்தில் அத்தனகல, பிய கம ஆகிய இரு பிரிவுகளில் முஸ்லீம்கள் குறிப்பிடத்தக்களவு உள்ளனர். அத்தன கல்ல உதவி அரசாங்க அதிபர் பிரிவில் திஹாரியவும், பியகம உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மல்வானையும் பிரதான முஸ்லீம் கிராமங்களாகும். களுத்துறை மாவட்டத்து முஸ்லீம்களில் 28.6 வீதத்தி னர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். பண்டாரகம (4.9%), மத்துகம (6.9%) உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே கூடுதலான முஸ்லீம் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. காலி மாவட்டத்தில் லபுதுவ (12.8%) உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே முஸ்லீம் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. மாத்தறை மாவட்டத் தில் திக்குவெல பிரதான கிராமிய முஸ்லீம் குடியிருப்பாகும். அம்பாந்தோட்டையில் பல சிறிய கிராமிய முஸ்லீம் குடியிருப்புக் கள் காணப்படுகின்றன. இம்மாவட்டத் தில் இலங்கைச் சோனகரும் மலாயரும் ஏறக்குறைய சமமான எண்ணிக்கையில் இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கண்டி மாவட்டத்தில் பாத்ததும்பறை (18.6%), பாத்தஹேவாஹெட்ட (12%), உடுநுவர (21.7%), மெததும்பற (18.9%), அரிஸ்பத்து (22.5%) ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பல முஸ்லீம் கிராமங் கள் காணப்படுகின்றன. கண்டியில் முக்கிய மான முஸ்லீம் கிராமங்களாவன அக்குறணை, மடவளபஸார், கலகெதர, உடத்தலவின்ன, புளுகோத்தன்னை ஆகியனவாகும். மாத்தளை மாவட்டத்தில் உக்குவலை (18.6%), கலேவல (10.6%) உதவி அரசாங்க அதிபர் பிரிவு களிலேயே முஸ்லீம் குடியிருப்புக்கள் காணப் படுகின்றன. உக்குவல முக்கியமான முஸ் லீம் கிராமமாகும்.

மன்னார் மாவட்டத்தில் முசலிப்பத்து (62.6%), மன்னார்தீவு (31.8%), மாந்தை (21.2%) ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் முஸ்லீம் குடியிருப்புக்கள் காணப் படுகின்றன. எருக்கலம்பிட்டி, மன்னார் கிழக்குக் கிராமங்கள், விடத்தல்த்திவு, பெரியமடு ஆகியன முக்கியமான முஸ்லீம் குடியிருப்புக்களாகும். வவுனியா மாவட் டத்திற் செட்டிக்குளம் (17.1%) பிரிவி லேயே முஸ்லீம் கிராமங்கள் காணப்படு கின்றன.

கிழக்கு மாகாணத்திலேயே கிராமிய முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஏழு காணப்படுகின்றன. பொத்துவில் (67.7%), அக்கரைப்பற்று (61.7%), அட்டாளைச்சேனை (87.3%), நிந்தவூர் (71.9%), கரவாகுப்பற்று (68.7%), சம்மாந்துறைப்பற்று (63.7%), மண்முனை வடக்கு பற்று (2.97%), ஏறாவூர் பற்று (14.6%), கோறளைப்பற்று (44.3%), ஆகியன முஸ்லீம்கள் வாழும் முக்கிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகும். திருகோ ணமலை மாவட்டத்தில் கிண்ணியா (88.6%), தம்பலகாமம் (30.4%), குச்சவெளி (30.2%), மூதூர் (22.1%), கந்தளாய் (11.3%) ஆகியன முஸ்லீம்கள் வாழும் முக்கிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு களாகும்.

புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி (35.4%), ஆராச்சிக்கட்டு (13.2%), புத்த ளம் நகரும் அயற்பகுதி (7.2%) ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் முஸ்லீம் குடிச னத்தொகையில் முக்கியமாகவுள்ளன. இம் மாவட்டத்தில் காணப்படும் கிராமிய முஸ் லீம் குடியிருப்புக்கள் கரையோரப்பகுதியைச் சார்ந்தனவாகவே இருக்கின்றன. குருணாகல் மாவட்டத்தில் கிராமிய முஸ்லீம் குடிசனத் தொகை பரவலாகக் காணப்படுகின்றது. குளியாப்பிட்டி (10%), குருணாகல் (7%), றெதிகம (7.7%), ஹெட்டிப்பொல (5%), பிங்கிரிய (5%) ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் குறிப்பிடத்தக்களவு முஸ்லீம்கள் வாழ்கின்றனர். பறகஹதெனிய, மடிகேமிற்றியால, கொட்டம்பிட்டிய ஆகி யன குருணாகல் மாவட்டத்தில் முக்கிய முஸ்லீம் கிராமங்களாகும்.

அநுராதபுர மாவட்டத்தில் ஹொற வப்பொத்தானை (21.5%), கஹட்டகஸ்தி கிலிய (16.3%), கெக்கிராவ (12.9%),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாகலை (7.6%) ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் பொலனறுவை மாவட்டத்தில் தம்மன்கடுவ (12.3%), லால்காபுரி (17.1%) ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் குறிப்பிடத்தக்க முஸ்லிம் குடித்தொகையைக் கொண்டுள்ளன. பதுளை மாவட்டத்தில் வெலிமடை உதவி அரசாங்க அதிபர் பிரிவும் (13%) மொனருகலை மாவட்டத்தில் மெதகம உதவி அரசாங்க அதிபர் பிரிவும் (0.5%) இரத்தினபுரி மாவட்டத்தில் கெலியகொட உதவி அரசாங்க அதிபர் பிரிவும் (5%) கேகாலை மாவட்டத்தில் மாவனல்ல (15.6%), அறநாயக்கா (6.4%) உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் முஸ்லீம்கள் வாழும் முக்கிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகும்.

முஸ்லீம்கள் தொழில் ரீதியாக வியாபார, சேவைத்துறைகளிலேயே கூடுதலாக ஈடுபட்டிருப்பதாகக் கருதினும் வியாபாரம், மீன்பிடித்துறையிலும் குறிப்பிடத்தக்களவில் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, கண்டி, களுத்துறை, கம்பஹா அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் வாழும் முஸ்லீம் மக்களில் கூடுதலானோர் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனரெனத் தெரியவருகிறது. அம்பாறை, மட்டக்களப்பு திருகோணமலை, மன்னார், வவுனியா, புத்தளம், குருணாகல், அநுராதபுரம், பொலனறுவை போன்ற மாவட்டங்களில் உள்ள முஸ்லீம்களில் கூடிய வீதத்தினர் விவசாயம், மீன்பிடித்துறைகளில் ஈடுபட்டுள்ளனர். அரச துறையிலும், அரச கூட்டுத்துறையிலும் முஸ்லீம்களின் எண்ணிக்கை அவர்களது தேசிய விதாசாரத்திலும் குறைவாகவேயுள்ளது. 1985 ஆம் ஆண்டு எடுத்த அரச துறையில் வேலை செய்வோரது எண்ணிக்கையின்படி அரச பொதுத்துறையில் முஸ்லீம்கள் 3.72 வீதமாகவும், அரச கூட்டுத்தாபனத்துறையில் 2.85 வீதமாகவும் இருக்கக் காணப்பட்டது. மேலும் அரச பொதுத்துறையில் உள்ள பெண் ஊழியர்களில், முஸ்லீம்களின் பங்கு 2.95 வீதமாகவும் கூட்டுத்தாபனத் துறையில் 1.31 வீதமாகவும் இருக்கக் காணப்பட்டது. ஆகவே அரச பொதுத்துறையில் முஸ்லீம்கள் தங்களுக்குரிய பங்கை இன்னமும் பெறவில்லை எனக்கருத இடமுண்டு.

இலங்கையில் ஏற்பட்டுவரும் சமூக-பொருளாதார மாற்றங்கள் முஸ்லீம்களது குடிசனப்பண்புகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. நாட்டின் குடிசனப்பரம்பல் மாற்றம் குறித்த சில பிரதேசங்களிலும், நகரங்களிலும் முஸ்லீம்களின் சார்புப்பலத்தையும் முக்கியத்துவத்தையும் செல்வாக்குப்படுத்தி வருகின்றன. மேலும், புதிய நிர்வாக அமைப்புகளான மாகாண சபை பிரதேச சபை போன்றவற்றில் பிரதிநிதித்துவம் எப்படி அமையும் என்று முஸ்லீம் மக்கள் ஐயப்பாடு கொண்டுள்ளார்கள்.

நாட்டில் பொருளாதார அபிவிருத்தி, நிலக்குடியேற்றம், கைத்தொழில் இடவமைவுகள் போன்றவற்றினால் நாட்டின் பல பகுதிகளின் குடிசனத்தொகையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம், வடமேல்மாகாணம் ஆகியன 1950க்கு பின்னர் துரித குடிசனத்தொகை அதிகரிப்பைப் பெற்றுள்ளன. அம்பாறை, புத்தளம், திருகோணமலை போன்ற மாவட்டங்களில் நிலக்குடியேற்றம், கைத்தொழில் நடவடிக்கைகளினால் குடிசனத்தொகை துரிதமாக அதிகரித்துள்ளதுடன் இன விகிதாசாரத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட குடிசனத்தொகை அதிகரிப்பின் விளைவால் முஸ்லீம்களின் விதாசாரம் குறைவடைந்து சென்றுள்ளதைக் காணமுடிகின்றது. நாட்டில் ஏற்பட்டுவரும் குடிசன இடப்பெயர்வின் விளைவால் முஸ்லீம்கள் சில பகுதிகளில் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையாக அல்லது முக்கியமாக இருந்த நிலையிலிருந்து குறைவடைந்து செல்லும் போக்கினைக் காணலாம். முஸ்லீம்களும் பிற பகுதிகள், நகரங்களுக்குச் சென்று குடியேறி வருவதால் இவர்களது நாடளாவிய பரம்பல் பண்பும் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் பல இன மக்கள் கலந்து வாழும் இயல்பு அதிகரித்து வருகின்றது.

முஸ்லீம்கள் கூடுதலாக நகரப் பகுதிகளிலும் வளர்ச்சி பெற்ற நெருக்கமான கிராமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப் பகுதிகளிலும் வாழ்வதனைக் காணமுடிகின்றது. முஸ்லீம்களது குடிசனப் பரம்பல் ஒழுங்கு இவர்கள் மத்தியில் காணி, வீட்டு வசதித் துறைகளில் பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. இவர்களில் பெரும்பாலானோர், வர்த்தகம், சில்லறைவியாபாரங்களில் ஈடுபாடு கொண்டதால் நில நாட்டம் குறைவாக இருந்ததும் இவர்கள் மத்தியில் நிலவுடமை குறைவாக இருப்பதற்குக்காரணமாக இருக்கலாம். இவர்கள் வரலாற்று ரீதியில் முதலில் வர்த்தகத்துறையுடன் இணைந்தவர்களாக இருந்ததால் சிங்களவர், தமிழர் போல் நிலத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதாரத்தை ஆரம்பத்தில் பெற்றிருக்காதது இவர்கள் மத்தியில் நிலவுடமை குறைவாகக் காணப்படுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். மேலும் சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட நில அபிவிருத்தித் திட்டங்கள், நிலக்குடியேற்றங்கள், வீடமைப்புத் திட்டங்கள் போன்றவற்றில் முஸ்லீம்கள் குறிப்பிடத்தக்களவு பலனைப் பெறவில்லை. மேலும் நிலக்குடியேற்றத்திட்டம், வீட்டுத் திட்டங்கள் போன்றன இவர்களது கலாசாரப் பின்னணிக்கேற்ப அமையாததும் பெரிய குறைபாடாகும். குடியிருப்புக்காணி, வீட்டுத்துறைகளில் முஸ்லீம்கள் எதிர் நோக்கும் பிரச்சினை சிங்களவர், இலங்கைத் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் பரிணாமத்திலும் பார்க்கக்கூடுதலாக உள்ளதெனக் கருதலாம்.

முஸ்லீம்களின் குடியிருப்புகள் பல ஆரம்பத்தில் சிறு சேவை நிலையங்களாக இருந்து வளர்ச்சி பெற்று பெரிய நகரங்களாக மாறுகின்றன. இந் நகர வளர்ச்சியின் மூலம் குறிப்பாக வியாபாரப் பகுதிகள் விரிவடையும் போது நகரின் வாழிடப் பகுதிகள் வர்த்தகப் பகுதிகளாக மாறுகின்றன. இத்தகைய நகர வளர்ச்சிச் செயல் முறையின் விளைவாகப் பல நகரங்களில் முஸ்லீம்கள் வாழும் பகுதிகள் மக்கள் குடியிருப்புக்கு ஏற்றதல்லாத பகுதிகளாக மாறியிருப்பதனைக் காணலாம். மேலும் நாட்டின் பல நகரங்களில் முஸ்லீம்கள் ஓரிரு வட்டாரங்களுள் நெருங்கி வாழ்வதனையும் வாழ்விடப் பகுதிகளை விஸ்தரிக்க முடியாதிருப்பதனையும் காணலாம். பல நகரங்களில் முஸ்லீம்கள் வாழும் பகுதிகள் முடுக்குகளாகவும், சேரித்தன்மை கொண்டனவாகவும் காணப்படுகின்றன.

இலங்கையில் முஸ்லீம்கள் பரவியிருக்கும் இடஞ்சார்பு ஒழுங்கு இவர்களது சமூக பொருளாதார அரசியல் நடவடிக்கைகளைப் பெரிதும் செல்வாக்குப்படுத்தும் காரணியாக விளங்குகின்றது. இவர்கள் நாடளாவி வாழ்வதாலும், நகரச்சார்புத் தொழில்களைக் கூடுதலாக மேற்கொண்டிருப்பதாலும் தாம் வாழும் பிரதேச மக்களுடன் பல நிலைப்பாடுகளில் ஒத்துப்போக வேண்டியவர்களாக இருக்கின்றனர். கூடிய குறைந்த எண்ணிக்கையில் சிங்களவர், தமிழர் மத்தியில் பரவி வாழும் நிலையில் தங்கள் மார்க்க தனித்துவத்தையும், கல்வி, கலாசாரத்தையும் பேணுவதில் மிகக் கூடிய கவனம் எடுக்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர். முஸ்லீம்கள் நாடளாவி வாழ்வதால் நாட்டின் வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பலன்களை இவர்களில் ஒரு பகுதியினராவது பெறக்கூடிய வாய்ப்புண்டு. மேலும் முஸ்லீம்கள் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் புலமை பெறுவதற்கும் நாட்டின் வெவ்வேறு பிரிவினரின் கலாசாரங்களைப் புரிந்து கொள்வதற்கும் இவர்களின் குடிசனப்பரம்பல் உதவியாகவிருக்கின்றது.

முஸ்லீம்கள் நாட்டில் பரவியிருக்கும் ஒழுங்கு காரணமாக இவர்கள் மத்தியில் பிரதேச உணர்வு குறைவாக இருக்கின்றது. எனினும் அண்மைக்காலத்தில் கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதேச உணர்வு வலுப்பெற்று வருகின்றது. கிழக்கு மாகாணக் குடிசனத்தொகையில் முஸ்லீம்கள் 32 வீதமாக இருப்பதுடன் ஏனைய மாகாணங்களை விட இம்மாகாணத்திலேயே கூடுதலான முஸ்லீம் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். அரசியல்ரீதியில் இம்மாகாணத்தவரே இலங்கை முஸ்லீம்களுக்குத் தலைமை தாங்க வேண்டும் என்ற உணர்வும், கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டே முஸ்லீம்களின் பெரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் கிழக்கு இலங்கை முஸ்லீம்கள் மத்தியில் வளர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதனைக்காணலாம். கிழக்கு மாகாணத்தில் ஒரு முஸ்லீம் மாகாணசபை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே. மேலும் கிழக்கு மாகாணத்திற்கு ஒரு தனியான மாகாணசபை அல்லது வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையில் கிழக்கு முஸ்லீம்கள் நிலை போன்ற பல விடயங்களில் கிழக்கு மாகாண முஸ்லீம்கள் மத்தியில் பிராந்திய உணர்வு வளர்வதனைக் காண முடிகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளை மேற்கு, ஏறுவூர், காத்தான்குடி ஆகிய மூன்று பிரதேச சபைகள் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். கரவாகுப்பற்று முழுவதையும் உட்படுத்திய பகுதியைக் கல்முனை மாநகரசபையாக மாற்றவேண்டுமென்ற கோரிக்கையும் வளர்ந்து வருவதனைக் காணலாம். இவ்வாறு வளர்ந்துவரும் பிராந்திய உணர்வின் விளைவால் வடக்குக்கிழக்கு முஸ்லீம்களுக்கும் ஏனைய பகுதி முஸ்லீம்களுக்கும் இடையே பல நிலைப்பாடுகளில் கருத்து வேறுபாடு ஏற்பட இடமுண்டு.

இலங்கை வாழ் முஸ்லீம்களின் வளர்ச்சிக்கு அரசியல் நிர்வாக அமைப்புகளில் முஸ்லீம்களின் நலன்களைப் பேணக்கூடிய முறையில் சில ஒழுங்கமைப்புக்கள் தேவையானதாகும். மேலும் இச்சமூகம் எதிர் நோக்கும் குறித்த சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சில நடவடிக்கைகள் அரசாலும், முஸ்லீம் சமூகத்தாலும் மேற்கொள்ளப்படவேண்டும். அவற்றுள் சில பின்வருமாறு:

(I) இலங்கைப் பாராளுமன்றத்தேர்தல் முறையில் வெட்டுப்புள்ளி 12.5 வீதமாக இருப்பதால் முஸ்லீம்கள் தனித்து தம் பிரதிநிதித்துவத்தைப் பெறுவது கடினமாகும். ஆகவே இவர்களுடைய பரம்பலை மனதிற்கொண்டு தேர்தல் வெட்டுப்புள்ளியை 12.5 வீதத்திலிருந்து 5 வீதமாகக் கொண்டுவருவது அல்லது அம்முறையை இல்லாது செய்தல் விரும்பத்தக்கது. இந்நிலை முஸ்லீம்களுக்கு மாத்திரமல்ல ஏனைய சிறுபான்மை இனத்தவருக்கும் சிறிய கட்சிகளுக்கும் பயனளிப்பதாகவும் இருக்கும். மாகாண சபைத்தேர்தல் முறையில் வெட்டுப் புள்ளி இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்கது.

(II) தொடர்ச்சியான பரந்த பரப்பில் இவர்கள் வாழாதிருப்பதால் தொடர்ச்சியற்ற பரப்புகளைச்சேர்த்து குறித்த தேவைக்கான நிர்வாகப் பிரிவுகளாக அமைக்க வழி செய்ய வேண்டும். மேலும் தனித்தனியான தொடர்ச்சியற்ற சிறு பரப்புகளை அல்லது நிறுவனங்களை இணைத்து மேல்மட்ட நிர்வாக அமைப்பை உருவாக்கக்கூடிய ஒழுங்கமைப்பு தேவையானதாகும். உ+ம்: முஸ்லீம் கொத்தணிப்பாடசாலை அமைப்பு.

(III) முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருக்கக்கூடிய கிராமசேவகர் பிரிவு, உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேசசபை, நகரசபை, மாநகரசபைகள் ஆகியன இவர்கள் செறிந்துவாழும் இடங்களில் ஏற்படுத்தப்படவேண்டும். இது இவர்களின் சமூக கலாசார நலன்களை உள்ளூர், பிராந்திய மட்டத்தில் பேண உதவியாக இருக்கும்.

(IV) முஸ்லீம்கள் குறிப்பாக நகர - வீட்டுத்துறையில் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையை வெளிக்கொண்டுவருவதுடன், அதனை தீர்ப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முஸ்லீம்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினையில் வீட்டுப் பற்றுக்குறையே முதல் இடத்தைப் பெற்றிருக்கின்றதெனலாம்.

(V) அரச நிலக்குடியேற்றம், காணி அபிவிருத்தி நடவடிக்கைகளில் முஸ்லீம்கள் தமக்குரிய பங்கினைப்பெற வேண்டும்.

(VI) இலங்கை முஸ்லீம் பெண்கள் சமூக - பொளாதார நிலையில் ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு பின்தங்கி நிற்கும் நிலையை மாற்ற நடவடிக்கைகள் தேவை.

(VII) அரச தொழிற்துறையில் முஸ்லீம்களின் பங்கு இவர்களின் குடிசனத்தொகை விகிதத்திலும் குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்!**


★ இலங்கை குடிசனக்கணிப்பு அறிக்கைகள் 1946, 1953, 1971, 1981.

★ M.M. UWISE. the spoken Dialect of the Muslims of Sri Lanka — 1974.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With The Best Compliments Of :

# M. M. IBRAHIM & SONS.

COCONUT, COPRA & CEYLON PETROLIUM
CORPORATION PRODUCTS

Colombo Road,
MADURANKULIYA.

With Best Compliments From

★ தொலைக்காட்சி பெட்டிகள்

★ வானொலிப் பெட்டிகள்,

★ சைக்கிள், மணிக்கூடுகள்,

மற்றும் மின்சார உபகரணங்கட்கு
நாடுங்கள்:

## சீப் சென்டர்

மில் வீதி,
வவுனியா.

With Best Compliments
From :

யாழ் பல்கலைக்கழக
முஸ்லிம் மஜ்லிசின்

"இன்கிலாப்" சஞ்சிகைக்கு

எமது வாழ்த்துக்கள்.

## N.A.T. & BROTHERS

161, Bazaar Street
Vavuniya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலங்களில் நம்பிக்கை ஏற்படக்கூடிய அத்திவாரங்கள் இடப்படாமையின் விளைவே இன்றைய தமிழ் — முஸ்லிம் இனக் கலவரங்களாகும்!

எம். வை. எம். சித்திக் B. Com (Hons), M. B. A.
(விரிவுரையாளர், யாழ் - பல்கலைக்கழகம்)

**முகவுரை:**

இன்று கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ்-முஸ்லிம் உறவு இலங்கையின் வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு பலவீனமடைந்துள்ளது. தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான சந்தேகப் பார்வையும், இனத்துவேஷமும், ஒருவரையொருவர் பழிவாங்கும் உணர்வும் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இக்கட்டுரையின் நோக்கம் தமிழ்-முஸ்லிம் உறவு பலவீனமடைந்திருப்பதற்கான பின்னணியினைச் சுருக்கமாக விளக்குவதாகும்.

இன்று தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அடிப்படைத்தேவையாகவுள்ளது இரண்டு இனங்களுக்குமிடையில் புரிந்துணர்வு ஏற்படுதலாகும். இப்புரிந்துணர்வுக்கு இரண்டு விடயங்கள் பற்றிய தெளிவு மிக அவசியமாகும். ஒன்று, இன்றைய பிளவுக்கான பின்னணியினை அறிந்து கொள்ளுதல்; மற்றது தமிழ்-முஸ்லிம் ஐக்கியத்தின் அடிப்படையும், அவசியமும் உணரப்படுதல். இக்கட்டுரையினை வாசிக்கும் தமிழ், முஸ்லிம் சகோதரர்கள் இவ்விடயங்கள் இரண்டு பற்றியும் சிந்திக்கத் தொடங்குவார்களேயானல், அதுவே இக்கட்டுரையினுல் ஏற்படும் மாபெரும் பெறுபேருகும்.

**அரசியற் பின்னணி:**

கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் உறவு பலவீனமடைந்திருப்பதற்கான காரணிகளைப் பரந்தளவில் இரண்டு வகைப் படுத்தலாம். ஒன்று, அரசியற்காரணி; மற்றது பொருளாதாரக்காரணி.

கடந்த ஒரு நூற்றுண்டு காலமாக, தமிழ்-முஸ்லிம் உறவு பலவீனமடைவதற்கு தமிழ், முஸ்லிம் அரசியல் வாதிகளின் சுய நலப்போக்கும், அரசியல் அதிகாரங்களை அபகரித்துக்கொள்ளும் முயற்சிகளும் காரணமாக உள்ளன. சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களை தமிழ் முஸ்லிம் உறவைப் பலவீனப் படுத்திய அரசியல் வாதிகளின் வரிசையில் முதலாம் நபராகக் கொள்வர். அவர் "முஸ்லிம்கள், இனத்தைப் பொறுத்தளவில் தமிழர்கள், சமயத்தைப் பொறுத்தவரையில் இஸ்லாமியர்கள்" எனும் கருத்தை முன்வைத்து அதனை வலியுறுத்தியும் வந்தார். முஸ்லிம்கள் தனிப்பட்ட ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்; தமிழர் என்ற இனத்திலுள்ள மூன்று சமயக்குழுக்களில் ஒன்று எனும் பொருள்படவே இக்கருத்தை அவர் முன்வைத்தார். சுருக்கமாக "முஸ்லிம்கள் எனப்படுபவர்கள் இஸ்லாமியத்தமிழர்கள்" என்பதே அவரது வாதமாக இருந்தது. தனது கருத்துகளுக்கு ஆதாரமாக முஸ்லிம்களின் வரலாற்றுப் பின்னணிகளை சேர். பொன். இராமநாதன் ஆதாரமாகக் காட்டினர். இராமநாதன் அவர்கள் அன்று தனித்துவமான தமிழ் மக்களின் தலைவர் எனக் கருதப்பட்டமையினுல், அவரின் கூற்று தமிழ் மக்களின் கூற்ருகவும் கொள்ளப்பட்டது. இக் கூற்று தனித்துவமான கலாசாரப்பண்பாட்டம்சங்களைக் கொண்டிருந்த முஸ்லிம் மக்களது மனதைப் பெரிதும் புண்படுத்தியது. (முஸ்லிம் ஒருவரைப்பார்த்து தமிழர் அல்லது சிங்களவர் என்று கூறுவது தன்னை இழிவு படுத்துவதாக முஸ்லிம்கள் கருதிய காலகட்டமது.) எனவே முஸ்லிம்களைப்பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் அவர்கள் அன்றைய கால கட்டத்தில் தமிழர்கள் என்று கூறியமை பெரும் ''பிரளயத்தையே'' உண்டுபண்ணி விட்டது; முஸ்லிம் தலைவர்கள் கொதித் தெழுந்தனர்; கண்டன அறிக்கைகளை வெளியிட்டனர்; பெரும் ஆர்ப்பாட்டங் களையே நடாத்தினர்.

சேர். பொன். இராமநாதன் அவர்க ளின், முஸ்லிம்கள் பற்றிய மேற்படி கருத்துக் களின் பின்னணிகளையும், அவரின் இக்கால கட்டத்திலான செயற்பாடுகளையும் ஆராய்ந்து கொண்டு செல்லும் போது அதில் அவரது அரசியல் நலன் கலந்திருப் பது உணரப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் யாவருக்கும் தானே தலைவர் எனவும், பிரதி நிதி எனவும் காட்டி, முஸ்லிம்களின் சார்பாக ஒரு பிரதிநிதித்துவம் உருவாவ தைத்தடுப்பதற்காக முஸ்லிம்களின் வரலாற் றைக் கூட திரித்துக்கூற அவர் தவறவில்லை.

சேர். பொன்.இராமநாதன் அவர்களின் கருத்துக்களின் நோக்கம் 1915ம் ஆண்டில் ஏற்பட்ட முஸ்லிம்-சிங்கள இனக்கலவரத் தின் பின் வெளிப்பட்டது. முஸ்லிம்கள் தமது கலாசாரரீதியான தனித்துவத்தைப் பாதுகாக்க முற்பட்டபோது சிங்கள-முஸ்லிம் இனக்கலவரம் மூண்டது. அப்போது பஞ் சாபிலிருந்து, அன்றைய தேசாதிபதியினல் வரவழைக்கப்பட்ட சீக்கியத்துருப்புக்கள் இனக்கலவரத்தைத் தணிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனுல் சிங்களவர்களும், சிங்களத்தலைவர்களுமாகப் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட னர். சிங்கள-முஸலிம் இனக்கலவரத்தின் போது தேசாதிபதி நடந்துகொண்டமுறை பக்கச்சார்பானதும, நீதியறறதுமென பிரித் தானியாவுக்கு மகாராணியிடம் முறையடச் சென்ற தூதுக்குழுவுக்கு இராமநாதன் அவர்கள் தலைமைதாங்கிச் சென்றுர்கள். அவர் திரும்பி வரும்போது சிங்களவர்கள் அவரைச் சுமந்து கொண்டு வந்தார்கள். அப்போது தான் சேர். பொன். இராமநா தன் அவர்களின் சுயரூபம் வெளிப்பட்டது. தமிழ் பேசும் இனம் முழுவதற்கும் தானே தலைவர் எனவும், அவர்களின் நலன்கட்குத் தானே பொறுப்பு எனவும் கூறிக்கொண் டிருந்த ராமநாதன் அவர்கள், முஸ்லிம் கட்கெதிராகவே தூது சென்றது தமிழ்-முஸ்லிம் உறவை மேலும் பலவீனப்படுத் தியது.

தமது அரசியல் நலன்கட்காக முஸ்லிம் களை ஒரு ஆயுதமாகப்பயன்படுத்தி, கடைசி நேரத்தில் ''கழுத்தறுக்கும்'' முயற்சி சேர். பொன். இராமநாதன் காலத்துடன் மட் டும் நிற்கவில்லை; அது பின்னர் வந்த தமிழ் அரசியற்கட்சித்தலைவர்களிடமும் காணப் பட்டது. இலங்கைவாழ் தமிழர்களின் எண்ணிக்கைபற்றிக்கூறும்போது, அல்லது தமிழர் பாரம்பரிய பிரதேசம்பற்றி கூறும் போது, அல்லது தமிழர்களின் பிரச்சினைகள் பற்றிக்கூறும்போது முஸ்லிம்களையும் சேர்த்துக் கொள்ளத்தவறாத தமிழ் அரசியற் கட்சித்தலைவர்கள், வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்தது என அன்று கருதப்பட்ட 1984ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கிய சர்வகட்சி மாநாட்டின்போது முஸ்லிம் களைக் ''காலால் உதைத்துத்தள்ளியது'' பெரும் துரோகம் என முஸ்லிம்கள் கருதி னுர்கள். சர்வகட்சி மாநாட்டின்போது தமிழர்விடுதலைக் கூட்டு முன்னணியின் கோரிக்கை ''அம்பாறை மாவட்டம் நீங்க லாக வட-கிழக்கு இணைந்த மாநிலம்' என்ப தாகவே இருந்தது. கடந்தகாலங்களில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மாநாடுகளில் ''இந்தநாட்டில் தமிழர்கட்கென ஒன்றும், முஸ்லிம்கட்கென ஒன்றுமாக இரண்டு சுயாட்சியமைப்புக்கள உருவாக வேண்டு மெனத்'' தீர்மானம் எடுத்தவர்கள், முஸ் லிம்களின் நலன்களும் எங்களது கோரிக்கை களின் அல்லது போராட்டங்களின் ஒரு பகுதி என ''உரககககததியவர்கள்'' முடி வில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற அம்பாறை மாவட்ட மக்களை தமது சர்வகட்சி மாநாட்டுக்கோரிக்கைகள் மூலம் ''நடுத்தெருவில்'' விட்டமை முஸ் லிம்கள் தமிழ்த் தலைவர்கள மீது மேலும் சந்தேகமும், பகைமையும்கொள்ள வழி வகுத்தது. அம்பாறை மாவட்டத்தை தமிழ் மாநிலத்தினுள்ளிருந்து நீக்கமுயன்ற தமிழ்த்தலைவர்கள், அம்பாறை மாவட்ட முஸ்லிம்களைப்பற்றியோ, அவர்களின் அரசி யல் எதிர்காலம்பற்றியோ எதுவும் குறிப்பி டாமல் விட்டதும், சர்வகட்சி மாநாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழ்த்தலைவர்கள், அவர்களது குழுவில் முஸ்லிம்கள் விசுவாசங்கொள்ளக் கூடியளவுக்கு முஸ்லிம்கள் சார்பான பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தாமையுங்கூ க் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன வாகும்.

தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டம் அகிம்சை வடிவத்திலிருந்து ஆயுதத்திற்கு மாறியபோது பல விடுதலைப் போராட்ட இயக்கங்கள் உருப்பெற்றன. இவ்விடுதலைப்போராட்ட இயக்கங்களில் பெரும்பாலானவை முஸ்லிம்களைத் தங்களில் ஒருபகுதியினர் எனக்காட்டுவதற்ம். முஸ்லிம்களைத் தங்களுடன் அணைத்துக் கொள்வதற்கு நம்காட்டிய ஆர்வத்தின் அளவுக்கு, முஸ்லிம்களின் சமய, கலாசார தனித்துவத்தையும், பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் விளங்கி, முஸ்லிம்கள் தொடர்பாக தெளிவான, உறுதியான, நம்பிக்கை ஏற்படக்கூடிய நிலைப்பாட்டை எடுப்பதற்குத் தவறிவிட்டன; தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்த எடுத்த பிரயாசையினை முஸ்லிம்களை அரசியல் மயப்படுத்துவதில் எடுக்கவில்லை. விடுதலை போராட்ட இயக்கங்கள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கைவைக்க எடுத்த முயற்சியின் அளவுக்குச் சமனாக முஸ்லிம்கள் விடுதலைப்போராட்ட இயக்கங்கள் மீது நம்பிக்கை கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை; இன்று சிங்கள அரசாங்கங்களிடமிருந்து அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒருசில அற்ப சலுகைகளை விட மிக அதிகமான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையினைத் தமிழ் மக்களுடன் இணைந்து போராடுவதன் மூலமே ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தத்தவறிவிட்டன. மேற்படி தவறுகளின் மொத்த வடிவம் தான் இன்று முஸ்லிம்கள் தமிழ் மக்களிடமிருந்து தூரவிலகிச் சென்று கொண்டிருப்பதற்கு அடிப்படையிட்ட முக்கிய வரலாற்றுரீதியான அரசியற் காரணி எனலாம். இதன் இறுதிப் பெறுபேறு தமிழ் மக்களுடைய கோரிக்கைகட்கு முற்றும் எதிரான கோஷங்களை வெளிப்படையாகவே முஸ்லிம்கள் முன்வைக்கத்தலைப்பட்டனர். ஆரம்பத்தில் வட-கிழக்கு இணைப்புக்கு எதிரான உணர்வு, காலகட்டத்தில் தமிழர்கட்கு எதிரான உணர்வாக மாற்றம் பெற்றது. இதன் விளைவு இனக்கலவரங்களாக உருவெடுத்தன.

தமிழ் மக்களுக்கெதிரான முஸ்லிம்களின் கோரிக்கைகளைத் தனக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும், அவற்றை உரமிட்டு வளர்க்கவும் இலங்கை அரசாங்கம் தவறவில்லை. வட-கிழக்கு இணைப்பிற்கு இலங்கை அரசாங்கமோ, அல்லது அதன் முக்கிய அமைச்சர்களோ, அல்லது எதிர்க் கட்சியினரோ, அல்லது பெரும் பாலான சிங்களவர்களோ ஆதரவளிக்கவில்லை. இதனால், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சியினதும், ஜே. ஆர். ஜயவர்தன வினதும் அரசியல் எதிர்காலமே சூன்யமாகக் கூடிய சூழ்நிலைகாணப்பட்டது. தனது கட்சியினதும், தனதும் அரசியல் எதிர்காலமே பாதகமாக அமையும் என்றமுக்கிய காரணத்திற்காக வட-கிழக்கு இணைப்பை விரும்பாத ஜே. ஆர். ஜெயவர்தன, ''**முஸ்லிம்கள விருர்புகிறுர்கள் இல்லை**'' என்று காட்டி வட-கிழக்கு இணைப்பையும், தேசிய இனப் பிரச்சினைக்கான நியாயமான தீர்வொன்றைக் காண்பதையும் ஒத்திப்போட்டு வந்தார். உண்மையில் முஸ்லிம்கள் விரும்பவில்லை என்பதற்காக வட-கிழக்கு இணைப்பை அவர் தவிர்க்க முனையவில்லை. முஸ்லிம்களின் கோஷங்களையும், கிழக்கின் ஐந்து முஸ்லிம் பாராளுமன்றப் பிரதி நிதிகளையும் ஆயுமாகப் பயன்படுத்தி தனது அரசியல் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள முனைந்தார். [இதற்கு வானொலி, தொலைக்காட்சி, உள்நாட்டுப்பத்திரிகைகள், வெளிநாட்டு நிருபர்கள், சர்வதேச மாநாடுகள் என்பவை பெரும் பங்களிப்புச் செய்தன.] இதனால் அப்பாவித்தமிழ் மக்கள், முஸ்லிம்களே தமது கோரிக்கை கட்கும், உரிமைப் போராட்டங்கட்கும் முட்டுக்கட்டையாக இருக்கின்றனர் என எண்ணத்தொடங்கினர்.

இலங்கை அரசாங்கம் தனது பிரித்தாளும் தந்திரோபாயத்திற்கு இரண்டு பிரதான அமைச்சர்களையும் மிகச்சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியது. கௌரவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களைத் தமிழர்கட்கெதிரான பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு சர்வதேச மட்டத்தில் பயன்படுத்திய அதே வேளை, கௌரவ போக்குவரத்து அமைச்சர் எம். எச். முஹம்மது அவர்களை உள்நாட்டில் தமிழர்கட்கெதிரான பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியது. இதனால் சர்வதேச மட்டத்திலும், உள்நாட்டிலும் முஸ்லிம்கள் தமிழர்கட்கு எதிரானவர்கள் என்ற உணர்வு ஏற்படுத்தப்பட்டது. இது மேலும் தமிழ் முஸ்லிம் உறவைப்பலவீனப்படுத்தியது.

இந்த இரண்டு அமைச்சர்களும் முஸ்லிம்- களின் தலைவர்கள் எனக்கருதப்பட்டாலும், சிங்களமக்களின் பெரும்பான்மையான வாக்குகளைக்கொண்டு பாராளுமன்றத்துக்குத்தெரிவு செய்யப்பட்டமையினால், சிங்களமக்களின் உணர்வுகளையே பிரதிபலிக்கத்தொடங்கினர். (சிங்களவர்களும் தமிழர்கட்கெதிரான உணர்வுகளைக் கொண்டிருந்த காலகட்டத்தில், தமிழர்கட் கெதிரான பிரச்சாரங்களை மிக மனமுவந்து ஏன்றுக் கொண்டனர்.) இவர்களின் கோஷங்களும், உணர்வுகளும் சிங்களமக்களையும், அரசாங்கத்தையும் திருப்திப் படுத்துவதாகவிருந்ததேயொழிய, அதனால் தமிழ் மக்களும், முஸ்லிம்களும் ஒன்றாக வாழும் வட-கிழக்கு மாகாணங்களில் ஏற்படும் பதில் விளைவுகளைப்பற்றிச் சிந்திக்கவில்லை.

சிங்களவர்கள் தமிழர்களை முற்றாக வெறுக்கும் ஒரு காலகட்டத்தில், தமது அரசியல் நலன்கட்காக முஸ்லிம்களும் தமிழர்கட்கெதிரானவர்கள் என்றும், சிங்களவர்களுடன் முஸ்லிம்கள் மிக ஐக்கியமானவர்கள் என்றும் காட்டவதற்கான பல முயற்சிகளையும் இவ்வமைச்சர்கள் மேற்கொண்டார்கள். [ வட-கிழக்கு மாகாணங்களில் தமிழ்—முஸ்லீம் உறவு எவ்வளவுக்கு விரிவடைகின்றதோ, அந்தளவுக்கு சிங்களப் பகுதிகளில் சிங்கள—முஸ்லீம் உறவு இறுக்கமடையும் சூழ்நிலையொன்று ஒருகாலகட்டத்தில் காணப்பட்டது.] உதாரணமாக முஸ்லீம்களின் தாய் மொழி சிங்களமாக இருக்க வேண்டுமென்றகருத்தை இவ்வமைச்சர்கள் திணிக்க முற்பட்டார்கள். இதற்காக கருத்தரங்குகள், மாநாடுகள் என்பனவும் தலைநகரிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து பெருமளவு முஸ்லீம் மாணவர்கள் தமது கல்வியைத் 'தாய்மொழியில்' இல்லாமல் சிங்கள மொழியில் கற்பதற்கு உந்தப்பட்டார்கள். இதே போல் வட கிழக்குப் பல்கலைக்கழகங்களில் இருந்து முஸ்லீம் மாணவர்களை ஏனைய பல்கலைக்கழகங்கட்கு மாற்றவேண்டும் என்றகோரிக்கையும் தமிழ் — முஸ்லீம் மாணவர்களிடையே சந்தேகப்பார்வையினை வளர்க்கக் காரணமாக இருந்தது எனலாம். சூழ்நிலையைச் சாட்டாகக்கட்டி வட-கிழக்கு மாகாணங்களில் இருந்து முஸ்லீம் மாணவர்களை மாற்றக் கோரிய அமைச்சர்கள், தமிழ் மாணவர்கள் எப்படி இப்பல்கலைக்கழகங்களில் கல்விகற்க முடியும் என்று சிந்திக்கவில்லை. மூன்று அல்லது நான்கு வருடங்கள் தமிழ் மாணவர்களுட வட-கிழக்குப் பல்கலைக்கழகங்களில் கற்க முடியாது என்று கூறிய வட-கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் மாணவர்கள், வாழ்நாள் முழுவதும் வட-கிழக்கிலேயே வாழப் போகிறோம் என்பதை மறந்தவர்களாகவே தமது கோரிக்கைகளை முன்வைத்தார்கள். வட-கிழக்குப் பல்கலைக்கழகங்கள் தம்முடையன என தமிழ்மாணவர்கள் எண்ணிய அதேவேளை, முஸ்லிம் மாணவர்கள் அவற்றை பிறருடைய பல்கலைக்கழகங்களாகவே கருதி வந்தனர். அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணமோ, இப்பல்கலைக்கழகங்கள் நிலைத்து நிற்க வேண்டுமென்ற எண்ணமோ இவர்களிடம் காணப்படவில்லை. முடிவில் முஸ்லிம் தலைவர்களின் அரசியல் நலனுக்கும், பிரித்தாளும் அரசாங்கத்தின் தந்திரோபாயத்திற்கும் முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல, எதிர்காலப் புத்தி ஜீவிகள் என வர்ணிக்கப்படுகின்ற முஸ்லிம் பட்டதாரி மாணவர்களும் பலியாகிக்கொண்டுவருகிறார்கள்.

தமிழ்-முஸ்லிம் உறவின் இன்றைய பலவீனமான நிலைக்கு முஸ்லிம் அரசியல் வாதிகள் சார்பான குற்றங்கள் இன்னும் நிறைய இருக்கின்றன. கிழக்கு மாகாணத்தின் அரசியல் வரலாற்றை எடுத்து நோக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினுல் முஸ்லிம்களின் பாராளுமன்ற அரசியல் வரலாறே தமிழரசுக்கட்சியுடன் தான் தொடங்குகின்றது. அரசியல் அடித்தளத்தை கிழக்கு முஸ்லிம்கட்கு ஏற்படுத்திக்கொடுத்தவர்கள் தமிழரசுக்கட்சியினர் அல்லது தமிழ் மக்கள் என்று கூறினுல் மிகையாகாது. ஏனெனில் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் பிரதிநிதிகள் தமிழரசுக்கட்சியின் அங்கத்தவர்களாகவே பாராளுமன்றம் சென்றனர். பின்னர் தமது சுயநலன்கட்காக ஆளும் கட்சிக்குத்தாவினர். இது தமிழ் அரசியல் வாதிகட்கும், தமிழரசுக் கட்சியினருக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. 1977ம் ஆண்டு தேர்தல் வந்தது. இதிலும் கிழக்கு மாகாணத்தில் நான்கு தொகுதிகளில் முஸ்லீம்கள் தமிழர்விடுதலைக்கூட்டுமுன்னணியின் அபேட்சகர்களாக (முஸ்லிம் ஐக்கிய முன்னணி'யின் அபேட்சகர்கள்) போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகள் நான்கு தொகுதிகளிலும் தோல்வி என அறிவித்தன, அதன் விளைவு மேற்படி முஸ்லிம் அபேட்சகர்களே பேரினக்கட்சிகளில் இடம் பிடிக்க முயன்றனர். இன்று இவர்கள் பேரினக்கட்சிகளின் முக்கிய உறுப்பினர்களாகவும், பொறுப்புள்ள பதவிகளிலும் உள்ளனர். தமிழ் மக்கள் பேரினக்கட்சிகளின் பிடியில் இருந்துமுற்றுக விலகிக்கொண்டிருக்கின்ற ஒருகாலகட்டத்தில், முஸ்லிம்கள் தமது உறவுகளைப்பேரினக் கட்சிகளுடன் மேலும் இறுக்கமடையச் செய்ய முயன்று கொண்டுவந்தமையும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் இடைவெளியை ஏற்படுத்தியது.

1987ம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தல் நடைபெறப் போவதாக அரசாங்கம் அறிவித்தது. ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறையிலும், கணிசமான தமிழ் மக்கள் தமது வீடுவாசல், உற்ருர், உறவினர்களை இழந்து அகதிகளாக இடம் பெயர்ந்தும், பெருமளவு சிங்களக் குடியேற்றமும் காணப்பட்ட ஒரு காலகட்டத்தில் இத்தேர்தல் அறிவிப்பு நடைபெற்றது. இதனுல் தமிழ் மக்கள் தேர்தலுக்குத்தயாராக இருக்கவில்லை. தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வுக்கு வருவதனைக் காலதாமதப்படுத்து வதற்காகவே இத்தேர்தல் அறிவிப்பு நடைபெற்றது. ஆனுல்மு ஸ்லிம்கள் அபேட்சகர்களை நிறுத்தினுர்கள், அரசின் தந்திரோபாயத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினுர்கள். பிரதேசசபைத்தேர்தல் நெருங்கிக் கொண்டு வரும் போது தமிழ் - முஸ்லிம் பிரதேசங்களில் பதட்டம் நிலவியது. இனக் கலவரமொன்று மூளக்கூடிய அறிகுறிகள் கூடத் தென்பட்டன. ஆனுல் இலங்கை—இந்திய ஒப்பந்தத்துடன் தேர்தல் ஒத்திப் போடப்பட்டது.

எனவே வரலாற்று ரீதியாக முஸ்லிம் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள், அவர்களைத் தமிழ்த்தலைவர்களும், தமிழ் மக்களும் நம்பக்கூடியவாறு அமையவில்லை. இதன் விளைவு அரசியலைப்பொறுத்தவரையில் முஸ்லிம்களை நம்ப முடியாது என்ற ஒருநிலைக்குத் தமிழ்மக்களும், தமிழ்த் தலைவர்களும் தள்ளப்பட்டார்கள். தமிழ்மக்கள் அல்லது தமிழ்மக்கள் சார்பான தலைவர்களும், இயக்கங்களும் முஸ்லிம்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கும், முஸ்லிம்கள் தொடர்பாக விரும்பத்தக்க ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுப்பதற்கும் பின்னிற்பதற்கு, இவ்வாறன கசப்பான முஸ்லிம் அரசியல் வரலாறு அல்லது முஸ்லிம் அரசியல் வாதிகள் தமிழ் அரசியல் வாதிகட்குச் செய்த நம்பிக்கைத்துரோகம் காரணமாக இருக்கலாம்.

சிறுபான்மை இனங்கள் இரண்டும் ஒன்றிணைவதைத் தடுப்பதற்கு அல்லது இரண்டு இனங்களுக்கு மிடையில் எதிர்ப்புணர்வுகளை வளர்ப்பதற்கு வேறுசில தந்திரோபாயங்களையும் அரசாங்கம் கையாண்டது. உதாரணமாக ''திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள, முஸ்லிம் கிராமங்களைப்பாது காப்பதற்காக இலங்கை இராணுவத்தை அரசாங்கம் அனுப்பவுள்ளது''. என்ற செய்தி அடிக்கடி வானெலியிலும், தொலைக்காட்சியிலும் கூறப்பட்டது. உண்மையில் முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாக்க இலங்கை இராணுவம் அனுப்பப்படவில்லை. தமிழ்-முஸ்லிம் கசப்புணர்வை மேலும் அதிகரிப்பதற்காக ''முஸ்லிம் கிராமங்கள்'' என்ற சொல்லையும் அரசாங்கம் சேர்த்துக் கொண்டது. இதே போல் எந்தவொரு முஸ்லிம் கட்கெதிரான வன்செயலையும் ''கண்ணை மூடிக் கொண்டு'' தமிழ்மக்கள் சார்பானவர்கள் மீது சுமத்திவந்ததும் தமிழ்-முஸ்லிம் பிளவை ஏற்படுத்தியிருக்கலாம். இதேபோல் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-முஸ்லிம் உறவைப் பலவீனப்படுத்துவதில் அதிரடிப் படையினரின் பங்களிப்பையும் மறக்கமுடியாது. மேலும், மிகமர்மமான முறையில், தமிழ்-முஸ்லிம் உறவுக்குப் பாலமாக இருந்த பிரமுகர்கள் பலர் கொல்லப்பட்டமையினுல் தமிழ்-முஸ்லிம் உறவை உளப் பூர்வமாக விரும்பியோர்கூட, அதனை வளர்க்கத் துணியவில்லை.

பல்வேறு தந்திரோபாயங்கள் மூலம் தமிழர்களும், முஸ்லிம்களும் பகைமைப்பட்டுக்கொள்ளக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிய அதேவேளை, சிங்களக்குடியேற்றத்தைத் தீவிரப்படுத்தவும் அரசாங்கம் முனைந்தது. ஒரு காலத்தில் சிங்களக் குடியேற்றத்திற்கெதிராகக் குரலெழுப்பிய முஸ்லிம்கள், தமிழர்களுடனன வெறுப்புணர்விஞல், சிங்களக் குடியேற்றம் தமது பலத்தினை அதிகரிக்கின்றது எனவும் எண்ணத் தொடங்கினர்! முஸ்லிம்களின் முழுக்கவனமும் தமிழர்கட் கெதிராகவேயிருந்த படியால், உண்மை எதிரி தனது நோக்கத்தைச் சாதிக்க முடிந்தது. சிங்களக் குடியேற்றத்திஞல், வட-கிழக்குஇணைப்புக்கு எதிராக வாக்களிப்பதற்கும், கிழக்குமாகாண சபையில், முஸ்லிம்களின் "கையை" ஓங்கச் செய்வதற்கும் வழிஏற்படும் என முஸ்லிம்கள் நினைத்திருக்கக்கூடும்.

## பொருளாதாரப் பின்னணி:

தமிழ்-முஸ்லிம் உறவைப்பலவீனப்படுத்திய மேற்கூறிய அரசியற்காரணிகளுடன் பொருளாதாரக்காரணியும் இன்று கிழக்கு மாகாணத்தின் சிற்சில இடங்களில் முக்கிய இடம் வகிக்கின்றது.

பொதுப்படையாகக் கூறும் போது கிழக்கு மாகாண முஸ்லிம்கள் வர்த்தகத்தில் கவனம் செலுத்திய அளவுக்கு தமிழ்மக்கள் வர்த்தகத்தில் கவனம் செலுத்தவில்லை. இதே போல் தமிழ் மக்கள் கல்வியில் கவனம் செலுத்திய அளவுக்கு முஸ்லிம்கள் கல்வியில் கவனம் செலுத்தவில்லை. இதனுல் செல்வம் முஸ்லிம்கள் பக்கமும், உத்தியோகம் தமிழர் பக்கமும் ஒப்பீட்டுரீதியாக அதிகமாகக்காணப்படுகின்றது. (முஸ்லிம்கள் கூடியளவுக்கு கல்வியில் கவனம் செலுத்தாமைக்கு வரலாற்று, சமய கலாசாரக் காரணிகள் இருக்கின்றன.) இதஞல் இன்று முஸ்லிம்கள் செல்வந்தர்களாகவும் நிலச்சுவாந்தர்களாகவும், ஆடம்பர வாழ்க்கையுடையவர்களாகவும் இருக்கின்றவேளை, ஒப்பீட்டுரீதியாக தமிழ் மக்கள் மத்தியில் வறுமை அதிகமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக கடந்த ஒரு சில தசாப்தங்களில் கிழக்கு முஸ்லிம்களின் பெருளாதாரரீதியான முன்னேற்றம் மிக அதிகமானதாகும். இதனுல் தமிழ்மக்களுடைய உடமைகளைக் கூடமிகக் கூடிய விலை கொடுத்து வாங்கக் கூடிய நிலைக்கு முஸ்லிம்கள் வந்தார்கள். இவை தமிழ் சமூகத்தின் புதிய தலைமுறையினருக்கு பொருமை உணர்வையும், தோல்வி மனப்பான்மையினையும் உருவாக்கியிருக்கக்கூடும். கல்முனை, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, இஸ்லாமாபாத் ஆகிய இடங்களில் அண்மையில் நடைபெற்ற தீவைப்பு, வீடுடைப்பு, கொள்ளை, துப்பாக்கிச்சூடு ஆகியவற்றிற்கு அடிப்படையாகப் பின்னணியில் இப்பொருமையுணர்வும், விரக்தியும் காரணமாக இருக்கலாம்.

மற்றது, தமிழ்மக்கள் தங்களது பிரதேசங்களை இழந்து வரும் உணர்வு. கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளைப் பொறுத்தவரையில் முஸ்லிம் கிராமங்களும், தமிழ்க் கிராமங்களும் பிட்டும், தேங்காயும் போல் அடுத்தடுத்து வருகின்றன. இவ்வாறு அடுத்தடுத்து வருகின்ற தமிழ், முஸ்லிம் கிராமங்களின் எல்லைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட வில்லை. இதனுல் வசதி படைத்த முஸ்லிம் தனவந்தர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் மிக இலகுவாக குடியிருப்பு நிலத்தினையும், வியாபாரத்தலங்களையும் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கின்றது. எல்லைப்புறங்கள் சில வற்றில் முஸ்லிம்கள் விலைகொடுத்து தமிழ்மக்களிடமிருந்து குடியிருப்புக்காணிகளையும், வியாபாரத்தலங்களையும் கொள்வனவு செய்தமையும் உண்மைதான். அப்பொழுது முஸ்லிம்கட்கு தமது காணிகளை விற்கக்கூடாது என்ற இனப்பாகுபாடு தமிழ் மக்களிடம் காணப்படவில்லை. ஆனுல் இன்று தமிழ் இளம் தலைமுறையினர், தாம் தமது பிரதேசங்களை இழந்து வருவதாக உணரத்தலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளனர். இதுவும் இன்று கல்முனையில் அடிக்கடி ஏற்படும் பொருளாதார அழிவுக்குக்காரணமாக இருக்கலாம். கல்முனை நகரத்தைப் பொறுத்தளவில் அங்குள்ள வியாபாரத்தலங்கள் விகிதாசாரரீதியாக தமிழ்-முஸ்லிம் மக்களிடையே காணப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் எந்தவொரு காணித்துண்டுமோ முஸ்லிம்களால் அத்துமீறி பலாத்காரமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதல்ல. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வியாபாரத்தலங்கள் கூட விகிதாசார அடிப்படையில் இனங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. உதாரணமாக கல்முனையில் புதிய சந்தை மாடிக்கட்டிடம் உருவானபோது தமிழ் வர்த்தகர்கட்கு உரிய விகிதாசாரம் உரிய முறையில் அவர்கட்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால் பின்னர், தமிழ் வர்த்தகர்களே தமக்குக் கிடைத்த பங்கின் பெரும் பகுதியை முஸ்லிம் வர்த்தகர்கட்கு விற்றனர். இதனால் இன்று கல்முனைச் சந்தைக் கட்டிடத்தில் தமிழர்கட்கு உரிய விகிதாசாரம்கிடையாது என்பதும் உண்மைதான். இதேவேளை இன்று புதிதாக உருவாகும் பெரும் பாலான அரசாங்கக் கட்டிடங்கள் எந்த இனப்பாகுபாடுமின்றி தமிழ் மக்கள் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளிலேயே உருவாகிவருவதும், முஸ்லிம் மாணவர்கள் பெரும் பான்மையாகக் கற்கும் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் உருவாகிவரும் அதே வகையான மாடிக்கட்டிடங்கள், தமிழ் மாணவர்கள் பெரும் பான்மையாகக் கற்கும் கல்லூரிகளில் உருவாகிவருவதும் பொதுச் சொத்துக்கள் அல்லது மூலவளங்கள் ஒரு இனத்திற்கு மட்டும் சாதகமான முறையில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதற்கு உதாரணங்களாகும். பிரச்சினையின் அடிப்படை என்ன வென்றால், தமிழ் மக்கள் கல்வியிலும், அதனால் உத்தியோக வாய்ப்புக்களிலும் முன்னேறுவது இயற்கை என்று கருதினால், முஸ்லிம்கள் வாணிபத்திலும், அதனால் சொத்துடைமையிலும் முன்னேறுவதும் இயற்கையே என்பது உணரப்படவில்லை. முஸ்லிம்கள் உத்தியோக வாய்ப்புக்களிலும், பல்கலைக்கழகக் கல்வி முதலியவற்றிலும் சனத்தொகை விகிதாசாரத்தை விடமிகக் குறைவான விகிதாசாரத்தையே கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்கள் கல்வியிலும், உத்தியோக வாய்ப்புக்களிலும் உரிய விகிதாசாரம் கேட்பது இயற்கையை மீறிய அநீதி எனக்கருதப் பட்டால், தமிழ் மக்கள் வாணிபத்திலும், சொத்துடைமையிலும் உரிய விகிதாசாரம் கேட்பதும் இயற்கையை மீறிய அநீதி என உணரப்படல் வேண்டும். உண்மையில், இயற்கையாகவே இரண்டு இனங்களும் இரண்டு வகையான துறைகளில் முன்னேறி வருகின்றன என்பது உணரப்படவில்லை. வட-கிழக்கு மாகாணங்களிலேயே முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரேயொரு பிரதான நகரம் கல்முனையாகும். அம்பாறை தவிர்ந்த ஏனைய பிரதான நகரங்கள் யாவற்றிலும் தமிழ்மக்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 33 வீதத்தினராக முஸ்லிம்கள் உள்ளனர். அதை முஸ்லிம்கள் தமது பங்குக்கு மேல் உடமையாகக்கொண்டுள்ளனர் என்று கொள்ளவும் முடியாது. இரண்டு இனத்தவர்களும் நீதியாகச் சிந்தித்தாலே நீதி பிறக்கும்.

## முடிவுரை:

மேற்கூறிய யாவற்றினதும் மொத்த விளைவு இன்று கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் உறவு என்று மில்லாதவாறு பலவீனமடைந்துள்ளது; தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான பொருளாதாரத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன; தமிழர்கள் முஸ்லிம்களையும், முஸ்லிம்கள் தமிழர்களையும் தமது அரசியல், பொருளாதார எதிரிகளாக நோக்குகின்றனர்; தமிழ்—முஸ்லிம் எல்லைப்புறங்களில் இன்று குடியிருப்புக்கள் கிடையாது. பயமும், பீதியும் நிலவுகின்றன; கடத்தல்களும், கொலைகளும் மாறி-மாறி இரண்டு இனங்களுக்கு மிடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதேவேளை இவ்விரண்டு இனத்தவர்களும் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதளவு பிணைக்கப்பட்ட இனங்கள்; கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வு முழுவதுமே இரு இனங்களினதும் உறவிலேயே தங்கியுள்ளது என்று கூறுமளவுக்கு இறுக்கமாக இருக்கவேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கள். சிறுபான்மையினர் என்றவகையி லும், ஒரே மொழி பேசுபவர்கள் என்றவ கையிலும், சில கலாசார பண்பாட்டம்சங் கள் ரீதியாகவும் ஒன்று பட்டவை இரண்டு சமூகங்களுமாகும். இரண்டு இனங்களினதும் ஒற்றுமையினாலும், ஒன்றித்தவாழ்வினாலுமே எதனையும் சாதிக்க முடியும். எனவே இரண்டு இனத்தவர்களும் தம்மிடையே உறவைக் கட்டி யெழுப்பு வதற்கான சில அடிப்படை களை ஏற்படுத்துதல் இன்றியமையாததா கும்.

இதற்கு முதலாவதாக இரண்டு இனங் களும் தமது பகைமையை மறத்தல் வேண் டும். இரண்டு இனங்களுக்கு மிடையில் நம் பிக்கை ஏற்படக்கூடிய அத்திவாரம் இடப் படல் வேண்டும். அரசியலும், பொருளா தாரமும் இன்றைய கிழக்கின் தமிழ் - முஸ் லிம் உறவைப் பலவீனப் படுத்தியுள்ளதால், அவற்றின் அடிப்படையில் இந் நம்பிக்கைக்கு அத்திவாரமிடப்படல் வேண்டும். இவற் றின் அடிப்படையில் ஏற்படுகின்ற நம்பிக் கையும், புரிந்துணர்வுமே உறுதியானதாக வும், தமிழ்-முஸ்லிம் உறவைப் பலவீனப்ப டுத்தும் புறச்சக்திகளின் தாக்கத்திற்குட் படாமலும் இருக்கும். இன்றையபிளவு தற் காலிகமானதாகக் கொள்ளப்படல் வேண் டும். உணர்ச்சிகளின் அடிப்படையிலல்லா மல், தீர்க்கதரிசனத்துடனும், புத்திசாது ரியமான முறையிலும் பிரச்சினைகட்குத் தீர்வுகாண்பதற்கு இரண்டு இனத்தவர்க ளும் முயற்சிசெய்தல் வேண்டும்!

★ ★ ★

## பழம் பெருமை பேசுவதற்கல்ல.

''பத்தாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பாவில் வளர்ந்தோங்கிவரும் ஞானங்களெல்லாம்-அவை பௌதீகமாகவோ, கணிதமாகவோ, வானசாஸ்திர மாகவோ, தத்துவ சாஸ்திரமாகவோ இருந்தாலும் சரி அவை ஆரம்பத்தில் அராபியப் பள்ளிகளில் இருந்து இங்குவந்தவை என்பதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.''

— John Devenport —

''இராணுவ பலத்தில் மாத்திரம்தான் கீழ்நாடுகள் உச்சநிலை வகித்தன என்பதில்லை. ஐரோப்பா அநாகரீகத்தில் மூழ்கிக்கிடந்த அந்த காலத்தில், விஞ் ஞானம், தத்துவம், கலைகள், கவிதைகள் மற்றும் எல்லாத்துறைகளிலும் இஸ்லாமிய உலகம் செழிப்புற்று விளங்கியது. மன்னிக்க முடியாத புரட்டாக அந்தக்காலத்தை 'இருண்டகாலம்' என ஐரோப்பியர் அழைக்கின்றனர். உண் மையில் ஐரோப்பாவில் தான் இருள்சூழ்ந்திருந்தது. அச்சமயத்தில் முஸ்லிம் களின் ஆட்சியில் இருந்த ஸ்பெயினிலோ கலைப்பண்பு ஒளிவீசிக் கொண்டிருந்தது.''

— Bertran Russell —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*

# ABBAS & CO.

JEWELLERS

DEALERS IN GOLD & SILVER BULLIONS,
GOLDSMITHS TOOLS, WATCHES
AND FANCY GOODS.

200, 2nd CROSS STREET,
COLOMBO-11.

*T' PHONE: 29006*

With Best Compliments
From:

# SHANAS

**DEALERS IN C. P. C.
AGRO CHEMICALS AND
IMPORTED TYRE AND TUBE.
TYRE REBUILDING
UNDERTAKERS.**

**KADURUWELA.**

T. P. **027 - 2087**

*SPACE DONATED BY:*

# FARWIN
# TRADERS

**BOOK SELLERS & PUBLISHERS**

**116 2/C, PRINCE STREET
PETTAH
COLOMBO – 11.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*

# DAYA PALACE

## JEWELLERS

*DEALERS IN:*
*OLD GOLD, CARROT GOLD, SILVER GEM ETC.*

112 - 112/2 SEA STREET,
COLOMBO - 11.

T' Phone: **20354**

*எமது நல் வாழ்த்துக்கள்!*

உள்நாட்டு வெளிநாட்டு கைக்கடிகாரங்கள்
சுவர் மணிக்கூடுகள் கெசட் றேடியோக்கள்
துவிச்சக்கர வண்டிகள்
எவர்சில்வர் மற்றும் டி. வி- றேடியோ உபகரணங்கள்
மின் இணைப்பு உபகரணங்கள்

**மலிவான விலையில் பெற்றுக்கொள்ள**
**இன்றே விஜயம் செய்யுங்கள்**

# கிரவுன்ஸ்

இல. 159, பஜார் வீதி,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# MADEENA ENTERPRISES

DEALERS IN TEXTILES

54, Third Cross Street,
Colombo - 11

Tel: 549658

*Best Wishes From*

# CONKODE TRADING CO.,

WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES,
READYMADE GARMENTS & SUNDRY GOODS

196, FIRST FLOOR,
SECOND CROSS STREET,
COLOMBO - 11.

T' PHONE: 5412717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

# SHAFEENA TEXTILE

*WHOLESALE DEALERS IN TEXTILES*

**206, Keyzer Street,**
**Colombo - 11.**

*T. P. 545436*

---

*எமது நல் வாழ்த்துக்கள்!*

# ஆப்தீன்




**தையல் உலகின் நவீன முன்னோடிகள்**

**5, ஜும்மா பள்ளிவாசல் லேன்,**
**(பெரியகடை)**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டியில்லா வங்கிகள் — ஓர் அறிமுகம்

எம். வி. எம். மிஸ்வர்
(2-ம் வருடம், வியாபார நிர்வாகம்)

உலக பொருளாதார இயக்கத்துக்கும், அபிவிருத்திக்கும் வங்கியியல் மிகப்பிரதான பங்களிப்பை செய்து வருகின்றது. பரவலாக காணப்படுகின்ற பணத்தை ஒன்று திரட்டி அவற்றை பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுத்துகின்ற ஒரு மைய நிலையமாக இயங்குகின்ற தென்றவகையில் வங்கிகள், நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியின் மிக முக்கிய பங்காளிகளாகத் திகழ்கின்றன. இம்முக்கிய பணி தவிர்த்து நாடுகட்கிடையிலான வணிக நடவடிக்கைகள், பணச்சந்தை நடவடிக்கைகள், மக்களின் அன்றாடபணக் கொடுக்கல் வங்கல்கள் என்பவற்றிலும் வங்கிகள் செல்வாக்கு செலுத்தி வருகின்றன.

இவ்வங்கிகள் வட்டியின் அடிப்படையிலேயே கட்டி எழுப்பப்படுகின்றன. உண்மையில் வங்கி சீவிப்பதும், வளர்ச்சியடைவதும் இந்த வட்டியினாலேயே. எந்தவொரு பொருளாதாரமும் வட்டியின்றி இயங்க முடியாதெனவும், ஒவ்வொரு தனிமனிதனாலும் மேற்கொள்ளப்படுகின்ற வணிகரீதியான தீர்மானங்கள் அனைத்தும் கட்டாயமாக வட்டியின் அடிப்படையிலேயே அமைகின்றதெனவும் பொதுவாக அனைவரிடமும் காணப்படுகின்ற ஒரு கருத்தாகும். வட்டியின் கொடுமைகளையும், பொருளாதார சீரழிவுகளையும் நெடுங்காலமாக யாவரும் அறிந்திருந்த போதும் தனிப்பட்ட நலன் கருதி இதனை முற்றுமுழுதாக களைந்தெறிந்துவிட பயனுள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் புகழ்பெற்ற பல பொருளியலாளர்கள், வட்டியானது பொருளாதார அபிவிருத்திக்கு இடையூறாக இருக்கின்றதென்ற கருத்தில் ஒன்றுபட்டிருக்கின்றனர். இதனாலேயே நவீன பொருளியற் கொள்கைகள் வட்டியின் விளைவால் ஏற்படும் பணவீக்கத்தினை எவ்வாறு குறைவடையச் செய்யலாம் என்பதிலேயே அதிக கவனம் செலுத்திவருகின்றன.

## வட்டியைப்பற்றி இஸ்லாம் :

இந்தவகையில் பார்க்கும் போது இஸ்லாம், ஏறத்தாள 1400 ஆண்டுகளுக்கு முன்பே வட்டியுடன் தொடர்புடைய சகல கொடுக்கல் வாங்கல்களையும் முற்றுமுழுதாக தடை செய்து மனித குலத்துக்கு மகத்தான ஒரு வழிகாட்டலை செய்துள்ளது. அல்குர்ஆனும் சுன்னாவும், வட்டியை விட்டு தவிர்ந்து நடந்து கொள்ளுமாறு மனிதர்களை எச்சரிக்கை செய்கின்றன. உதாரணமாக அல்குர்ஆன் :

> விசுவாசிகளே! (அசலுக்கு அதிகமாகவும், வட்டிக்கு வட்டிபோட்டும்) இரட்டித்துக் கொண்டே அதிகரிக்கக்கூடிய வட்டியை (வாங்கி) விழுங்காதீர்கள். அல்லாஹ்வுக்கு பயந்து (இதனை நீங்கள் தவிர்த்துக் கொண்டால்) நீங்கள் சித்தியடைவீர்கள். (3 : 130)
>
> ...... வணிகமும் வட்டியைப் போன்றதுதான் (எனவே வட்டிவாங்குவதில் தவறில்லை) என இவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், அல்லாஹ் வணிகத்தை ஆகுமாக்கி வைத்து வட்டியைத்தடுத்து விட்டான். (2: 275)

எனக்குறிப்பிடுகின்றது. இதனடிப்படையில் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள், வட்டிவாங்குபவன்; வட்டிக்கான ஒப்பந்தத்தை எழுதுபவன்; அதற்கு சாட்சியாக இருப்போர் ஆகிய அனைவரும் சாபத்துக்குரியவர்கள் எனவும் குற்றத்தில் இவர்கள் அனைவரும் சமமானவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இஸ்லாம் வட்டியை தடை செய்துள்ள நிலையில், வட்டியுடன் தொடர்புள்ள அன்றாட வங்கி நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் எவ்வாறு ஈடுபட முடியும் என வினாவெழுப்பப்படுகின்றது. இதற்கு விடையளிக்க முனைந்த உலமாக்கள், வட்டியமைப்பில் இயங்கும் வங்கிகளில் முஸ்லிம்களின் நடவடிக்கைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதை முஸ்லிம்களை (முஸ்லிம் நாடுகளில் வாழ்பவர்கள், சிறுபான்மை முஸ்லிம்நாடுகளில் வாழ்பவர்கள் என) இருபிரிவுகளாக பிரித்து விளக்கியுள்ளனர். எது எப்படியிருந்தபோதிலும் இஸ்லாமிய பொருளியல் அறிஞர்கள் வட்டியில்லா வங்கியமைப்பின் தேவையை நன்குணர்ந்து இஸ்லாமிய ஷரீஅத்துக்குட்பட்டவகையில் இயங்கக்கூடிய வங்கியமைப்பின் கொள்கைகளை முன்வைத்தனர். இக்கொள்கைகள் இன்று முஸ்லிம் நாடுகளில் மட்டுமன்றி ஏனைய சிலநாடுகளிலும் நடைமுறையிலிடப்பட்டுள்ளன. வங்கியென்றால் வட்டியை நினைவுக்கு கொண்டுவரும் இக்காலப்பகுதியில் வட்டியில்லா வங்கியா? அது நடைமுறை சாத்தியமானதா? அது ஏனைய வங்கிகளைவிட எவ்வகையில் சிறந்தது? போன்ற பல சந்தேக வினாக்கள் முஸ்லிமல்லாதோர் மத்தியில் மட்டுமன்றி முஸ்லிம்கள் மத்தியிலும் எழுந்துள்ளன. இவற்றுக்கு விடைகாண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இஸ்லாமிய வங்கிகள் :

1962ல் கெய்ரோவில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய வங்கியைத் தொடர்ந்து ஏனைய நாடுகளிலும் ஆரம்பிக்கப்பட்ட இவ்வங்கிகளின் துரித வளர்ச்சி இச்சந்தேக வினாக்களுக்கு முதல் விடையாக அமையும் என நம்புகின்றேன். உலகில் இன்று இயங்கி வருகின்ற வட்டியில்லா வங்கிகளுள் சில வருமாறு:

Islamic Development Bank, Jeddah, K.S.A.
Islamic Bank of Bahrain, Bahrain.
Faisal Islamic Bank of Sudan, Sudan.
Dubai Islamic Bank Deira, U.A.E.
Islamic Bank of Sharjah, Sharjah, U.A.E.
Islamic Banking System, Luxumbourg.
Investment co, Geneva, Switzerland.

இஸ்லாமிய வங்கிகள் பொதுவாக நிதி, வங்கி, வியாபாரம், கைத்தொழில், போன்ற துறைகளில் இஸ்லாமிய ஷரீஆவின் பிரயோகத்தை அதிகரித்தல், வியாபாரதாபனங்கள்; உற்பத்தி நிறுவனங்கள் என்பவற்றை இஸ்லாமிய அடிப்படையில் இயங்கவைத்தல், வருமானப்பகிர்வு; சொத்துப் பகிர்வு என்பவற்றிலுள்ள சமமின்மையை நீக்கக் கூடியவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மொத்தத்தில் பொது நலன் கருதி மக்களின் பொருளாதார வாழ்வை சீர்படுத்தும் வகையிலான எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடல் போன்ற பல குறிக்கோள்களைக் கொண்டுள்ளன.

இக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளுமுகமாக இவ்வங்கிகள் பல்வேறு வங்கியியல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. ஆனால் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் இஸ்லாமிய ஷரீஅத்துக்குட்பட்ட வகையில் வட்டி என்னும் அம்சத்தை முற்றாக நீக்கியதாக அமைந்திருக்கும்.

வட்டி வழங்குவதை இவ்வங்கிகள் முற்றாக நிறுத்தி விடுவதினால் மக்கள் தம்மிடமுள்ள பணத்தை இவ்வங்கிகளில் சேமிக்க முன்வரமாட்டார்கள் என அனேகர் எண்ணுகின்றனர். ஆனால் இங்கு வட்டிக்குப்பதிலாக வங்கி சம்பாதிக்கும் இலாபத்தில் ஒரு பங்கு இவ்வைப்பாளர்கட்கு வழங்கப்படுகின்றதென்பதை நினைவிற் கொள்தல் வேண்டும்.

## வட்டியும் இலாபமும்–வேறுபாடுகள்:

வங்கியில் இடப்படுகின்ற பணத்திற்கு வட்டி வழங்கப் படுவதற்கும் இலாபத்தில் பங்களிப்பதற்குமிடையில் என்ன வித்தியாசம் இருக்கின்றது என வினாவெழுப்பப்படலாம். இவ்விரண்டும் அடிப்படையிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்டவையாகும். பணத்தை வைப்பில் இட்டுவிட்டு அல்லது கடன் வழங்கிவிட்டு வட்டியை எதிர்பார்த்திருப்பதற்கும் அப் பணத்தை இலாபநட்டத்தில் பங்கேற்கும் வகையில் முதலிடுவதற்கு மிடையில் பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன.[1]

இன்றைய வங்கிகளின் பிரதான நோக்கம் இலாபமீட்டுவதாக இருப்பதனுல் அவை, குறைந்த காலத்தில் கூடிய இலாப மீட்டக் கூடிய தொழில் முயற்சிகளுக்கே கடன்வழங்குவதில் முன்னுரிமை வழங்குகின்றன. இதனுல் சமூகத்துக்கு தேவையான, ஆனுல் குறைந்த இலாபமீட்டக் கூடிய தொழில் முயற்சிகளுக்கு கடன்வழங்குவதில் இவ்வங்கிகள் ஆர்வம் காட்டுவதில்லை. புகழ் பெற்ற பல பழம் பொருளியலாளர்களும், நவீன பழம் பொருளியலாளர்களும், குறைந்த இலாபமீட்டும் தொழில் முயற்சிகளின் அபிவிருத்திக்கு வட்டி தடையாக இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். எனவே, இந்நிலையின் காரணமாக நாட்டில் செல்வ, வருமானப்பங்கீட்டின் சமமின்மை தொடர்ந்தும் வளர்வதற்கே இடமேற்படுகின்றது. இதனுல் நாட்டின் பொருளாதாரம் ஒரு சில செல்வந்தர்களின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதற்கும் வழியேற்படுகின்றது. இந்நிலையானது நாட்டில் சமூக, பொருளாதார, ஒழுக்கப் பிரச்சினைகளுக்கு வழி கோலுகின்றது.

ஒரு தொழில் முயற்சியில் ஈடுபடுபவனைப் பொருத்தமட்டில் அவன் அபாயத்தை எதிர் நோக்கவேண்டியவனுக இருக்கின்றுன். இந் நிலையில் அவன், தான் கடன்பெற்ற மூலதனத்துக்கு நிலையான ஒரு வட்டி வீதத்தை செலுத்த வேண்டியவனுகவும் இருக்கின்றுன். குறைந்த இலாபத்தையோ அல்லது இலாபமன்றி நட்டத்தையோ அடைகின்ற போது அவனது நிலை மிகவும் மோசமானதாக இருக்கின்றது. இதே நேரம் இவனுக்கு மூலதனத்தை வழங்கிய வங்கி, தொழில் முயற்சியாளனின் நிலையைப்பற்றி கவலைகொள்வாது தனது நிலையை, நிலையான வட்டி வீதத்தினுல் உறுதிப்படுத்திக் கொள்கின்றது. தொழில் முயற்சியாளன் கூடிய இலாப மீட்டும் நிலையிலும் கூட அவன் தனது திறமை, உழைப்பு என்பவற்றை வழங்கி விட்டு உறுதியற்ற ஒரு இலாப வீதத்தை எதிர்பார்த்திருக்கையில் வங்கி நிலையான ஒரு வட்டிவீதத்தினுல் தன் நிலையை உறுதிப்படுத்திக் கொள்வது நியாயமற்றதாகும். இதன் மூலம், ஒரு நிலையான வட்டி வீதத்தில் கடன் வழங்குவது நியாயமற்றதொன்றென்பது தெளிவாகின்றது. அதனுல்தான் இஸ்லாமிய வங்கிகள் இவ்வாருன ஒரு நிலையான வட்டிவீதத்தை தவிர்த்து, தொழில் முயற்சியாளனுடன் இலாபநட்டத்தில் பங்கேற்கும் வகையான ஒப்பந்தத்துடன் இயங்கிவருகின்றன.

இதைத்தவிர வட்டி செலுத்தப்படுவதானது உற்பத்தி செலவை அதிகரித்து பண்டங்களின் விலையேற்றத்துக்கு காரணியாக அமைகின்றது. இது பணவீக்கத்துக்கு இட்டுச் செல்லும் அதே வேளை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வாழும் ஏழை மக்களை பின்வரும் இருவழிகளில் பாதிக்கின்றது:

I குறைந்த இலாபமீட்டுகின்ற, ஆனுல் சமூகரீதியில் பயனளிக்கக்கூடிய உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமை.

II உற்பத்தி செலவுகளை அதிகரித்து அதனுல் பாவனைப் பொருட்களின் விலை அதிகரித்து விடுகின்றது.

வட்டியின் காரணமாக மனிதகுலம் எதிர் நோக்குகின்ற சமூக, பொருளாதார பிரச்சினைகளில் மிகச்சிலவே இங்கு மேலோட்டமாக சுட்டிக் காட்டப்பட்டது. இப்பிரச்சினைகளை இல்லாதொழிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வட்டியில்லா வங்கிகளின் செயற்பாடுகளை இனி நோக்குவோம்.

## வட்டியில்லா வங்கிகளின் செயற்பாடுகள்:

செயற்பாடுகளைப்பற்றி நோக்கும் போது, வட்டியில்லா வங்கி யொன்று எவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு தனது ஆரம்ப முலதனத்தைப்பெற்றுக் கொள்கின்றது. வாடிக்கையாளரிடமிருந்து எவ்வகையில் வைப்புக்களை (Deposits) ஏற்றுக் கொள்கின்றது, என்ன அடிப்படையில் கடன் வழங்கும் செயன்முறை அமைகின்றது போன்ற முக்கிய விடயங்களில் எமது கவனத்தை செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் இஸ்லாமிய வங்கிகள் மேற்கூறிய நடவடிக்கைகளில் வட்டியை எவ்வகையிலும் தொடர்புபடுத்தாததன் காரணமாக இவ் வங்கிகள் எவ்வாறு இயங்க முடியும் என்ற வினுவுக்கு விடைகாணவேண்டியுள்ளது.

இஸ்லாமிய வங்கிகள் பங்குடைமை அடிப்படையிலேயே இயங்குகின்றன. இதனுல் வட்டிக்குப்பதிலாக இலாபநட்டங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கிடையே பகிரப்படுகின்றன. பங்குடைமை ஒப்பந்தமானது வங்கியின் உரிமையாளர்கட்கும், வாடிக்கையாளர்களுக்கு மிடையில் வரையறுக்கப்படாத பங்குடைமை (Shirkat / Unlimited Partner Ship) எனவும், நிர்வாகத்துக்கும் வாடிக்கையாளர் கட்குமிடையில் வரையறுக்கப்பட்ட பங்குடைமை (Mudarabah/Limited Partner Ship) என்ற அடிப்படையிலும் அமையும். இப்பங்குடைமையின் அமைப்பானது அனேக விடயங்களில் இன்று நடைமுறையிலுள்ள பங்குடைமை சட்டங்களுடன் ஒத்ததாக காணப்படுகின்றது. இன்று உலகில் பங்குடைமை சட்டங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற 1890ம் ஆண்டின் பிரித்தானிய பங்குடைமைச் சட்டமானது, 18ம் நூற்றாண்டுவரை வணிகத்துறையில் உலகலாவியரீதியில் ஆதிக்கம் செலுத்திய முஸ்லிம்களினுல் பின்பற்றப்பட்ட பங்குடைமை முறைமையின் (Shirkat) தழுவல் என்பது இங்கு குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய ஒரு அம்சமாகும். [2]

முலதன வழங்கல்:

இஸ்லாமிய வங்கி யொன்றை ஆரம்பிப்பதற்கான முலதனத்தை அரசாங்கமோ அல்லது பொதுமக்கள் இணைந்து வரையறுக்கப்படாத பங்குடைமை, (Shirkat Inan/ Free Partnership) எனும் அடிப்படையிலோ வழங்கலாம். இவர்கள் வங்கியின் வரையறுக்கப்படாத பங்குதாரர்களாக கருதப்படுவர். இதனுல் வங்கி நட்டமடைந்து அதனை நிவர்த்திக்க வங்கியின் சொத்துக்கள் போதாத விடத்து பங்குதாரர்கள் தமது சொந்த சொத்துக்களை விற்றேனும் அதனை ஈடுசெய்தல் வேண்டும். நடைமுறையில் இவ்வாறுன ஒரு நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக வங்கி இலாபம் சம்பாதிக்கும் காலங்களில், எதிர்பாராத நட்டங்களை எதிர் கொள்வதற்காக குறிப்பிட்ட ஒரு வீத இலாபத்தை பாதுகாப்பு நிதியாக ஒதுக்கி வருவதன் மூலம் பங்குதாரர்களின் வரையறுக்கப்படாத பொறுப்புகளுக்கு வகைசொல்லப்படலாம். அதாவது ஒரு வருடத்தில் நட்டம் ஏற்படுமாயின் அதனை பங்குதாரரிடமிருந்து அறவிடாமலோ அல்லது அவர்களின் பங்குகளின் பெறுமதியைக் குறைக்காமலோ இந்நிதியில் இருந்து ஈடுசெய்ய முடியும். அது போன்றே வங்கியின் பொறுப்புகளை ஈடுசெய்ய அதன் சொத்துக்கள் போதாமல் போகும் ஒரு நிலை ஏற்படாதிருக்க இவ்வாறு ஒதுக்கப்பட்டு வரும் நிதி உதவிசெய்யும். பங்குதாரர்களின் உரிமைகள் அவர்கள் கொள்வனவு செய்துள்ள பங்குகளின் அளவுக்கேற்ப இருக்கும். அதற்கேற்பவே இலாபநட்டங்கள் பகிர்ந்தளிக்கப்படும். ஒரு பங்குதாரர் இறந்து விடுவாராயின் அவரின் பங்குத்தொகை அவருடைய சொத்துக்களின் உரிமையாளருக்கு மாற்றப்படும். இதனுல் வங்கியின் செயற்பாடுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாது.

## வைப்புக்களை ஏற்றல் :

ஏனைய வங்கிகளைப் போன்றே இஸ்லாமிய வங்கிகளும் வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்றன. தம்மிடமுள்ள பணத்தை பல்வேறு நோக்கங்களுக்காக மக்கள் வங்கிகளில் வைப்பு செய்கின்றனர். இந்நோக்கத் அடிப்படையில் இஸ்லாமிய வங்கிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்புகளை இரண்டு வகைகளாகப்பிரிக்கின்றன.

I. முதலீட்டு நோக்கம் இல்லாத கணக்குகள் :

(அ) நடைமுறை கணக்கு.

(ஆ) சேமிப்புக் கணக்கு.

II. முதலீட்டு நோக்கம் கொண்ட கணக்குகள் :

(அ) நிலையான கணக்குகள். (Fixed Deposits)

நடைமுறை கணக்கு:

இவ்வைப்பாளர்களின் நோக்கம் தமது அன்றாட கொடுக்கல் வாங்கல்களை இலகுவாகவும் பாதுகாப்பாகவும் செய்வதாகும். வங்கி வழங்கும் காசோலைப்புத்தகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இவ் வைப்பாளர்களின் நோக்கம் நிறைவேறுகின்றது. இவர்களுக்கு வங்கி எவ்வித இலாபப் பங்கையும் வழங்கமாட்டாது. அது போன்றே இவர்களும வங்கியின் நட்டங்களில் பங்குபற்றத் தேவையில்லை. மாறாக இவ்வைப்புகளின் நிருவாகச் செலவுகட்காக வங்கி ஒரு தொகைப்பணத்தை இவர்களிடமிருந்து அறவிடும்.

வங்கிகள் தமது அனுபவத்தின் மூலம் எவ்வளவு தொகையை உடன்காசாக வைத்திருக்கவேண்டும் என்பதைத் தீர்மானித்து மிகுதியை குறுங்கால நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலாம். அதாவது வட்டியின்றி மிகக் குறுகியகால கடன்களை வியாபார, விவசாய, கைத்தொழில் துறையினருக்கு வழங்க முடியும். மேலதிகப் பற்று வசதிகளையும் வழங்கலாம். இவ்வைப்பாளர்கட்கு எவ்வித வருமானங்களையும் வங்கி வழங்காததினால் இவ்வாறு வட்டியின்றி குறுங்கால கடன்களை வழங்குவது சாத்தியமாகும். இப்பணத்தை கம்பனிப்பங்குகளில் முதலிடவும் பயன்படுத்தலாம். இது மிகக்கிட்டிய திரவத்தன்மை கொண்ட முதலீடுகளாகும். இதன்மூலம் வங்கி சிறிய இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்விலாபத்தின் மூலம் நடைமுறைக் கணக்குகளின் நிருவாகச்செலவுகளை ஈடுசெய்ய முடியுமாயின் இவர்களிடமிருந்து அறவிடும் கட்டணங்களை வங்கி இல்லாதொழிக்க முடியும். இது வங்கியின் அனுபவத்தின் மூலம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

சேமிப்புக் கணக்கு :

இக்கணக்குகளும் முதலீட்டு நோக்கம் கொண்டவையல்ல. மாறாக பணத்தை சிறு சிறு அளவில் சேமிப்பதுடன் சிறிய இலாபத்தையும் பெற்றுக் கொள்ள முயல்வதே இவ்வைப்பாளர்களின் நோக்கமாகும். அதாவது இவர்களின் பிரதான நோக்கம் தமது திடீர்தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக முன்னெச்சரிக்கையாக ஒரு தொகை பணததை வைத்திருப்பதாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதுடன் சிறிய இலாபத்தையும் பெற்றுக் கொள்வதற்காகவே சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்கின்றனர்.

ஏனைய வங்கிகள் இப்பணத்தை குறுங்கால கடன் வழங்குவதிலும், கடன் பத்திரங்களை கொள்வனவு செய்வதற்கும் பயன்படுத்தி வட்டியைப் பெற்றுக் கொள்கின்றன. இஸ்லாமிய வங்கிகள் இப்பணத்தை பங்குடைமை ஒப்பந்த அடிப்படையில் சிறு முயற்சிகளில் முதலீடு செய்தல், வெற்றிகரமாக இயங்கும் நிறுவனங்களின் பங்குகளை கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு இலாபம் சம்பாதிக்கமுடியும். இதன் மூலம் வைப்பாளர் கட்கும் இலாபத்தில் பங்களிப்பு செய்யமுடியும்.

நிலையான முதலீடு (Fixed Deposit)

இவ்வைப்பாளர்களின் பிரதான நோக்கம் தம்மிடம் மேலதிகமாக உள்ள பணத்தை முதலீடு செய்து இலாபத்தை சம்பாதிப்பதாகும். இதற்காக இவ்வைப்பாளர்கள் நிலையான முதலீட்டுக்கணக்குகளை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இஸ்லாமிய வங்கிகள் இவ்வைப்புகளை வரையறுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட பங்குடைமை அடிப்படையில் பெற்றுக்கொள்கின்றன. இதனால் இவ்வைப்பாளர்கள் வங்கியின் வரையறுக்கப்பட்ட பங்குதாரர்களாக கருதப்படுவர். வங்கியின் வரையறுக்கப்படாத பங்குதாரர்களைப் போல் வங்கி நடவடிக்கைகளில் அதிகாரம் செலுத்துவதற்கோ, கட்டுப்படுத்துவதற்கோ, முகாமைத்துவத்தை அமைப்பதற்கோ இவர்களுக்கு உரிமையில்லை. ஆனால் வங்கியின் நிதிக்கணக்குகளைப் பார்வையிட, வங்கி ஷரீஆவுக்குட்பட்டவகையில் இயங்குகின்றதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள உரிமையுண்டு. இம்முதலீட்டுக் கணக்குகள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன.

(அ) அதிகாரமளிக்கப்பட்ட கணக்கு (Account with Authoraisation)

(ஆ) அதிகாரமளிக்கப்படாத கணக்கு (Account without Authoraisation)

அதிகாரமளிக்கப்பட்ட கணக்கில் கணக்காளர் அவரின் முதலீட்டுப் பணத்தை எந்த முயற்சியிலும் வருமானம் உழைக்கும் நோக்கில் ஈடுபடுத்துவதற்கு வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். ஆகவே வங்கி அவரின் பணத்தை தான் விரும்பிய முயற்சிகளில் (ஷரீ ஆவுக்குட்பட்ட வகையில்) ஈடுபடுத்தி நிதிவருட முடிவில் இலாபத்தை வழங்கலாம்.

அதிகாரமளிக்கப்படாத கணக்கின்படி கணக்காளரே அவரின் முதலீட்டுப்பணத்தை வருமானம் உழைக்கும் நோக்கில் எம்முயற்சிகளில் பயன்படுத்த வேண்டும் என்பதை வங்கிக்கு தெரிவு செய்து கொடுப்பார். ஆகவே, வங்கி அக்குறிப்பிட்ட முயற்சியில் பணத்தை ஈடுபடுத்தி அம்முயற்சி இலாபம் உழைத்தால் மாத்திரமே வைப்பாளருக்கு இலாபம் வழங்கும்.

இக்கணக்குகளை வங்கி ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறுவதனால் இவ்வொப்பந்தத்தில் கணக்கின் தவணைக்காலம், இலாப நட்டங்கள் என்ன விகிதத்தில் பிரிக்கப்பட வேண்டும் போன்ற விடயங்களில் இணக்கம் காணப்பட்டிருக்கும். இவ்வகைக் கணக்குகளே இஸ்லாமிய வங்கிகளின் பிரபல்யமான கணக்குகளாகவும், அதிகளவு வாடிக்கையாளர்களைக் கொண்டதும், கூடியளவு வைப்புத் தொகையைக் கொண்டதுமான கணக்குகளாக திகழ்கின்றன.

முதலீட்டு நடவடிக்கைகள்:

வங்கியொன்று தனது அன்றாட நடவடிக்கைகளுக்காக ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தை கையில்காசாக வைத்துக்கொண்டு மிகுதியை பல்வேறு வகையான முதலீடுகளில் ஈடுபடுத்த முடியும். எந்த அளவு பணத்தை உடன் காசாக வைத்திருக்க வேண்டும் என்பதை வங்கிகள் தமது அனுபவத்தின் மூலம் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் வங்கிகள் கையில் வைத்திருக்க வேண்டிய பணத்தின் தேவை நாடுகளுக்கு நாடு வித்தியாசப்படுகின்றது.

இஸ்லாமிய வங்கிகள் வட்டியுடனான கடன்களை கொடுத்து வருமானம் உழைக்க முடியாததால் அவை பின்வரும் இஸ்லாமிய கொள்கைகளின் அடிப்படையில் தமது முதலீடுகளை மேற்கொள்கின்றன.

சுதந்திரமான முதலீடுகள் (Independent Investments)

ஏதாவது தொழில் முயற்சிகள், தனக்கு சொந்தமாக இருக்க வேண்டும் என்று வங்கி கருதுமிடத்து வங்கி தானாக முழுமுதலீட்டையும் செய்து அத்தொழில் முயற்சியில் ஈடுபடும். இது வங்கியின் உபகம்பனியைப் போன்றிருக்கும். இத்தொழில் முயற்சிகள் சிறந்த முறையில் இயங்கவேண்டுமாயின் சம்பந்தப்பட்ட தொழிலுடன் தொடர்புள்ளவர்களை வங்கி இதற்காக நியமனம் செய்தல் வேண்டும்.

பங்குடைமை அடிப்படையில் முதலீடு:

இது இரண்டு வகையில் இடம் பெறலாம்:

1. வரையறுக்கப்படாத பங்குடைமை (Unlimited Partnership/Musharakah)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வரையறுக்கப்பட்ட பங்குடைமை (Limited Partnership / Mudarabah)

வரையறுக்கப்படாத பங்குடைமை அடிப்படையில் வங்கி குறித்த ஒரு நபருடன் அல்லது குழுவுடன் அல்லது ஒரு நிறுவனத்துடன் முதலீட்டு முயற்சியொன்றில் ஈடுபடமுடியும். தேவையான மூலதனத்தை இரு பகுதியினரும் உடன்பட்ட விதத்தின் படி வழங்கிக்கொள்ளலாம்' இம்முதலீட்டின் விகிதாசாரப்படியே இலாப நட்டங்கள் இரு பிரிவினருக்குமிடையில் பகிரப்படும். பங்குடைமையின் நிபந்தனைகள் அனைத்தும் ஒரு ஒப்பந்தத்தின் மூலம் இரு பிரிவினராலும் இணங்கப்பட்டிருக்கும். இவ்வகைப் பங்குடைமையில் வங்கி ஈடுபடுவதாயின் அது ஒரு இயங்கும் பங்காளியாகஇருக்க வேண்டும். இவ்வாறான முதலீடுகளில் ஈடுபடும் போது வங்கி தனது வைப்பாளர்களைக் கருத்திற் கொண்டு தொழில் முயற்சியில் கூடியகவனம் செலுத்தவேண்டும். ஏனெனில் வங்கியின் பொறுப்புகள் அது ஈடுபடுத்திய முதலுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை. இதனால் நடைமுறையில் வரையறுக்கப்பட்ட பங்குடைமை அடிப்படையில் (Mudarabah) முதலீடுகளில் ஈடுபடுவதே வரவேற்கத்தக்கதாகும்.

வரையறுக்கப்பட்ட பங்குடைமை அடிப்படையில் வங்கி முதலீட்டுத்திட்டங்களில் ஈடுபடும் போது திட்டத்துக்கு தேவையான முழு மூலதனத்தையும் வங்கி வழங்கும். அடுத்த பங்காளி உழைப்பை; முகாமைத்துவத்தை வழங்குவார். அன்றாட தொழில் நடவடிக்கைகளில் வங்கி தலையிடமாட்டாது. பங்காளியின் விருப்பத்தின் படியே தொழில் முயற்சி இடம்பெறும். ஒப்பந்தத்தில் பரஸ்பரம் இணங்கிய விதத்தின் படி இலாபம் இரு பிரிவினருக்கு மிடையில் பகிரப்படும். ஆனால் இம்முயற்சியில் ஏதும் நட்டம் ஏற்படுமாயின் வங்கி மட்டுமே முழுவதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அடுத்த 'பங்காளியின் உழைப்புக்கு எவ்வித கூலியோ ஏனைய வருமானங்களோ வழங்கப் படமாட்டாது. அதாவது இங்கு பணத்தை முதலீடு செய்தவருக்கு பண நட்டமும், உழைப்பை முதலீடு செய்தவருக்கு உழைப்பு நட்டமும் ஏற்படுகின்றது. ஒப்பந்தத்தில் ஈடுபடும் பங்காளி தொழில் முயற்சியில் சுதந்திரமாக ஈடுபடக்கூடியதாக இருப்பதால் இத்தொழில் முயற்சிகள் ஹறுமான முயற்சிகளாக இல்லாமல், இஸ்லாம் அனுமதிக்கக் கூடிய தொழில் முயற்சிகளாக இருக்கவேண்டும் என்பதில் வங்கி கவனம் செலுத்த வேண்டும். இதனை ஒப்பந்த நேரத்தில் தெளிவாக குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும். இது மீறப்படுமாயின் வங்கி உடனடியாக பங்குடைமையை இரத்துச் செய்து விடமுடியும். தேவையான போது தொழில் முயற்சியை, கணக்குகளை பார்வையிட வங்கிக்கு உரிமையுண்டு. இலாபநட்ட பகிர்வும் குறிப்பிட்ட ஒரு வீதத்தில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். இலாபம் குறிக்கப்பட்ட ஒரு தொகையென்றில்லாமல் விகிதாசாரமாக இருப்பதால் கூடிய இலாபம் பெறவேண்டுமாயின் பங்காளி செயல்திறன் மிக்க வகையில் இயங்க ஊக்குவிக்கப்படுகின்றார்.

### குறுங்கால கடன்கள் வழங்குதல்:

வட்டியில்லா வங்கிகளினால் வழங்கப்படக் கூடியதான குறுங்கால கடன்கள், 1 முதல் 2 வருடத்துக் குட்பட்ட கால அளவு தொடக்கம் 1 மாதத்துக்கும் குறைவான மிகக் குறுகியகால கடன்கள் வரையில் வேறுபடுகின்றது. இவ்வாறான கடன்கள் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் போன்ற தொழில் முயற்சிகளில் ஏற்படுகின்ற பருவகால நிதி நெருக்கடிகளை சமாளிக்கும் நோக்கோடு பெறப்படுகின்றன. அதாவது விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் அறுவடை காலங்களில் விவசாயிகட்கு ஏற்படுகின்ற நிதி நெருக்கடிகள், கைத்தொழில் துறையில் - அவர்களது பொருட்கள் சந்தைப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கும் காலங்களில் ஏற்படுகின்ற நெருக்கடிகள் போன்ற குறுங்கால பணத் தேவைகளை நிவர்த்தி செய்யுமுகமாக இக் குறுங்கால கடன்கள் வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய வங்கிகளும் இவ்வாறான கடன்களை வட்டியின் அடிப்படையில் வழங்கி வருகின்றன. ஆனால் இஸ்லாமிய வங்கிகள் வழங்கும் இவ்வகைக் கடன்களில் இருந்து இது வேறுபடுகின்றது. ஏனெனில் இஸ்லாமிய வங்கிகள் இக்கடன்களை எவ்விதவட்டியும் இன்றியே வழங்குகின்றன. இது நடைமுறையில் எந்தளவுக்கு சாத்தியமானது என்ற சந்தேகம் எழலாம். அரைவருடத்துக்கு அல்லது கால் வருடத்துக்கு அல்லது அதைவிடவும் குறைவாக, ஒரு மாதத்துக்கு உட்பட்ட கடன்களை வழங்கும் போது இஸ்லாமிய வங்கிகள் இதற்கான நிதியை நடைமுறைவைப்புகளில் இருந்து பெறுகின்றன. இவ்வைப்புகளுக்கு வங்கி எவ்வித வருமானங்களையும் வழங்குவதில்லையாதலால் இதனைக் கொண்டு மிகக் குறுகியகால கடன்களை எவ்வித வட்டியும் அறவிடாது வழங்கமுடியும். நடைமுறை வைப்புகளின் மூலம் பெறப்படும் பணத்தில் ஒரு பகுதியை உடன் காசாக வைத்திருக்கவும், இன்னொரு பகுதியை பணச்சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி மிகக்கிட்டிய காசாக வைத்திருக்கவும் பயன்படுத்துவது போன்று இன்னொருபகுதியை குறுங்கால கடன்களைவழங்க பயன்படுத்த முடியும்.

இக்கடன்கள் மிகக் குறுகியகால கடன்கள் என்றிருப்பதனால் இக்கால இடைவெளியில் கடனைப் பெற்றவர் அடைந்த இலாபத்தில் உரியபங்கை வங்கிக்கு பிரித்துக் கொடுப்பது சாத்தியமற்றிருப்பதனால் இக்கடன்கள் எவ்வித வட்டியும் இன்றி ''அழகிய கடன்கள்'' (கர்ளன் ஹஸனா) என்ற வகையில் வழங்கப்படுகின்றன.

இக்கடன்களை மீளப் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஏதாவது பிணைகளை வங்கி கோரமுடியும். இவ்வாறான கடன்களை வங்கி வழங்குமாயின் அது தர்பிரயோகம் செய்யப்படலாம் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப் படுகின்றது. அதாவது திறமையற்ற தொழில் முயற்சியாளர்கள் சந்தையினுள் புகுந்து இவ்வாறான கடன்களைப் பெறலாம் அல்லது வங்கியை ஏமாற்றும் நோக்கோடு இவ்வாறான கடன்கள் பெறப்படலாம் போன்ற பிரதிகூலங்கள் இருப்பதனால் வங்கிக்கு தொடர்ந்து இக்கடன்களை வழங்க முடியாத நிலை ஏற்படுவதோடு உண்மையான பணத்தேவையுடையோரை கண்டுகொள்ள முடியாத நிலையும் ஏற்படலாம் என்ற வாதம் முன் வைக்கப்படுகின்றது. ஆனால் இது ஒரு வலுவான வாதமல்ல ஏனெனில் குறுங்கால கடன்களை வழங்கும்போது தொழில் துறையின் தேவையை கண்டு கொண்டபின்னர்தான் வங்கி கடன் வழங்குமே யன்றி கேட்பவர்களுக்கெல்லாம் கடன்வழங்கப்படும் என்பதில்லை. குறுங்கால கடன்களுக்கு விண்ணப்பிக்கும் முயற்சியாளர்கள் தொழிலில் இட்டுள்ள மூலதனத்தைக் கொண்டும் அவர்களது செயற்பாடுகளைக் கொண்டும் இக்கடன்கள் வழங்கப்படக்கூடியதா இல்லையா என்பதை வங்கிகள் கண்டு கொள்ளமுடியும். நடைமுறையில் இவ்வாறான கடன்களை வழங்கும் போது வங்கி தேவையான அனைத்து பாதுகாப்பு முறைகளையும் எடுத்துக் கொள்ளமுடியும்.

ஒரு வருடத்துக்கு மேற்பட்ட, இரண்டு வருடங்களுக்குட்பட்ட குறுங்கால கடன்களை வழங்குகின்ற நிபந்தனைகள், மிகக் குறுகியகால கடன் வழங்கும் முறையினின்றும் வித்தியாசமானது. இங்கு இலாப நட்டங்களை கணக்கிட்டுப்பார்ப்பதற்கு தேவையான காலம் இருப்பதனாலும் கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் இரண்டு வருடம் வரை இருப்பதனாலும், கடன்பெற்றவரின் இலாபத்தில் வங்கியும் பங்காளியாக இருக்கும்.

இவைதவிர வங்கிகளினால் வழங்கப்படுவரும் ஏனைய எல்லா சேவைகளையும் இஸ்லாமிய வங்கிகளும் ஆற்றிவருகின்றன தனது வங்கியியல் சேவைகளுக்காக நியாயமான ஒரு தரகைப் பெற்றுக்கொள்கின்றன. உதாரணமாக வெளிநாட்டு நாணயமாற்றுச் சேவை, உண்டியல்களை மாற்றம் செய்தல், நாணயக் கடிதங்கள் வழங்கல், பிரயாணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசோலை வழங்கல், இன்னும் இதுபோன்ற சேவைகளை தரகு அடிப்படையில் செய்துவருகின்றன.

## முடிவுரை:

இஸ்லாமிய வங்கியியலை ஏனைய வங்கியியலோடு ஒப்பிடும் போது அது நேரடியாக உற்பத்தியுடன் தொடர்புபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஏனெனில் இஸ்லாமிய வங்கிகள் முதலீடு செய்தால் என்ன, கடன் கொடுத்தால் என்ன அங்கு இலாப நோக்கைவிட சமூகநலன் பயக்கும் அம்சங்களிலேயே கூடிய கவனம் செலுத்துகின்றன. ஏனெனில் இஸ்லாமிய ஷரீஆவுக்கு முரணான எந்த நடவடிக்கைகளிலோ, உற்பத்தி முயற்சிகளிலோ இவ்வங்கிகள் ஈடுபடுவதில்லை. இதன்படி ஒரு நாட்டில் வட்டியில்லா வங்கிகளின் செயற்பாடு அதிகரித்தால் அங்கு தேசிய உற்பத்தி பெருகுவதுடன் வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

இஸ்லாமிய வங்கிகளின் அமைப்பு, செயற்பாடுகள் பற்றிய அபிவிருத்திக் கொள்கைகள் காலத்துக்கு காலம் முஸ்லிம் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இக்கொள்கைகள் நாடுகளின் பொருளாதார அமைப்பு, மக்களின் பொருளாதார நிலை என்பவற்றிற்கேற்ப நாடுகட்கு நாடு வேறுபடலாம். நடைமுறையில் இவ்வங்கிகள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் இஸ்லாமிய ஷரீஆவுக்குட்பட்டவகையில் தீர்க்கப்படல் வேண்டும்.

இஸ்லாமிய வங்கிகள் தாபிக்கப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற முழுப் பயன்களும் அடையப்பட வேண்டுமாயின் முக்கியமான ஒரு நிபந்தனை நிறைவேற்றப்படவேண்டும். அதாவது இவ்வங்கிகள் வட்டியைத்தடைசெய்கின்ற இஸ்லாத்தின் கட்டளையின் படியே தாபிக்கப்படுகின்றன. இஸ்லாம் மனிதகுலத்துக்கு தேவையான முழு வழிகாட்டலையும் எக்காலத்துக்கும் பொருத்தமான முறையில் தன்னகத்தே கொண்டுள்ளதென்ற வகையில் வட்டியின் மீதான தடை அதிலோர் அம்சமாகும். எனவே, இவ்வங்கி தாபிக்கப்படுவதன் முழுநோக்கமும் பூரணமாக அடையப்பட வேண்டுமாயின் இஸ்லாத்தின் கொள்கைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு சமுதாயத்திலேயே அது சாத்தியமாகும். இன்றைய நிலையில் இவ்வாறான ஒரு சமுதாயத்தை எங்கும் கண்டு கொள்ள முடியாது. இஸ்லாமிய நாடுகளில் இவ்வாறான ஒரு சமுதாயத்தை அமைக்கும் முயற்சியின் ஒரு சிறு அங்கமாகவே இவ்வங்கி அமைப்பு அமைவதால் உடனடியாக பூரண பயனையும் எதிர்பார்க்கமுடியாது. இவ்வங்கிகளின் வெற்றியை நோக்கியபயணத்தின் முதற்கட்டமாக ஆகக் குறைந்தது இந்நாடுகளில் வட்டியுடன் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் முற்று முழுதாக சட்டரீதியாக தடைசெய்யப்படவேண்டும்.

முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளைப் பொருத்த மட்டில் இவ்வாறான வங்கிகளை ஆரம்பிப்பது ஆகக்குறைந்தது முஸ்லிம்கள் வட்டியினுடனான தமது தொடர்பைதுண்டித்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும். ஆனால் இவ்வங்கிகளை ஆரம்பிக்க குறிக்கப்பட்ட இந் நாடுகளின் அரசாங்க ஆதரவு அவசியமாகின்றது. இன்று முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளில் இவ்வங்கிகளை ஆரம்பிப்பதில் பிரதான தடையாக அந்நாடுகளின் அரசாங்கங்கள் இருக்கின்றன. வட்டியின் அடிப்படையில் இயங்கிவரும் தமது பொருளாதாரங்கள் பாதிப்படையலாம் அல்லது ஏனையவங்கிகள் இதனால் பாதிப்படையலாம் என இந்நாடுகள் நினைப்பதினாலேயே இவ்வாறான தடைகள் இடப்படுவதாக இருக்கலாம். இவ்வகையில்தான் இலங்கையிலும் வட்டியில்லா வங்கியொன்றை ஆரம்பிதற்கான ஆரம்பமுயற்சிகள் சென்ற காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட போது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. இந் நிலையில் இந்நாட்டு முஸ்லிம்கள் தம்மிடமுள்ள மேலதிகபணத்தை இலாபம் சம்பாதிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கில் வங்கிகளில் இட்டு வட்டிவாங்குவதைவிட ஒன்றுபட்ட ஒரு அமைப்பின் கீழ் இயங்கி தொழிற்தேர்ச்சி பெற்றவர்களுடனிணைந்து நேரடியாக முதலீடுகளை மேற்கொள்ளமுடியும். தேவைகளின் போது மீளப்பெறும்நோக்கில் சேமிப்புக் கணக்குகளில் வைப்பிலிடுபவர்களைப் பொருத்தமட்டில், கிடைக்கும் வட்டியை எவ்வித நன்மையையும் எதிர்பாராமல் சமூக நலனுக்கு ஏற்ற வகையில் செலவிட்டுவிடலாம். இவ்வட்டியை தமது பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். அதே நேரம் இவ்வட்டித் தொகையை வங்கிகளிலேயே விட்டு விடுவதையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் இவ்வாறு விடப்படுகின்ற பணம் இஸ்லாம் விரும்பாத நோக்கங்களுக்காக இவ்வங்கிகளினால் பயன்படுத்தப்படக் கூடும். எனவே, இந் நாட்டு முஸ்லிம்கள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவதுடன் வட்டியைவிட்டு தவிர்ந்து கொள்வதிலும் கூடியகவனம் செலுத்துவதும் அவசியமாகும்.

உசாத்துணைகள்:


1. இவ்விடையம் பற்றி மேலும் தெளிவாக அறியவிரும்பின் பார்க்க : Economic Doctrines of Islam Vol- III By Afzal - Ur - Rahman.

2. Afzal-ur - Rahman, *Economic Doctrines of Islam.* vol - IV, 1982 P. 302. Islamic Publication Ltd. Pakistan.

★ Dr. M. Fahim Khan, *Money and Banking in Islam,* Institute of Policy Studies, Pakistan.

★ Syed Abul A'ala Maududi, *Economic System of Islam,* Islamic Publications ltd. Pakistan.



*With Best Compliments From:*

22 கரட் அசல் தங்கத்தில்

- தரமான நகைகள்
- தரமான தொழில் நுட்பம்
- விருப்பத்திற்கேற்ற தெரிவு

**JEWEL LANKA**

SOVERIGN GOLD JEWELLERS

**174, MARKET SIDE,**
**AKURANA.**

**நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*

# FAIZAL BROS

**167, Main Street,**
**Colombo - 14.**

*T. Phone: 547200*

*With the Best Compliments of*

# DISCO TEX

திருமண பட்டுப் புடவைகள், பட்டு வேஷ்டிகள், சேர்ட்டிங்
சூட்டிங் வெளிநாட்டு சாரிவகைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்

**BAZAAR STREET, VAVUNIYA**

சிறந்த ரகம்! நிதான விலை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# K. N. M. MEERAN SAHIB

SOVEREIGN PALACE

JEWELLERS & DIAMOND MERCHANTS

**Kannathiddy,** **JAFFNA.**

**Telephone: 22585**

*Best Wishes From*

# GOLD HOUSE

*for*

**Fashionable JEWELLERIES**
**and BRILLIANTS**

KANNATHIDDY, JAFFNA.

Cable: JEWELLERS Dial: 22181


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*

# K. A. S. MOHAMED & SONS.

HARDWARE MERCHANTS &
BUILDING CONTRACTORS

221 - ¾, MATALA ROAD,
AKURANA.

Telephone: **08 – 93466.**

---

*With the Best Compliments of*

# CITY TIMBER & FURNITURE

DEALERS IN:
TIMBER & FURNITURES

**220, 222. Main Street,**
**KEKIRAWA.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
From:

# GAMPOLA HARDWARE

DEALERS IN:
**HARDWARE & ELECTRICALGOODS**

**27, KANDY ROAD,**
**GAMPOLA.**



*Best Wishes From*

# NEW ZEENIYAS

Dealers in:
FANCY GOODS

**STATION ROAD**
**WELIGAMA.**



*எமது வாழ்த்துக்கள்!*

**விதவிதமான**

- ★ கைக்கடிகாரங்கள்
- ★ பீங்கான் வகைகள்
- ★ அலுமினியப் பொருட்கள்
- ★ லைற் வகைகள்
- ★ எவர் சில்வர் பொருட்கள்
- ★ அன்பளிப்புப் பொருட்கள்

**ஆகியவற்றுக்கு**

# முபீனுஸ்

பெரியகடை,
மன்னார்.

T. P. 2145



**எமது வாழ்த்துக்கள்!**

**உங்களுக்குத் தேவையான**
**வீட்டுப் பாவனைப் பொருட்களுக்கு**
**என்றும் நாடவேண்டிய இடம்**

# பஸ்மியாஸ்

147, பஸார் வீதி,
வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மாதரும் தற்கால உலகில் அவர்களின் பங்கும்

எம். எல். அப்துல்காதர்.
(வியாபார நிர்வாகமாணி, விடுகைவருடம்)

எந்தவொரு சமூகத்தைப் பொருத்த மட்டிலும் அதன் எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆண், பெண் இருபாலாரினதும் ஒருமித்த ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். சிறப்பாகக் கூறுவதாயின் ஒரு சிறந்த சமூகத்துக்குரிய உறுதிமிக்க அடித்தளத்தை அமைத்துக் கொடுப்பதில் அதன் மாதர் குலத்தின் பங்கு கணிசமானதாகும். இந்த வகையிலேயே, இன்று பல்வேறு வழிகளிலும் தன் அந்திம காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் மேற்கத்திய கலாசாரத்துக்கும், அதனடிப்படையில் கட்டி எழுப்பப்பட்டுள்ள நாகரிகத்திற்கும் முஸ்லிம் உலகு கொடுக்கக் கூடிய பரிகாரத்தின் ஒரு பகுதியாம் மாதர் குலத்தின் பங்களிப்புப் பற்றிச் சிறிது நோக்க நாம் ஒரு சிறு பிரயத்தனம் மேற்கொண்டுள்ளோம். ஆயினும் துரதிர்ஷ்டவசமாக பெண்களைப் பற்றியும், பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள கௌரவத்தைப் பற்றியும் பேசுவதினின்றும் எமது நடைமுறைவாழ்வு பெரிதும் வேறுபடுகின்றது; மாறுபடுகின்றது. வாழ்வின் பல்வேறு துறைகளுக்கும் இஸ்லாம் வழங்கியுள்ள உயர் பெறுமானங்களை நடைமுறைப்படுத்திப் பயன்பெறுவதற்குப் பதிலாக, நாம் அவற்றைப் பேசுவதோடு மட்டும் நின்றுவிடுகிறோம். உண்மையில் இஸ்லாத்தின் மகோன்னதம் பற்றிய எமது பேச்சுக்களும் எழுத்துக்களும் அவற்றின் நடைமுறைச் செயற்பாடுகளினூல் பூரணப்படுத்தப்படல் வேண்டும்; இஸ்லாமியப் பெறுமானங்களும் அவற்றின் பிரத்தியட்ச வெளிப்பாடான நீதி மிக்க வாழ்க்கை முறையும் செயலுருப் பெறுவதற்கான வழி வகைகளை நாம் ஆராய வேண்டும்.

எது எவ்வாறுயினும் இஸ்லாம் பெண்களுக்கு அளித்துள்ள நிலை, இஸ்லாத்தின் தோற்றத்தின் போது உலகில் பெண்களுக்கு அளிக்கப்பட்டுக் கொண்டிருந்த அந்தஸ்து என்பவற்றின் மீதும் ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்துவது, இஸ்லாத்தில் பெண்களின் நிலை பற்றிய ஒரு சரியான நிலைப்பாட்டுக்கு உதவுமென எண்ணுகிறேன்.

## இஸ்லாத்திற்கு முன் பெண்கள் நிலை:

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன் பொதுவாகப் பெண்களின் நிலை மிக மிக மோசமானதாகவே காணப்பட்டது. பெண்களை எந்தவகையிலும் ஆண்களுக்குச் சமமானவர்களாக அன்றைய உலகு கருதவில்லை. சில கொள்கைகள் மேலும் ஒரு படி மேலே சென்று பெண்களை மானுடப் பிறவிகளாக ஏற்றுக் கொள்ளவே தயங்கின. புராதன நாகரிகங்களின் தாயகம் எனத் தம்மைப் பிதற்றிக் கொள்ளும் இந்தியா, கிரேக்கம், உரோமம் முதற் கொண்டு பொதுவாக எல்லா நாடுகளிலும் பெண்களின் நிலை மிக மிகத் தாழ் நிலையிலேயே இருந்து வந்துள்ளது.

அன்றைய இந்திய மாது ஒருத்தி தன் கணவனைப் பார்த்து "எனது எசமானே!", என்றோ அல்லது "எனது கடவுளே!" (My God or My Lord) என்றோ தான் விளிப்பாளாம். ஆணவன் பெண்ணின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகக் கடவுளெனக் கொள்ளப்பட்டான். அவனோடு கூடவிருந்து உண்பதோ அண்டிய வகையில் ஒன்றாக நடந்து செல்வதோ மறுக்கப்பட்டன. அவள் தன் கணவனை வணங்கி வழிபட்டு வந்தாள். புராதன இந்தியர்கள் பெண்களை, மிருகாவேசங்களைத் தணித்துக் கொள்ள உதவுகின்ற ஒரு விளையாட்டுப் பொருளாகவே மதித்தனர். பெண்ணுடனான பாலியற்றொடர்புகள் இந்தியர்களால் அருவருக்கத்தக்க பாவமாகக் கருதப்பட்டன, அத்தொடர்பு சட்டரீதியானதாகவோ சட்டரீதியற்றதாகவோ இருந்த போதிலும் சரியே. [1]

பண்டைய கிரேக்கம் பற்றியும் பார்த்து வருவோம். அங்கு பெண்கள் மூன்று பிரிவினராகக் காணப்பட்டனர்:

I ஆண்களின் துர் நடத்தைகளுக்குத் துணை போன விபசாரிகள்.

II பிரபுக்களின் உடற்சுகம் பேணுகின்ற பணிப் பெண்கள். (Mistresses.)

III மனைவியர்கள்: இவர்களின் முக்கிய பணி குழந்தைப் பராமரிப்பு ஆகும்.

இவ் வொவ்வொரு கூட்டத்தினரதும் சமூக அந்தஸ்து அல்லது நிலை நிரந்தரமானதாகக் காணப்பட்டது. அந்நிலை உயர்வடைவதை அச்சமூகம் ஒரு போதும் அனுமதிக்கவில்லை. ஒரு பெண் அவளது எத்தகு சம்மதமுமின்றி தன் கணவனாக ஒருவனையும் பிரபுவாக (Lord) ஒருவனையும் ஏற்றுக் கொள்ளுமாறு பணிக்கப்பட்டாள். இந்நிலைமைகளில் பெண்ணின் சம்மதம் பெறுவதை அவர்கள் ஒரு தேவையாகக் கூடக் கருதவில்லை. [2]

ஆச்சரியத்துக்கும் அற்புதத்துக்குமுரிய செய்தி என்னவெனில் ஒரு கிறிஸ்தவப் பெண் துறவிக்கான சொற்பொழிவாற்றும் உரிமைகூட மிக மிக அண்மைக்காலத்திற்றான் வழங்கப்பட்டு உள்ளது. அதாவது கி. பி. 02-04-1978 அன்று ஆகும். [3] ஆனால், பெண்ணுக்குரிய உரிமைகளைக் கபளீகரம் செய்து விட்டதாகப் பாரதூரமாகக் குற்றம் சுமத்தப்படுகின்ற இஸ்லாமோ, இதற்கு ஏறக்குறைய 1400 ஆண்டுகளுக்கு முன்பே முழு இஸ்லாமிய சாம்ராச்சியத்தின் தலைவரான கலீபா உமர்(றழி) யின் தீர்ப்பைப் பகிரங்கமாகப் பள்ளிவாசலிலேயே எதிர்த்துப் பேசித் தன் வாதத்தில் வெற்றியும் பெறக்கூடிய துணிச்சலையும் அதே நேரம் உரிமையையும் பெண்ணினத்துக்கு வழங்கியது. பெண்ணின விடுதலைக்குக் கோசமிடுபவர்கள் இத்தினத்தை அறிந்து வைத்திருந்து விழாவெடுக்க வேண்டியளவுக்கு இது முக்கியத்துவம் பெற்றதாகும். ஆயினும் துரதிட்டவசமாக ஏனோ இன்றைய உலகு இவற்றையிட்டு ஆழ்ந்த மௌனம் சாதிக்கிறது!

கி.பி. 15ம் நூற்றாண்டில் கூடிய ஒரு மாநாட்டின் முடிவு வருமாறு:

பெண்ணுக்கு ஆன்மா என்பது கிடையாது. அவள் ஒதுங்கும் இடம் நரகமே. ஆயினும் இயேசுநாதரின் தாயார் மேரிக்கு மாத்திரம் இதிலிருந்து விதி விலக்கு அளிக்கப்படும்.

இன்னும் ஒரு நூற்றாண்டு கழித்து பெண் என்பவள் மனிதப் பிறவிதானா அல்லவா என்பது குறித்து வாதிக்க ஒரு மாநாடு நடைபெற்றது. அதில் பெண் என்பவள் மானுடப் பிறவிதான் என்பதில் இணக்கம் கண்டனர். பெண், ஆணின் வசதிகளின் பொருட்டுச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளாள் எனவும், எனவே அவளதுகடமை அவனுக்குச் சேவை புரிவதே என்பதிலும் இணக்கம் காணப்பட்டது. [4]

நிலைமை இவ்வாறு இருந்தபோதிலும் இதற்கு ஏறக்குறைய எண்ணூறு (800) ஆண்டுகளுக்கு முன் இஸ்லாமிய வரலாற்றில் பெண்மையை உச்சியில் வைத்துப் போற்றுகின்ற ஒரு நிகழ்வு நடக்கிறது. அதாவது கி.பி. 620ல், இஸ்லாத்தின் வியாபகத்துக்குக் கால்கோலிய அந்த மகத்தான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவமென வரலாற்றாசிரியர்களாற் சுட்டப்படும் அகபா உடன்படிக்கை -2ல் கலந்து கொள்ள யத்ரிபிலிருந்து (இன்றைய மதீனா) 75 பேரை உள்ளடக்கிய ஒரு தூதுக்குழு மக்காவுக்கு வருகிறது. இவர்கள் நபி (ஸல்) அவர்களை யத்ரிபுக்கு வருமாறும், வந்தால் சகல வழிகளிலும் ஒத்துழைத்துப் பாதுகாப்பு நல்குவதாகவும் நவில்கின்றனர். இவ்வெழுபத்தி ஐன்மரில் இருவர் பெண்களாவர். அவர்கள்: நஜ்ஜார் குழுவைச் சேர்ந்த கஅபின் மகள் நுஸைபா [உம்மு அம்ரா (ரலி)]வும் ஸல்மா கோத்திரத்தைச் சேர்ந்த அம்ரின் மகள் அஸ்மா [உம்மு மனீ(ரழி)] ஆகியோருமாவர்.[5]

## பெண் விடுதலைக் கோசங்கள்:

இஸ்லாம் பெண்களுக்குரிய மகத்துவத்தையும் மற்றும் மாண்புகளையும் வழங்கி ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் தான் நவீன உலகம் பெண்கள் பற்றிச் சிந்திக்கத் துவங்கியது. அதுவும் தானாக முன்வந்து பெண்களின் உரிமைகளை அவர்கட்கு வழங்கவில்லை. ஏனெனில் பேராசிரியர் முஹம்மத் குத்ப் தமது இயமும்தெளிவும் ("Islam the misunderstood Religion"- English Translation from Arabic) என்ற நூலில் குறிப்பிடுவது போல "மேற்கத்தைய உலகு தண்டனை அனுபவிக்காது ஒரு குற்றத்தைச் செய்ய முடிந்த எந்தவொரு நிலையிலும் அதனைச் செய்யாது விட்டதில்லை.'' 15ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற கைத்தொழிற் புரட்சி மனிதனை மாடாக வருத்தி வேலை வாங்கியது. வீட்டிலுள்ள பெண்கள் முதற்கொண்டு சிறுவர் வரை தொழிற்சாலைகளுக்குச் சென்று வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். பெண்ணின் வேலைப் பளு எந்தகைய நிலையிலும் ஆண்களின் வேலைப் பளுவிலும் குறைவுபடாத போதும் ஆணுக்கு வழங்கப்பட்ட வேதனத்திலும் மிகக் குறைந்த தொகையே அவளுக்கு வழங்கப்பட்டது. பெண் தொழிற்சாலைக்குச் சென்று வேலை பார்க்கிறாள் என்பதற்காக, எந்த வகையிலும் அவளுக்கேயுரிய வீட்டு வேலைகள் குறைந்தபாடாக இருக்கவில்லை. இது அவளை இருதலைக் கொள்ளி எறும்பாக வருத்தியது.

பெண்ணின் இத்தகைய அவலநிலை, அவளைப் "பெண்விடுதலை'' என்ற போராட்ட அலைகளினூல் சமூக அநீதிக்கெதிரான கோசங்களின் பக்கம் இழுத்துச் சென்றது. மேலெழுந்த வாரியாக நோக்குகையில் இது கவர்ச்சிகரமானதும் ஆக்க பூர்வமானதுமாகத் தென்படலாம். ஆயினும் யதார்த்த நிலையில் இவற்றினூல் பெண்ணினம் பெற்றுக் கொண்ட உயர்பெறுமானங்கள் தாம் என்ன என்பதை நோக்கின் விடை பூச்சியமாகவே அமையும். ஏனெனில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் தோற்றத்தில் மாத்திரமன்றி இயல்பிலும் ஆற்றல்களிலும் கூட நிறைய வேறுபாடுகள் காணப்படுவது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆகவே அவரவர்க்குரிய உரிமைகளும் கடமைகளும் அவரவர்களின்உள, உடலியல் அம்சங்களை மிக நுணுகி ஆராய்ந்த பிறகே நிர்ணயிக்கப்படல் வேண்டும். ஆண்கள் செய்கின்ற அனைத்து வேலைகளும் பெண்களாலும் செய்யப்பட முடியுமென்றோ அல்லது ஆண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளனைத்தும் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டுமெனக் கோருவதோ அல்லது பெண்களுக்கேயுரியசில சிறப்புரிமைகள் ஆண்களுக்கும் வழங்கப்பட வேண்டுமெனக் கோசமெழுப்புவதோ நியாயமாகாது. ஏனெனில் இந்த மகத்தான பிரபஞ்ச அமைப்பானது சில வரையறைகளுக்குட்பட்டே செயற்படுகிறது. ஆகவே இந்த இயற்கையின் வரையறைகளை மீறிச் செல்ல எடுக்கப்படுகின்ற பிரயத்தனமானது மானுட வாழ்வை அழிவெனும் அதள பாதாளத்திற்கு இட்டுச் செல்ல எடுக்கப்படுகின்ற நடவடிக்கையாகும் என்பது வெள்ளிடைமலை.

சிலவேளை பெண் விடுதலைக் கோசங்கள் பெண்ணை ஆட்சிபீடத்துக்கும், ஆணுடன் சமமாக வேலை செய்யவும், சமமான சன்மானத்தைப் பெறவும் வழிவகுத்ததாயினும் அவளது அடிப்படை இயல்புகளில்

மாற்றத்தை உண்டாக்கியதாவெனின் அது தான் கிடையாது. பயங்கரமான நிலையில் தனிமையில் மாட்டிக் கொள்கின்ற ஒரு பெண், தான் எத்துணை ஆற்றல் மிக்கவளாக விருப்பினும் தன்னைத் தனித்து நின்று பாதுகாத்துக் கொள்ள முடியாதென்பதைத் திடீரெனத் தெளிவுற உணர்கிறாள். அதானது ஒரு பெண் இத்தகு நிலையில் தன் கற்புடைமை குறித்து திடீரெனப் பீதியுறுவாள். ஆயினும் ஒரு ஆணைப் பொருத்தளவில் அவன் இத்தகைய ஒரு மனோவியல் தாக்கத்துக்கு உட்படமாட்டான் என்பது நடைமுறையில் அறிந்தவிடயமாகும். அதேபோல பெண்ணானவள் காவற்படையிற் சேர்த்துக் கொள்ளப்பட்டு ஆணோடு சமமாக மதிக்கப்படலாம். ஆயினும் ஆண்கள் சுறுசுறுப்பாகச் செயற்படுவதைப் போன்று தம் மாதாந்தப் பருவ காலங்களில் செயற்பட, அவளை அவளது உடலமைப்பு நிலை ஒரு போதும் அனுமதியாது.

அத்தோடு நவீன பெண்விடுதலைக் கோசம் சமூகத்தின் புனிதமான குடும்ப ஒழுங்கமைப்பினை வெகு ஆழமாகப் பாதித்துள்ளது. ஒழுங்கான முறையில் திருமணம் புரிந்து குடும்ப வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தை மேற்கில் பலருக்கு இக்கோசம் இல்லாதொழித்துள்ளது. இதன் தர்க்க ரீதியான விளைவுகள் தான் இன்று மேற்கத்தைய உலகு எதிர் நோக்குகின்ற AIDS போன்ற பயங்கர நோய்களாகும். அது மட்டுமன்றிக் கிடைக்கத்தகு தரவுகளின் படி ஐ. அமெரிக்காவில் பிறக்கின்ற ஒவ்வொரு ஆறு குழந்தைக்கும் ஒரு குழந்தை சட்டரீதியற்ற குழந்தையாக உள்ளது. இவ்வாறு அரவணைப்பாரற்ற வருங்காலச் சந்ததியினரைப் பெருவாரியாகப் பெற்றுள்ள ஒரு நாட்டின் நிலை என்னவாகும். இவர்களுக்கென ஐ. அமெரிக்க அரச சட்டரீதியற்ற குழந்தைகள் இல்லத்தை (The home for illegal children) வைத்துப் பேணுவதாக எவரும் வாதிக்கலாம். ஆயினும் ஒரு குழந்தை தன் தாயிடம் பெறுகின்ற அன்பையும் அரவணைப்பையும் வேறு எவராலும் ஈடுசெய்து விடமுடியாது என்பதில் இரு கருத்துக்கள் நிலவ முடியாது.

ஒழுங்கான குடும்பங்களிலும் கூட பெண்கள் கடின உழைப்புக்கு வற்புறுத்தப்படுவது அல்லது அதை விரும்பி ஏற்பது பல எண்ணிறந்த பிரச்சினைகளை உருவாக்குவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு குடும்பப் பெண், பின் தூங்கி முன் எழுகிறாள்; அவசர அவசரமாக வேலைக்கு விரைகிறாள்; அவள் பின்னேரம் அல்லது இரவில் களைத்தவளாக வீடு திரும்புகிறாள்; வீட்டில் தொலைக்காட்சியின் முன்னே அல்லது பலத்த இசையின் முன்னே சிறிது ஓய்வு கொள்கிறாள். சிறிது களைப்புத் தீர்ந்த பின் தான் தன் குழந்தையை ஒரு சில நிமிடங்களுக்கு மடியில் வைத்துக் குழவுகிறாள். அதுவரை இக்குழவியானது வேலைக்காரியிடமோ அல்லது வேறு யாரிடமோ தான் இருக்கவேண்டி இருக்கும். இதன் தர்க்க ரீதியான விளைவு என்னவாக அமையும்:

> எப்போதும் குழந்தைகள் தம் தாயன்பைப் பெறுவதில் அதீத பற்றுக் காட்டுவது தவிர்க்க முடியாதது. ஆயினும் இந்நவீன நாடோடி வாழ்வு இதை அனுமதிப்பதாக இல்லை. நாகரிக உலகின் வளர்கின்ற பயிருக்கு அழகிய கதைகளைச் சொல்வார் யாவர்? அதன் பள்ளிக் கூட வேலைகளில் துணை போவோர் தான் யாவர்? பால்யப் பருவத்தின் இன்றியமையாத இளமைக் காலத் தாயன்பு (Tender Love of mother) இச்சிறுவனைப் பொருத்தளவில் எங்கோ கேட்ட ஒரு கற்பனையுரு. ஏனெனில் அவள் தான் அதற்குக் கொடுத்து வைக்கவில்லையே!

இவை தாம் பெண்விடுதலை எமக்குப் பெற்றுத் தந்த மதிப்புமிகு கைங்கரியங்கள். நடைமுறை வாழ்வின் அமைதிக்கு ஆப்பு வைத்த மேற்கின் திறமையற்ற இத்தகு போராட்டங்கள் மேற்கிற்கு விடுதலையளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்குப் பதிலாக அச் சமூகங்களுக்குள்ளேயே மேலும் சிக்கலையும் எதிர் விளைவுகளையும் தோற்றுவித்தன.

ஆயின் கிழக்கும் இத்தகு நவீனங்களைக் கண்மூடிப் பின் பற்றுவதா? கூடாது. இத்தகு சவால்களை எதிர் கொள்வதில் கிழக்கத்திய சமுதாயங்களுக்கு உதவக் கூடிய சிறந்த காரணி அவற்றின் வளமிக்க கலாசாரமும் வரலாறும் ஆகும். இவ்வகையில் இஸ்லாமிய சமுதாயங்கள் அதிட்டம் மிக்கனவாகும். நாம் அதை உரிய முறையில் பயன்படுத்தா விடினும் கூட அவை வளமாறு வரலாற்றையும் கண்ணியத்துக்குரிய கலாசாரப் பாரம்பரியத்தையும் பெற்றிருக்கின்றன. இஸ்லாமிய வரலாற்றிற்கு உதார புருஷர்களை அள்ளி வழங்கக் கூடிய வீரப் பெண்மணிகள் தாம் மேற்குலகின் நவீன அலைகூவல்களுக்கெதிரான உணர்வுபூர்வமான போராட்டமொன்றை எம் இஸ்லாமிய சமுதாயத்தின் இளைய தலைமுறையினர் மத்தியில் உருவாக்கக் கூடிய ஆற்றல் மிக்க ஆயுதங்களாவர். இந்த மானுடச் சின்னங்களை ஒழுங்காக அறிமுகப்படுத்தி நெறிப்படுத்துகின்ற பொறுப்பை இஸ்லாமியப் பெண்மணிகள் ஏற்பார்களென்றிருந்தால், தாம் பின்பற்றத் தகுந்த சின்னங்கள் தம் சொந்த வரலாற்றிலேயே உண்டென்பதை நம் இளம் தலைமுறையினர் இலகுவில் புரிந்து கொள்வர்.

## இஸ்லாமியப் பெண்ணின் பணிகள்:

ஒரு இஸ்லாமியப் பெண்ணின் தலையாய பணி வளமிக்க சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதில் துணை போவதாகும். இதற்காக அவளது மிகமுக்கிய பங்களிப்பு குழந்தைகளை இஸ்லாமியப் பாரம்பரியங்களுக்கு ஏற்றாற் போல் உருவாக்கி விடுவதில் வேண்டப்படுகிறது.

நல்ல மரம் தான் நல்ல கனிகளைத் தர முடியும். நல்லொழுக்கமுள்ள ஒரு பெண்ணாற்றான் சமூகம் எதிர்பார்க்கின்ற. ஒரு நல்ல மனிதனைத் தரமுடியும். இஸ்லாமியக் கல்வி முறையின் அடிப்படை இலட்சியம் கூட நல்லதொரு மனிதனை உருவாக்குவதாகும். (நவீன கல்விமுறையின் இலட்சியம் அந்நாட்டுக்குரிய ஒரு சிறந்த பிரசையை அளிப்பதாகும்) இவ்வடிப்படையில் இஸ்லாமியக் கண்ணோட்டம் பரந்து பட்டதாகும். நல்ல மனிதனின் உருவாக்கம் ஒழுங்கான குழந்தை வளர்ப்பிலும் திறனுள்ள பராமரிப்பிலும் தங்கியுள்ளது. இதற்காக வேண்டியே இஸ்லாம் குழந்தைகளுக்கு உளவியல், உடலியல் ரீதியாக இன்றியமையாத தெனக் கருதும் தாய்ப்பால் குறித்து அதீத அக்கறை செலுத்துகிறது. குழந்தைக்குப் பாலூட்டுவதில் சிரமமேற்படுமென ஐயுறின் ஒரு பெண்ணுக்கு நோன்புகளை விட்டுவிட்டுப் பிறகு களாச் செய்யவும் அனுமதிக்கிறது இஸ்லாம். அத்துடன் கெட்ட துர்நடத்தையுள்ள பெண்கள் மூலம் தம் பிள்ளைகள் பாலூட்டப்படுவதையிட்டு நபி (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

ஆரம்பப் படிப்பைத் தன் தாயினூடாகவோ அல்லது தாயின் கண்காணிப்பிலோ பெற இஸ்லாம் ஏற்பாடு செய்துள்ளது. இதற்கு தாயும் ஓரளவு கல்வியறிவுள்ளவளாக இருப்பது இன்றியமையாததாகும். இதனாற்றான் இஸ்லாம் கல்வியைத்தேடிப் பெறுவது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலார்மீதும் கட்டாயக் கடமையென விதித்துள்ளது.

இஸ்லாமிய சமூகத்தின் தாயைய தலைவனுன - உறுப்பினனுமான இன்றைய குழந்தை, வளர்க்கப்படும் சூழ்நிலை குறித்து மாத்திரமன்றி அவனது பிறப்புப் பற்றியும் இஸ்லாம் அதிக கவனம் செலுத்துகிறது. ஒரு முறை ரசூல் (ஸல்) அவர்கள் வருமாறு எச்சரித்தார்கள்:

''குப்பையில் வளர்கின்ற தானியங்கள் குறித்து நான் உங்களுக்கு எச்சரிக்கிறேன்'' என்பதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது ஒழுக்கம் கெட்ட குடும்பத்திலுள்ள அழகிய பெண் குறித்தே நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு எச்சரித்தனர். அத்தோடு ஒரு பெண்ணின் இஸ்லாமியப் பண்பு, நடத்தையை உற்று நோக்காது வெறுமனே அவளது பணத்துக்காகவோ, குடும்ப அந்தஸ்த்துக்காகவோ அல்லது வெளிவாரியான அழகுக்காகவோ துணைவியாகத் தேர்ந்தெடுக்கின்ற நடத்தைப் பாங்கினை நபி(ஸல்) அவர்கள் வெகுவாகக் கண்டித்தனர். ஏனெனில் தீனில்-இஸ்லாமிய சன்மார்க்கத்தில் பற்றுமிக்க பெண்களின் மூலம் தான், தீனிலே பற்றுமிக்க பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்து உரிய முறையில் பயிற்சியளிக்க முடியும். நாளை முளைவிடப் போகும் இஸ்லாமிய சமுதாயத்தைத்தோற்றுவித்துத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துகின்ற அந்த மகோன்னத பணிக்கு அவர்கள் மாத்திரமே களம் அமைத்துக் கொடுக்க முடியும். மாறாக தான் ஏற்றுக் கொண்ட கொள்கையிலேயே பிடிப்பற்றவர்களால் எவ்வாறு நாளைய சமூகத்துக்கு வழிகாட்ட முடியும்.

## சுடர் விடும் தாரகைகள்:

அப்போது தான் புலர்ந்து கொண்டிருந்த அந்த இளம் அந்திப் பொழுதாம் இஸ்லாமிய வானில் சுடர் விடும் தாரகைகளெனச் சுடர் விட்டுப் பிரகாசித்த சில வீரப் பெண்மணிகளின் வரலாற்றுத் துணுக்குகள் சிலதைத் தொட்டுச் செல்லல் பயனுடைத்து எனக் கருதுகிறேன். இந்த வகையில் சுமையா (றழி) அவர்களின் வரலாறு முதலிடம் பெறுகிறது. அன்னாரை அபூஜஹ்ல் மரணத்தின் விளிம்பில் நிறுத்தி வைத்துக் கொண்டு அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நிந்தித்து வசைபாடுமாறும், குறைஷிக் குல தெய்வங்களைப் போற்றிப் புகழுமாறும் கேட்டுக் கொண்டான். இதற்கு மறுக்கும் பட்சத்தில் உயிர் உடலிலிருந்து பலவந்தமாகப் பிடுங்கப்படும் எனவும் எச்சரித்தான். அதற்கு அவ் வீரசிரோன்மணி வருமாறு பதிலளித்தனர். "நீயும் உனது கடவுளர்களும். உங்கள் மீது சாபம் உண்டாகுக. உங்களது இந்த அசிங்கமான, அவலட்சணமிக்க முகங்களைப் பார்ப்பதினின்றும் எனைத்தடுக்க மரணத்தினைவிடவும் சிறந்த சாதனம் வேறு உண்டோ." இவ்வெதிர்பாராத பதிலால் கிளறிவிடப்பட்ட அபூஜஹ்ல் அன்னாரை ஈட்டியெய்து ஷஹீதாக்கினான். இஸ்லாமிய வரலாற்றில் முதலாவது உயிர்த் தியாகியாக (ஷஹாதத்) இவர்கள் மதிக்கப் படுகிறார்கள்.

நபி (ஸல்) அவர்களது காலத்தில் புனித யுத்தங்களிலே (ஜிஹாத்) பெண்களும் கலந்து கொண்டு ஒத்துழைத்ததை நாம் வரலாற்றேடுகளில் காண்கிறோம். ஆயிஷா (றழி), உம்மு ஐமன் அல்ஹபஷி (றழி) உட்பட இன்னும் சில பெண்கள் உஹத் போரில் கலந்து கொண்டனர். இவர்கள் வீரர்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்தல், காயப்பட்டவர்களைப் பராமரித்து ஆறுதல் கூறல் முதலிய பணிகளில் ஈடுபட்டனர்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உஹதில் காயமுற்ற போது வைக்கோல், பழைய பாய்த்துண்டு என்பவற்றை எரித்து அன்னாரின் காயத்திற்கு மருந்து இட்டதும் அன்னை ஆயிஷா (றழி) அவர்களேயாவர்.

ஹஸ்ரத் நுஸைபா (றழி) அவர்கள் பெண்களின் தூதுக்குழு ஒன்றுக்குத் தலைமை தாங்கி வந்து அல்லாஹ்வின் தூதரிடம் ஆண்களைப் போல் பெண்களும் புனித யுத்தங்களில் பங்குபற்றுவதற்குரிய அனுமதியை வேண்டி நின்றனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "நீங்கள் (பெண்கள்) என்ன செய்வீர்கள்" எனக்கேட்க "நாங்கள் ஆடைகளை வீரர்களுக்குத் தயாரித்தளிக்கலாம், காயமுற்றோர்களுக்கு மருந்திட்டு ஆறுதலளிக்கலாம், நோயுற்றோர்களுக்குச் சிகிச்சையளித்து அனைவருக்கும் தண்ணீர் புகட்டலாம்" என்று நவின்று நின்றனர். உஹத் போரிலே இவர்கள் நபி (ஸல்) அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பாதுகாக்கின்ற உக்கிரப்போர் முனையிலும் பங்கு கொண்டனர் என்கிறது வரலாறு. [6]

அகழ்ப் போரின்போது ஸஃபிய்யா பின்த் அப்துல் முத்தலிப் [ஹம்ஸா(றழி) அவர்களின் சகோதரி] அவர்கள் ஒரு யூத உளவாளியைக் கழியால் அடித்துக் கொன்று அவனது தலையையும் கொய்து கோட்டைக்கு வெளியே வீசி எறிந்தனர். [7] யர்மூக் யுத்தத்தின் போது சில பெண்கள் சிறைக்கைதிகளினுல் சிறைப் பிடிக்கப்பட்டனர். சிறைப் பிடிக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தப்பித்துக் கொள்ள தடிகளையும், கூடாரத்தின் அடித்துத் தாக்கக் கூடிய பொருட்களையுமே பயன்படுத்தினர். இந்த மீட்புப் போர் கௌலா பின்த் அல்-அஸ்வர் (றழி) என்ற ஸஹாபிப் பெண்மணியின் தலைமையின் கீழ் நடாத்தப்பட்டது.

நாம் இதுவரை போர்த் துறைகளில் இஸ்லாமியப் பெண்கள் ஆற்றிய சில சாதனைகள் பற்றி மிகச் சுருக்கமாகப் பார்த்தோம். பொதுவாகப் பயந்த இயல்பினர்களாயும் ஆண்களை விடவும், அதிகம் அறிவின் அடிப்படையிலன்றி, உணர்ச்சிகளின் அடிப்படையில் செயற்படுபவர்களாகப் பெண்கள் காணப்படுகின்றனர். இந்தவகையில் பெண்கள் விரைவில் பீதி, கவலை முதலிய உணர்வுகளால் பீடிக்கப்படுகின்றனர். ஆயினும் கூடத்தமக்கேற்பட்ட மிகப்பெரிய துக்க நிலைமைகளைக் கூட மிகத் துணிச்சலாகத் தாங்கி இஸ்லாமிய இயக்கத்தின் வளர்ச்சி பற்றியே முழுமுனைப்போடு இருந்த பல வீரசிரோண்மணிகளின் வரலாறு எமை மலைக்கச் செய்கிறது.

உஹுத் போரின் போது ஒரு நபித் தோழரின் மனைவி, ரசூல் (ஸல்) அவர்கள் போரில் ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள் (புனித போரிலான வீரமரணம்) என்ற வதந்தி கேட்டு ஓடோடி வந்து கொண்டிருந்தார். அவரிடம் "உம் தந்தை இறந்து விட்டார்" என அறிவிக்கப் படுகிறது. அதற்கு அப்பெண்மணி "நாம் அனைவரும் அல்லாஹ்வுக்காகவே உள்ளோம், அவனிடமே மீளுவோம்" என்ற பொருள்கொண்ட சூரு பகராவின் 156ம் வசனத்தை ஓதிவிட்டு நகர்கிறார். சிறிது நேரத்தில் அவளது உடன் பிறந்தானின் மரணச் செய்தியும் அறிவிக்கப்படுகிறது அதற்கும் அம்மங்கை நல்லாளின் வாயிலிருந்து மேற்போந்த பதிலே வருகிறது. கடைசியில் உம் கணவரும் கொலையுண்டார் என அவளுக்கு அறிவிக்கப்பட அதற்கும் மேற் கூறிய பதிலையே அம்மங்கை நல்லாளின் செவ்வாய் உதிர்க்கிறது. [8] இஸ்லாத்திலும் அதன் தலைவர்மீதும் அவர்கள் கொண்டிருந்த மட்டற்ற அன்பு, தியாகம் என்பவற்றுக்கு இதுவொரு சிறந்த எடுத்துக் காட்டாகும். இதையொத்த இன்னொரு சம்பவமும் உள்ளது. அதாவது ரசூல்(ஸல்) அவர்கள் உஹுத் யுத்தம் முடிந்து வீடு திரும்பியதும் தம் உறவினர்கள் பற்றி விசாரிப்பதற்காகச் சில பெண்மணிகள் அவர்களிடம் வந்தனர். ஹஸ்ரத் ஹம்னுபின்தி ஜஹ்ஷ் (றழி) என்ற பெண்மணி, நபி (ஸல்) அவர்களின் முன்னிலையில் வந்தபோது அவருக்குத் துயரத்தை அமைதியுடன் சகித்துக் கொள்ளுமாறு அறிவுரை கூறிவிட்டு "உம் சகோதரன் அப்துல்லாஹ் (றழி) அவர்களின் வீர மரணத்தையிட்டு நீர் பொறுமையாயிருப்பீராக" என்றனர் அதற்கு அப்பெண்மணி மேற்போந்த குர்ஆனின் திருவசனத்தை ஓதிவிட்டு தம் சகோதரனின் மறுமைப்பேற்றுக்காக இறைஞ்சி நின்றனர். அடுத்து நபியவர்கள் "உம் தாய்வழி மாமன் ஹம்ஸா (றழி) அவர்களின் வீர மரணத்தையும் பொறுமையுடன் சகித்துக் கொள்வீராக" என்றனர். அதற்கும் அவ் வீரசிகாமணி மேற்கூறிய குர்ஆன் வசனத்தையே பதிலிறுத்துத் தம் மாமனின் மறுமை நற்பேற்றுக்கு இறைஞ்சி நின்றனர். [9]

நேர் வழியிற் செல்லுங்கண் தம்பால் ஏற்படும் இடுக்கண்களை இனிதே ஏற்று தம் நெஞ்சை எஃகை ஒத்ததாக்கிக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் வரலாறும் நம் முன் விரிந்து கிடக்கின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (றழி) அவர்களின் தாயார் ஹஸ்ரத் அஸ்மா(றழி) அவர்கள் கடுஞ் சுகவீன முற்றிருக்கையில் அவரைப்பார்க்க ஹஸ்ரத் அப்துல்லாஹ் (றழி) அவர்கள் வந்திருந்தனர். தம் மைந்தனைப்பார்த்து அம்மூதாட்டி "மகனே! பின்வரும் இரண்டில் ஒன்றைக் காணும்வரை அல்லாஹ் எனை உயிருடன் இருக்கச் செய்ய வேண்டுமென நான் அல்லாஹ்விடம் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றனர்.

1. நீ யுத்த களத்தில் வீர மரணமெய்தி அச்செய்தி கேள்வியுற்றதும் நான் பொறுமையாகவிருப்பதற்கு எனக்கு அல்லாஹ் அருள வேண்டும். அல்லது
2. யுத்த களத்தில் வெற்றிவாகை சூடியவனுக நான் உனைக் கண்குளிரக் காண வேண்டும்.

இறைவனின் நியதிப்படி ஹஸ்ரத் அஸ்மா(றழி) அவர்களின் முன்னைய அவா செயலுருப் பெறும் தருணம் வந்தது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர்(றழி) அவர்களின் உடலைக் கழுவில் தொங்கவிடுமாறு ஹஜ்ஜாஜ் பின் யூசுபால் பணிக்கப்பட்டது. மிக்கத் தளர்ந்த முதுமை, பலவீனம் ஆகியவற்றின் மத்தியிலும் ஹஸ்ரத் அஸ்மா நாயகியார் இத்துன்பியல் நாடகத்தைக் காணச் சென்றிருந்தனர். தம் அருந்தவ மைந்தனின் உடல் கழுவிலே ஆடிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்ற அசையாமாமேறு ஹஸ்ரத் அஸ்மா (றழி) அழுது புலம்புவதற்குப் பதிலாக "இந்தப் பிரயாணிக்குத் தன் குதிரையிலிந்து இறங்க இன்னும் நேரம் வரவில்லையா?'' என்று ஹஜ்ஜாஜைக் கிண்டலாகக் கேட்டு விட்டு அவ்விடத்தை விட்டகன்றனர்.[10]

### எழுச்சியின் இன்றியமையாமை:

இதுகாறும் நாம் இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பும், பின்பும் பெண்கள் நிலை, இஸ்லாமிய வரலாற்றில் மின்னிய சில அசாதாரண - அரிய பெண்மணிகள் என்ற விடயங்கள் குறித்து நோக்கினேம். இறுதியாக முஸ்லிம் மாதரிடமிருந்து தற்கால உலகம் எதிர்பார்ப்பதென்ன என்ற விடயம் குறித்து நோக்குவோம். சுருங்கக் கூறுவதாயின் இன்றைய உலகிற்கு இஸ்லாத்தின் தூது அவசியமும் அவசரமுமாகும். ஆகவே இஸ்லாமியப் பெண்ணைப் பொருத்தமட்டில் அவளிடமிருந்து தற்கால உலகு எதிர்பார்ப்பதுவும் சென்ற காலங்களில் அவள் இஸ்லாமிய உலகில் எத்தகு பங்கு வகித்தாளோ அதுவேயாகும். இதற்காக இஸ்லாத்தின் கடந்தகால அனுபவம் என்ற ஒளியில் எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கான நடவடிக்கைகள் நிகழ்காலத்தில் எடுக்கப்படல் வேண்டும். ஏனெனில் எந்தவொரு சமூகமும் தன் இறந்தகாலத்தைப் பழையதெனப் புறக்கணித்து விடமுடியாது. ஏனெனில் அதன் நிகழ்காலத்தை, இறந்த காலமே தோற்றுவித்துக் கொடுத்துள்ளது.

இந்த வகையில் இஸ்லாமியப் பெண்கள் பின்பற்றத் தகுந்த சின்னமாக நபியவர்களின் புதல்வி பாத்திமாவின் வாழ்வு திகழ்கிறது. உலகின் தலைசிறந்த பெண்மணிகளுள் பாத்திமாவும் ஒருவரென நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றனர். இவ்வாறு கூறுகையில் பாத்திமா தன் வாழ்வில் அடைந்த துன்பம், துயரம், இடையூறுகள் என்பவற்றுக்கு மேல்வாரியாக ஆறுதல் கூறுவதென்றே அல்லது அவரை மிதமிஞ்சிப் புகழ்வதென்பதோ கருத்தல்ல. மாருக நபி (ஸல்) அவர்களின் புதல்வியர்களில் பாத்திமா (றழி) அவர்களின் வாழ்வு தனித்துவமானது.

இஸ்லாமிய வரலாற்றில் தாய்மையின் உயர் அந்தஸ்து, முன்மாதிரி முதலிய பாடங்களை நாம் பாத்திமாவின் வாழ்வில் இருந்து கற்றுக் கொள்ளலாம். அலி (றழி) போன்ற ஒருவருக்கு மனைவியாகவும் ஹஸன், ஹுஸைன், ஸைனப் (றழி.அன்ஹும்) ஆகியோருக்குத் தாயாகவிருந்த முறைகளிலிருந்தும் எமக்கு நிறையப் படிப்பினைகள் உள. பால்யப்பருவம் தொட்டுத் திருமணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை, திருமணம் தொட்டு மரணம் வரை பொறுப்புமிக்க ஒரு பெண்ணாகத் திகழ்ந்தனர். இக்காலப் பெண்கள் பாத்திமாவின் வாழ்க்கையை அறியவேண்டும். தனது பிள்ளைப் பருவத்தில் அவர்கள் துணிச்சலும் பொறுமையும் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு மக்கத்துப் பள்ளத்தாக்கில் சிறை வைக்கப்பட்டபோது பொறுமையைக் கடைப்பிடித்தனர். தம் தாயார் இறந்ததும் தம் தந்தைமீது அதிக பற்றுக் காட்டினர். ஒரு தாயே போன்று நபியவர்களைக் கவனித்தனர். இதனால் நபியவர்களினால் அவளது தந்தையின் தாய், எனவும் அழைக்கப்பட்டனர். இது தவிரவும் அலி (றழி) அவர்களின் மனைவி என்ற வகையில் ஆற்றிய பங்களிப்பும் மகத்தானதாகும். மூன்று நாட்களாகப் பட்டினி நோன்பு நோற்ற நிலையில் இரப்போருக்கு ஈந்த இவர்களின் வரலாறு மிக்கப் பிரபல்யமானதாகும். அவர்களின் இச்செயல் குறித்தே குர்ஆனின் 76ம் அத்தியாயமான சூரா இன்சானின் 9ம் 10ம் வசனங்கள் இறங்கியதாக இஸ்லாமிய வரலாற்றாசிரியர்கள் கூறுவர். அது பின்வரும் பொருள் கொண்டதாகும். "நாம் உங்களுக்கு உணவளிப்பதெல்லாம் அல்லாஹ்வின் திருமுகத்திற்காகவேயன்றி (திருப்தி) உங்களிடமிருந்து உபசாரங்களையோ அல்லது உபகாரங்களையோ எதிர்பார்த்து அன்று. நாம் எம் இரட்சகனிடமிருந்து வரக்கூடிய முகங்களைக் கடுகடுக்துச் கருமையாக்கி விடக்கூடிய அந்த நாளைப்பற்றிப் பயப்படுகிறோம்."

பாதிமா (றழி) அவர்கள் ஹஸன், ஹுஸைன் (றழி) ஆகியோரைப் பரிபாலிப்பவராகவும் பயிற்சியாளராகவும் விளங்கினர். இவர்கள் இருவரும் நபியவர்களின் பள்ளிவாசலில் அன்னாரின் தோழர்களுடன் வாழ்ந்ததனால் இவர்கட்களிக்கப்பட்ட பயிற்சியை விடவும் ஸைனப் (றழி) அவர்களுக்கு பாத்திமா (றழி) அளித்த பயிற்சி முக்கியமானது எனலாம். ஸைனப் பாத்திமாவின் வீட்டில் அவர்களின் மடியிலேயேவளர்ந்தார்கள். அன்னை பாத்திமா (றழி) அவர்களின் சிறந்த குழந்தை வளர்ப்புக்கு கர்பலாப் புரட்சியில் அன்னை ஸைனப் (றழி) ஆற்றிய பங்களிப்புச் சிறந்த எடுத்துக் காட்டாகும். பாத்திமாவின் வீட்டில் ஒவ்வொரு மூலையிலிருந்தும் உதார மனித சின்னங்கள் உருப்பெற்றன. பாத்திமா (றழி) அவர்கள் தான் மரணித்தபின் அடக்கம் செய்யப் படுவதிலும் கூட ஒரு புரட்சியையே செய்தார்கள் எனலாம்.

எனவே எம் சமகால முஸ்லிம் பெண்களும், இஸ்லாமிய சமூகத்தில் ஓர் உணர்வுமிக்க போராட்டத்தை முன் எடுத்துச் சென்று அதன் மூலம் இறைதிருப்தியைப் பெற நாடுவார்களாயின் அவர்கள், நபியவர்களின் புதல்வி பாத்திமாவின் முன்மாதிரியை மனமொப்பிப் பின்பற்ற முன்வர வேண்டும். அதுமாத்திரமன்றி இன்று தம் வாழ்வைச் சூழவுள்ள நவீன உலகின் பல்வேறு சாதனங்களையும் தம் போராட்டப் பாதையில் தாராளமாக எடுத்தாளவேண்டும். அதாவது தம் கலாசாரத்துடன் வேறுபடாத ஆனால் ஒத்துவரக் கூடிய அனிஸ்லாமியக் கலாசாரங்களை எடுத்துக் கொள்வதைப் பொருத்தமட்டில் எந்தவொரு இஸ்லாமியனும் குறை காணப்பட முடியாது. பிரபல ஜெர்மன் சிந்தனையாளர் சேற்தே குறிப்பிடும் கருத்து இது தொடர்பாக ஈண்டு குறிப்பிடத்தக்கது. "உனது முன்னோரிடமிருந்து உனக்குக் கிடைத்த ஆதனங்களை (சொத்துக்களை) நீ சொந்தமாக வைத்திருந்து ஆண்டனுபவிக்க விரும்பினால் நீ வாளாவிருந்துவிடாதே. நீயும் சொந்தமாக உழைத்து அதனை அதிகமாக்கிக்கொள். அப்போது தான் பயன் பெறுவாய்."

நாம் எதிர்பார்ப்பது போல் பெண்கள் ஒரு சிறந்த அமைதிப் பரட்சியை மேற்கொள்வார்களாயின் அதன் தாக்கம் மிகப் பாரியதாக அமையும். ஏனெனில் அத்தகு ஒருபுரட்சி சமூகத்தின் அடித்தளத்திலிருந்து ஊற்றெடுக்கின்ற முழு அளவிலானதொரு மாற்றமாகும். அத்தகையதொரு பணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணி திரண்டு மாதர்களும் தம் பங்களிப்பைச் செய்வார்களெனில் இன்று எழுப்பப்பட்டு வரும் தேவையற்ற பெண்விடுதலைக் கோசங்களுக்கும் அதன் பிரதி விளைவுகளான அர்த்தமற்ற மோதல்களுக்கும் முற்றுப் புள்ளிவைத்து அதற்குப் பகரமாக சுபீட்சமிக்க வாழ்வுடன் கூடிய சமுதாய மொன்றைக் கட்டியெழுப்ப முடியுமென்பது திண்ணம்.

## REFERENCES :


1. Abul A'La Maududi : Pardah and the Status of the woman in Islam.
2. Said Abdullah Seif AL-Hatimy : Woman in Islam. Poge 2 (a comparative study)
3. Ibid (in Introduction)
4. Ibid Page. 13
5. Ibid (in Introduction)
6. Ibid Page. 52.
7. அப்துற்றஹீப் : நபிகள் நாயகம் பக்கம்: 233
8. Ibid பக்கம் : 208
9. மௌலானா முஹம்மத் யூசுஃப் இஸ்லாஹி அன்றாட வாழ்வில் இஸ்லாம் பக்கம்: 08
10. Ibid பக்கம்: 109


* * *

(நபியே!) விசுவாசிகளான ஆண்களுக்கு நீர் கூறும்: அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ் நோக்கியே வைக்கவும். தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். இது அவர்களை மிகத் தூய்மைப் படுத்தும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கறிந்து கொள்கிறான். விசுவாசமுள்ள பெண்களுக்கும் நீர் கூறுவீராக: அவர்களும் தங்கள் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளட்டும். தங்கள் கற்பையும் இரட்சித்துக்கொள்ளவும். (அன்றி, தங்கள் தேகத்தில் பெரும் பாலும்) வெளியில் தெரியக் கூடியவைகளைத் தவிர, தங்கள் அழகையும் (ஆடை ஆபரணம் போன்ற) அலங்காரத்தையும் வெளிக்காட்டாது மறைத்துக் கொள்ளவும். தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக் கொள்ளவும்.... .

— அல் குர்ஆன் (24 : 30, 31) —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments of

# ANES & CO.

IMPORTERS & EXPORTERS
GENERAL WHOLESALE &
RETAIL MERCHANTS

*DEALERS IN ALUMINIUM &*
*ENAMELWARES*

**No. 1, New Market,**
**JAFFNA.**

**BRANCH: 50/8 Dam Street,**
**COLOMBO - 12.**

Best Wishes From

# HANISHAS

Dealers in: Textiles Ready Made Garments, Fancy Goods, Radios, Cassettes, Clocks, Watches, Watch Bands & Perfume Cosmetics.

**213, 2nd Cross Street,**
**COLOMBO 11.** *T. P. 26712*

**இன்கிலாபின் வெற்றிக்கு எமது வாழ்த்துக்கள்!**

# DHEENSONS

★

**66, Manipay Road,**
**Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
From:

**JOY RECORDING SHOPPING CENTRE**

தரமான ஒலிப்பதிவுகள், விடியோ பிரதிகள் வாடகை, ரேடியோ, கெசற் றெக்கோடர்கள் விற்பனே, மின்சார உபகரணங்கள், TV விடியோ, ரேடியோ சாதனங்களின் உதிரிப் பாகங்கள் விற்பனே.

T V, விடியோ, கெசட் றெக்கோடர்கள் தரமாக துரிதமாக திருத்திக் கொடுக்கப்படும்.

213, MAIN STREET,
ERAVUR.

*With Best Compliments From*

# FASHION LANKA

M. S. P. ABDUR RAHMAN
(Proprietor)

Dealers in Fancy Goods, Gift Items, Immitation Jewellery. Toys, and Travelling Bags etc.

41, Overhead Bridge,
Maradana, COLOMBO 10.

*எமது நல் வாழ்த்துக்கள்!*

*நம்பிக்கை! நாணயம்!! நயம்!!!*

நவீன வேலேப்பாடுள்ள

## தங்க, வைர நகைகள்

விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் கிடைக்கும்,
ஓடர்நகை உத்தரவாதத்துடன் செய்துதரப்படும்.

# பஸ்மியா ஜுவல்லர்ஸ்

பெரியகடை,

மன்னர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

# GLASS EMPORIUM

கிளாஸ் எம்போறியம்

*WINDOW GLASS & PICTURE MERCHANTS*

192, K.K.S. ROAD,
JAFFNA.

Phone: 24170

Best Wishes From

## Chilaw Rani Fancy House

Dealers in:

Foot Wear

84, Bazaar Street,
CHILAW.

Best Wishes From

## PARSIAN HOTEL & BAKERY

*39, Prince Street,*
*MATALA.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*

## ROYAL MEDICALS

FOR YOUR MEDICAL REQUIRMENTS

*VISIT:*

**ROYAL MEDICALS**

**No. 1/29, BAZAAR STREET,**

**CHILAW.**

*SPACE DONATED BY:*

# A. K. BROTHERS

22, NEW MARKET,
JAFFNA.

*Best Wishes From*

# RIZMAN TRADERS

IMPORTERS DEALERS IN TEXTILES,
READYMADE GARMENTS & FANCY GOODS.

**LUCKY PARADISE SUPER MARKET**
**53/1-A2, FIRST FLOOR,**
**KEYZER STREET,**
**COLOMBO - 11.**

*TELEX 21974 MONTIEN CE*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அறபு மொழிப் பயன்பாடு

எம். ஏ. நுஃமான்
(மொழியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.)

1. இலங்கை முஸ்லிம்களும் அவர்தம் மொழிப் பயன்பாடும்

1981ம் ஆண்டின் இலங்கைக் குடிசன மதிப்பீட்டின்படி இலங்கையில், 1,134,556 முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் இவர்கள் 7.6% வீதத்தினர் ஆவர். முஸ்லிம்கள் இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் பரவலாக வாழ்வதோடு தங்களை ஒரு தனி இனக்குழுவாகவும் (ethnic community) கருதுகின்றனர்.

தமிழ் மொழியே இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழியாகும்.[1] எனினும் இலங்கை முஸ்லிம்கள் பேசும் தமிழ், தமிழர்கள் பேசும் தமிழில் இருந்து பெருமளவு வேறுபடுகின்றது. முஸ்லிம் தமிழில் சமய பண்பாட்டுத் தேவை காரணமாகக் கலந்துள்ள ஏராளமான அரபுக்கடன் சொற்கள் இவ் வேறுபாட்டின் முக்கிய அம்சங்களுள் ஒன்றாகும். இவ்வகையில் முஸ்லிம் தமிழ் இலங்கைத் தமிழின் ஒரு பிரதான சமூகக் கிளைமொழியாக இனங்காணப் படுகின்றது.[2]

இலங்கை முஸ்லிம்கள் பேசும் தமிழில் பிரதேச வேறுபாடுகளும் (Regional Variations) அதிகம் காணப்படுகின்றன. இடச் சேய்மை, புவியியல் வேறுபாடுகள், நேரடித்தொடர்பின்மை, தொழில் துறை வேறுபாடுகள், சிங்கள மொழித் தொடர்பின் அளவு போன்றன இவர்களின் மொழிவழக்கிலும் பிரதேச வேறுபாடுகளைத் தோற்றுவித்துள்ளன எனலாம்.

இலங்கை முஸ்லிம்களின் மொழிப்பயன்பாட்டில் சில பொதுவான ஒற்றுமைகளும் பிரதேச ரீதியிலான சில முக்கிய வேறுபாடுகளும் காணப்படுகின்றன. தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களுள் மிகப் பெரும்பாலோர் தமிழ் மட்டும் அறிந்த ஒரு மொழியாளர்களாவர் (Monolinguals). சிங்களவர்கள் பெரும்பான்மையினராக வாழும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் தமிழும் சிங்களமும் அறிந்த இருமொழியாளர்களாவர். (Bilinguals). இலங்கை முஸ்லிம்களில் சுமார் மூன்றில் இரண்டு பகுதியினர் இவ் விருமொழிப்பிரதேசத்திலேயே வாழ்கின்றனர். ஆங்கிலக்கல்வி வாய்ப்புப்பெற்ற மத்திய தர, உயர்மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுட் சிறுதொகையினர் தங்கள் சமூக அந்தஸ்தின் சின்னமாக ஆங்கிலத்தையும் பயன்படுத்துகின்றனர்.

2. முஸ்லிம்களும் அறபு மொழியும்

அறபு, முஸ்லிம்களின் சமய மொழியாகும். முஸ்லிம்களைப் பொறுத்தவரை அறபு மொழி மிகுந்த முக்கியத்துவம் உடையதும் புனிதமானதுமாகும். முஸ்லிம்களின் வேதநூலாகிய குர்ஆன் அறபு மொழியிலேயே அமைந்துள்ளது. குர்ஆன் வசனங்கள் இறைவனின் வசனங்கள் என்பது முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். அறபு இறைவனுடைய மொழி என்றே பாமர முஸ்லிம்கள் நம்புகின்றனர். அறபுதான் உலகின் முதலாவது மொழி என்பதும் இவர்களின் நம்பிக்கையாகும். முதல் மனிதனாகிய ஆதமுக்கு அறபுமொழியையே இறைவன் கற்பித்தான் என இவர்கள் நம்புகின்றனர். மறுமை நாளில் உயிர்ப்பிக்கப்படும் போது எல்லாமனிதர்களும் அறபு மொழியிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுடன் உரையாடுவர் என்பதும் இவர்களின் நம்பிக்கையாகும்.

அறபு எழுத்தை 'கொறுவான் எழுத்து' என முஸ்லிம்கள் வழங்குகின்றனர். ஆகவே குர்ஆனைப்போல் அறபுஎழுத்தும் புனிதமான தாக மதிக்கப்படுகின்றது. அறபு எழுத்தில் எழுதப்பட்ட எதுவும்—அது குர்ஆன் வசன மாகஇல்லாதிருப்பினும்—நிலத்தில் கிடந்து காலில்மிதிபடுவது பாவம் என முஸ்லிம்கள் கருதுகின்றனர். அவ்வாறு கிடக்கக் கண்டால் அதை எடுத்து 'தொட்டுக் கொஞ்சி' விட்டு உயரமான இடத்தில் செருகி வைப்பர், அல்லது கிணறுகளில் போட்டுவிடுவர்.

அறபு மொழியில் 'கிதாப்' என்ற சொல்லுக்கு புத்தகம் என்பதே பொருள். ஆனால் இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்த வரை அறபு எழுத்தில் எழுதப்பட்ட நூல் களே 'கிதாப்' என வழங்கப்படுகின்றன. இவ்வகையில் அறபில் அல்லது அறபுத்தமி ழில் [3] எழுதப்பட்ட நூல்கள் அனைத்தும் 'கிதாப்' எனப்படும் இந் நூல்களில் கூறப் படுவன எல்லாம் புனிதமானவை கேள்வி யின்றி ஏற்றுக்கொள்ள வேண்டியவை என்பது சாதாரண முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். முஸ்லிம்கள் அறபு எழுத்துக்குக் கொடுக் கும் முக்கியத்துவத்தை இது உணர்த்து கின்றது.

### 3. முஸ்லிம்களின் அறபு மொழி அறிவு

முஸ்லிம்களின் அன்றாட வாழ்வில் அறபு மொழி மிகுந்த முக்கியத்துவம் பெறுகின் றது எனினும் அறபு மொழி அறிவுடைய முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக்குறை வாகும். இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள அறபுக் கல்லூரிகளில் கற்று 'ஆலிம் கள்' அல்லது 'உலமாக்கள்' அல்லது 'மௌலவிமார்' என அழைக்கப்படும் 'மார்க்க அறிஞர்களே' அறபு மொழி ஆற் றல் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களும் தொல்சீர் அறபு மொழியிலேயே (classical Arabic) சிறப்பாகப் புலமை பெற்றுள்ளனர். ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகையோரின் எண்ணிக்கை பத்து அல் லது பதினைந்துக்கு மேல் இல்லை. இவர் களும் சாதாரண உரையாடலுக்கு அறபு மொழியைப் பயன்படுத்துவதில்லை. மிகச் சில சந்தர்ப்பங்களில் பலர் சூழஉள்ள இடங் களில் தமக்குள் சில கருத்துக்களைப் பரி மாறிக் கொள்வதற்கு இரண்டு ஆலிம்கள் அறபு மொழியில் உரையாடிக் கொள்வதை அவ்வப்போது அவதானிக்கலாம். தமிழ் தெரியாத அறபுநாட்டு மதப்பெரியார்கள் யாரையும் சந்திக்கநேரும் போதும் இவர் கள் அறபு மொழியில் உரையாடுவதுண்டு. ஆயினும் இத்தகைய சந்தர்ப்பங்கள் அடிக் கடி நிகழ்வதில்லை.

பொதுவாக எல்லா முஸ்லிம் குழந் தைகளும் ஐந்து அல்லது ஆறு வயதில் 'ஓதப்பள்ளி' என அழைக்கப்படும் குர்ஆன் பாடசாலைகளுக்கு அனுப்பப் படுகின்றனர்.[4] இங்கு 'ஆலிம்' அல்லது 'லெப்பை' குழந் தைகளுக்கு குர்ஆனை ஓதுவதற்குப் பயிற்சி கொடுக்கின்றார். இது வெறும் வாசிப்புப் பயிற்சி மட்டுமேயாகும். பொருள் விளக் கத்துடன் இங்கு அறபுமொழி கற்பிக்கப் படுவதில்லை. ஆயினும் அறபு எழுத்திலும் ஒலியமைப்பிலும் இங்கு மாணவர்கள் பயிற்சி பெறுகின்றார்கள் பத்து அல்லது பன்னிரண்டு வயதுக்குள் குர்ஆன் முழு வதையும் பார்த்து ஓரளவு சரளமாக வாசிக் கும் பயிற்சியை பெருந்தொகையான சிறு வர்கள் இங்கு பெற்றுக்கொள்கின்றார்கள். அதன் சில பகுதிகளை அவர்கள் மனனஞ் செய்தும் கொள்கின்றார்கள். தங்கள் சமய வழிபாட்டுத் தேவைகள் காரணமாக குர் ஆனின் சில குறிப்பிட்ட பகுதிகளை மனனஞ் செய்திருப்பது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான தாகக் கருதப்படுகின் றது. ஆயினும் பெரும்பாலோர் அவற்றின் பொருளை அறிந்திருப்பதில்லை. இவ்வகையில் எல்லா முஸ்லிம்களும் அறபு மொழியின் ஒலியமைப்பில் ஓரளவு பயிற்சி பெற்றிருப் பினும் மிகப் பெரும்பாலோர் அறபுமொழி யைப்பேசவோ அல்லது பேசுவதையோ வாசிப்பதையோ விளங்கிக்கொள்ளவோ இயலாதவர்களாகவே உள்ளனர்.

1975ம் ஆண்டுவரை, பெரும்பாலும் எல்லா முஸ்லிம் பாடசாலைகளிலும் அறபு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர் கள் பாரம்பரிய அறபுக் கலாசாலைகளில் கற்று வெளியேறிய 'ஆலிம்கள்' அல்லது 'மௌல விகள்' ஆவர். பெரும்பாலான பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் மூன்றும்வகுப்பில் இருந்து அறபு மொழி கற்பிக்கப்பட்டுவந்தது. க.பொ.த. (சாதாரண) பரீட்சைக்கு அறபுமொழி ஒரு பாடமாகவும் இருந்தது. ஆயினும் அறபு மொழியைத் தொடர்ந்து கற்று பரீட்சைக்கு அதை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர் தொகை மிகவும் குறைவாகவே காணப்பட்டது.[5] இப்பரீட்சையில் சித்தியெய்திய வர்களும் பெரும்பாலும் அறபுமொழியைப் பேசவும், வாசித்து விளங்கவும் எழுதவும் ஆற்றலற்றவர்களாகவே காணப்படுகின்றனர். கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக முஸ்லிம் பாடசாலைகளில் அறபுமொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவதில்லை. பதிலாக சமயம் மட்டுமே கற்பிக்கப்படுகின்றது.

### 4. முஸ்லிம்களின் அறபு மொழிப்பயன்பாடு

மிகப் பெரும்பாலான முஸ்லிம்களுக்கு அறபுமொழி தெரியாதெனினும் அவர்களது அன்றாட வாழ்வில் பொருள் உணர்வுடனும் பொருள் உணர்வின்றியும் ஏராளமான அறபுச் சொற்களும் தொடர்களும் பயன்படுத்தப்படுகின்றன இலங்கை முஸ்லிம்களின் அன்றாட வாழ்வில் அறபுமொழிப் பயன்பாட்டை பின்வரும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்கலாம்.

1. சமய வழிபாடுகளிலும் சடங்குகளிலும் பொருள் உணர்வின்றி அறபுமொழி பயன்படுத்தப்படுதல்.
2. கலாசாரத்தனித்துவத்தை (cultural identity) வெளிக்காட்டும் அடையாளமாக ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் பெயரிடுவதற்கு அறபு மொழி பயன்படுத்தப்படுதல்.
3. சமய, கலாசாரத் தேவைகளின் அடிப்படையில் அமைந்த அன்றாடச் செய்தித் தொடர்புத் தேவைகளுக்காக (for day to day communication) அன்றாட மொழிப்பயன்பாட்டில் அறபுச் சொற்களும் தொடர்களும் பயன்படுத்தப்படுதல்.

### 4. 1 வழிபாடுகளிலும் சடங்குகளிலும் அறபுமொழிப் பயன்பாடு

இஸ்லாத்துக்கும் அறபுமொழிக்குமிடையே உள்ள பிரிக்கமுடியாத உறவு காரணமாக சமய வழிபாடுகளிலும் சமயச் சார்பான சடங்குகளிலும் முஸ்லிம்கள் அறபு மொழியையே பயன்படுத்துகின்றனர். இச் சந்தர்ப்பங்களில் தமிழ்மொழி பயன்படுத்தப்படுவதில்லை. பின்வருவன அத்தகைய சில சந்தர்ப்பங்களாகும்.

1. தொழுகை, தொழுகைக்கான அழைப்பு.
2. இறைவனிடம் கையேந்திக் கேட்கும் பிரார்த்தனைகள்.
3. திருமண, மரணச் சடங்குகள்.
4. திருமண, மரண ஊர்வலங்கள்.
5. மரணத்துக்குப் பிந்திய சடங்குகள். (ஒருவர் மரணித்த மூன்றும், ஏழாம், நாற்பதாம் நாட்களிலும் பின்னர் ஆண்டுதோறும் நடைபெறும் சடங்குகள்)
6. நபிமார்கள் (தீர்க்கதரிசிகள்) அவுலியாக்கள் (இறைநேசர்கள்) ஆகியோர் பெயரில் நடைபெறும் 'மௌலூது', 'பாத்திஹா' போன்ற சடங்குகள், உணவுக்காகப் பிராணிகளை அறுத்தல் முதலியன.
7. பொதுக்கூட்டங்கள், குழுக்கூட்டங்கள் போன்ற பொது நிகழ்ச்சிகளின் தொடக்கமும் முடிவும். [இத்தகைய பொது நிகழ்ச்சிகளை குர்ஆனில் இருந்து ஒரு பகுதியை ஓதித்தொடங்குவதும் (இது கிறுஅத் எனப்படும்) அவற்றை முடித்து வைக்கும் போது முஹம்மது நபி பெயரில் 'சலவாத்' ஓதுவதும் முஸ்லிம்கள் மத்தியில் பொது வழக்காகும்].

இத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் பயன் படுத்தப்படும் கூற்றுக்கள் (utterances) அறபு மொழியிலேயே உள்ளன. அவை மனனம் செய்யப்பட்ட கூற்றுக்களாகும். சந்தர்ப்பத்துக்கும் தேவைக்கும் ஏற்ப அவை உரத்தோ, மௌனமாகவோ மொழியப்படுகின்றன. உதாரணமாக தொழுகைக்கான அழைப்பு ('அதான்' அல்லது 'வாங்கு') பின்வருமாறு அமையும்.

1. அல்லாஹு அக்பர் (நான்குமுறை)
2. அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ் (இருமுறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அஷ்ஹது அன்னமுஹம்மதர் றசூலுல் லாஹ் (இருமுறை)
4. ஹைய்யா அலஸ்ஸலாஹ் (இருமுறை)
5. ஹைய்யா அலல் ஃபலாஹ் (இருமுறை)
6. அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்
7. லா இலாஹ இல்லல்லாஹ்.[6]

திருமணச்சடங்கை (நிக்காஹ்) நிறை வேற்றி வைக்கும் சில 'ஆலிம்'கள் அதன் ஒரு பகுதியைத் தமிழில் நிகழ்த்துவதும் உண்டு. ஆனல் பெருமபாலோர் சடங்கு முழுவதிலும் அறபு மொழியையே பயன் படுத்துவர். திருமண, மரணச் சடங்குகளை யொட்டி நடைபெறும் பிரார்த்தனைகளிலும் (துவா) ஒரு பகுதி சிலவேளை தமிழ் மொழி யில் நிகழ்த்தப்படுவதுண்டு. ஆயினும பிரார்த்தனையின் தொடக்கமும் முடிவும் எப்போதும் அறபு மொழியிலேயே அமை யும். இவை வழிவழியாக வரும் நிலையான பிரார்த்தனைக் கூற்றுக்களாகும.

நாட்டார் வழக்கு நிலைப்பட்ட சில சிகிச்சை முறைகளிலும் அறபு மொழி பயன்படுத்தப்படுகின்றது. 'தண்ணி ஓதிக் கொடுத்தல்', 'ஊதப்பார்த்தல்', 'இசும் கட்டுதல்' போன்றன இத்தகையன. பேய் பிசாசுகள், நோய்கள் முதலிய தீங்குகளில் இருந்து பாதுகாப்பதற்கு இச்சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில குர்ஆன் பகுதிகளை (சூறத்துல் பாத்திஹா, ஆயத்துல் குறுசி முதலியன) ஓதி, ஒரு பாத்திரத்தில் இருக்கும் தண்ணீரில் ஊது, பின் அதனைக் குடிக்கக் கொடுப்பது 'தண்ணி ஓதிக்' கொடுத்தல், எனப்படுகின்றது. தண்ணீரில் அல்லாமல் அதே பகுதிகளை நோயாளியின் முகத்தில் அல்லது மார்பில் ஓதி ஊதுவது 'ஊதிப்பார்த்தல்' எனப்படுகின்றது. இவ் வாறுஇல்லாயல் சில குர்ஆன் வசனங்களையும் நபிமார்கள், 'மலக்குகள்' (தேவதூதர்கள்) போன்ஞேரின் பெயர்களையும் செப்புத்தகடு போன்ற ஏதாவது ஒன்றில் எழுதி இடுப்பில் அல்லது புயத்தில் கட்டிக்கொள்வது 'இசும் கட்டுதல்' எனப்படுகின்றது.

மேற்காட்டிய சந்தர்ப்பங்களிலெல்லாம் அறபு மொழி பெரும்பாலும் பொருள் உணர் வின்றியே பயன்படுத்தப்படுகின்றது. அவ்வ கையில் இதனைச்சடங்கு நிலைப்பட்ட மொழிப் பயன்பாடு எனல் பொருந்தும்.[7]

### 4.2 பெயரிடுவதில் அறபு மொழிப் பயன்பாடு

முஸ்லிம்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிடுவதற்கு அறபு மொழியையே பயன் படுத்துகின்றனர். இது இவர்களின் கலா சாரத் தனித்துவத்தை வெளிக்காட்டும் ஒரு முக்கிய சின்னமாக உள்ளது.

சுமார் நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் குழந்தைகளுக்குத் தமிழில் பெயரி டும் வழக்கம் முஸ்லிம் கிராமங்களில் காணப் பட்டது. உதாரணமாக சின்னராசா, தம்பி ராசா, தம்பிக்கண்டு, நேந்தம்பி, மூத்தம்பி போன்ற பெயருடைய நடுவயது கடந்த முஸ் லிம் ஆண்களும் இளையபிள்ளை, குழந்தம்மா, வெள்ளம்மா, வெள்ளக்கண்டு, சின்னப் பிள்ளை, ராசம்மா போன்ற பெயருடைய நடுவயது கடந்த முஸ்லிம் பெண்களும் இன்றுகூட சில முஸ்லிம் கிராமங்களில் காணப்படுகின்றனர். சிலவேளை இவர்களுட் சிலரின் பதிவுப்பெயர்கள் அறபுப் பெயர் களாகஇருக்கும். ஆயினும் தமிழ்ப்பெயர் களாலேயே இவர்கள் அழைக்கப்படுகின்ற னர்.

தமிழ்+அறபு அல்லது அறபு+தமிழ் இணைவடிவில் (blend form) பெயரிடும் வழக்கமும் முஸ்லிம்கள் மத்தியில் இதேகா லப்பகுதியில் நிலவியது. உதாரணமாக தம்பி லெவ்வை, சீனிமுகம்மது, பிச்சைமுகையதீன், சின்னலெவ்வை முதலிய பெயர்களில் தமிழ்+ அறபு இணைவடிவினைக் காணலாம். அல்லா பிச்சை, ஆதம்கண்டு முகையதீன் பிச்சை, முகம்மதுத்தம்பி போன்ற பெயர்கள் அறபு+தமிழ் இணைவடிவில் அமைந்துள்ளன.

தமிழில் மட்டுமோ அல்லது இணைவடி விலோ பெயரிடும் வழக்கம் முஸ்லிம்கள் மத்தியில் தனித்துவ உணர்வு வளர்ச்சிய டைவதற்கு முந்திய நிலமையாகும். தற்கா லத்தில் பெயரிடுவதற்கு முற்றிலும் அறபு மொழியையே முஸ்லிம்கள் பயன்படுத்து கின்றனர்.

ஆட்பெயர்கள் போல், பாடசாலைகள், வீடுகள், வர்த்தக நிறுவனங்கள், சஞ்சிகை கள் போன்றவற்றிக்குப் பெயரிடுவதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறபு மொழி கடந்தசில தசாப்தங்களாகப் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக குறிப்பிட்ட ஊர்ப் பெயரை முதலாகக் கொண்டு அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலை, அரசினர் முஸ்லிம் பெண்கள் பாடசாலை, அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்பன போன்ற தமிழ்ப் பெயர்களில் வழங்கி வந்த அனேக பாடசாலைகள் கடந்த பதினைந்து இருபது ஆண்டுகளுக்குள் புதிதாகப் பெயர் மாற்றம் பெற்றன. அதாவது ஊர்ப் பெயரை அடுத்து ஒரு அறபு அடைப் பெயரை இவை பெற்றுள்ளன. பின்வருவன சில உதாரணங்களாகும்.

கல்முனை ஸாஹிறுக் கல்லூரி.
மருதமுனை **அல்மனர்** மகாவித்தியாலயம்.
ஏறுவூர் **அலிகார்** மாகாவித்தியாயலயம்.
நிந்தவூர் **அல்அஷ்றக்** மகாவித்தியாலயம்

நகர்ப்புறங்களில் அல்லது நகர்மயமாகி வருகின்ற பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளே இவ்வாறு அதிகஅளவில் பெயர்மாற்றப் பட்டுள்ளன. பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகள் குறைந்த அளவே பெயர் மாற்றம் பெற்றுள்ளன. உதாரணமாக நகர்ப்புறம் சார்ந்த கல்முனைக் கல்வி வட்டாரத்தில் உள்ள 18 முஸ்லிம் பாடசாலைகளில் 15 பாடசாலைகள் இவ்வாறு பெயர்மாற்றம் பெற்றுள்ளன. பதிலாக பின்தங்கிய பொத்துவில் கல்வி வட்டாரத்தில் உள்ள 8 முஸ்லிம் பாடசாலைகளில் ஒன்றுமட்டுமே அறபுப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. அம்பாறை மாவட்டத்திலுள்ள மொத்தம் 95 முஸ்லிம் பாடசாலைகளில் சுமார் 50 பாடசாலைகள் இவ்வாறு அறபுப் பெயர் மாற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்களால் அல்லது முஸ்லிம் நிறுவனங்களால் வெளியிடப்படும் சில தமிழ்ச் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் கூட அறபுப் பெயர் கொண்டுள்ளன. உதாரணமாக 'இன்சான்', 'அல்-ஹசனாத்', 'அஷ்ஷுறா' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் அறபு மொழியில் பெயரிடும் போக்கு முஸ்லிம்கள் மத்தியில் வளர்ந்து வந்த பண்பாட்டுத் தனித்துவ உணர்வின் வெளிப்பாடாகவே அமைகின்றது. கடந்த சில தசாப்தங்களாக முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுவந்த கல்வி வளர்ச்சியும் அதன் விளைவான படித்த மத்திய தர வர்க்கத்தின் உருவாக்கமும் பொதுவாக நாட்டில் நிலவி வந்துள்ள அரசியல் போக்குகளும் முஸ்லிம்களின் பண்பாட்டுத் தனித்துவ உணர்வின் வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்தன. இலங்கை முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் தமிழ் ஒரு பொதுத் தாய்மொழியாக இருப்பதனால் முஸ்லிம்கள் தமது சமூக, பண்பாட்டுத் தனித்துவத்தை (socio-cultural Identity) நிலைநாட்டுவதற்கு இவ்வாறு அறபு மொழி அடையாளங்களைப் பயன்படுத்துவது அவசியமாயிற்று எனக் கருதலாம். இது விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒரு சமூக மொழியியல் அம்சமாகும்.

## 4.3 அன்றுடப் பேச்சில் அறபுச் சொற்களும் தொடர்களும் பயன்படுதல்

சமய, பண்பாட்டுத் தேவைகளுக்காக நூற்றுக் கணக்கான அறபுச் சொற்களும் தொடர்களும் முஸ்லிம்களின் அன்றுடப் பேச்சில் பயன் படுத்தப்படுகின்றன.[8] இவை மொழி மூலமான சமூக உறவுகளுக்கு அத்தியாவசியமானவை. இவற்றைப்பயன்படுத்தாமல் முஸ்லிம்கள் தமக்குள் செய்தித் தொடர்பு (communication) கொள்வது எளிதல்ல. அவ்வகையில் இவை முஸ்லிம்களின் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்துள்ளன. முஸ்லிம் அல்லாதவர்கள் முஸ்லிம்களின் பேச்சைப் புரிந்து கொள்வதில் இடையூறாக அமைகின்ற முக்கியமான மொழியியல் அம்சமாகவும் இவை அமைகின்றன. உதாரணமாக முஸ்லிம்களின் பேச்சில் வழங்கும் காலப்பாகுபாடு தொடர்பான அறபுச் சொற்களை எடுத்துக்காட்டலாம்.

முஸ்லிம்கள் தினமும் ஐந்து வேளை தொழுவது கட்டாயமான ஒரு மதக்கடமையாகும். அவ்வகையில் தொழுகை நேரத்தின் அடிப்படையில் இவர்கள் ஒருநாளை ஐந்து வேளையாகப் பாகுபடுத்துகின்றனர். அவை பின்வருமாறு.

சொபகு – அதிகாலை
லொகறு – நண்பகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசறு—பிற்பகல்
மஃரிப்—மாலை
எஸ்ஸா—இரவு

இக் காலப் பாகுபாடு முஸ்லிம் தமிழில் அடிப்படையானது. ஒருவர் பிறிதொருவரிடம் 'நான் எந்நேரம் வர?' என்று வினவினால் அதற்கு

அசறுக்கு வாங்க
அசறுக்கு முந்திவாங்க
அசறுக்குப் பொறகு வாங்க

அசறுக்கும் மஃரிபுக்கும் இடையில்வாங்க என்பது போல் ஏதாவது ஒரு விடை அளிக்கப்படலாம். இத்தகைய வாக்கியங்கள் முஸ்லிம் பேச்சுத் தமிழில் பெருவழக்காகும். இந்தக் காலப் பாகுபாடு பற்றி அறியாத முஸ்லிம் அல்லாத ஒருவர் இத்தகைய வாக்கியங்களைப் புரிந்து கொள்ள இடர்ப் படுவர் என்பது வெளிப்படை.

முஸ்லிம் தமிழில் வழங்கும் இத்தகைய அறபுக் கடன் சொற்களை இருவகையாகப் பாகுபடுத்தலாம். முதல்வகை, அன்றாட வாழ்வில் கற்றவர் கல்லாதவர் ஆகிய எல்லா மட்டத்தினராலும் பெருமளவில பயன்படுத்தப் படுகின்ற பொதுவான கடன் சொற்கள் (common loan words). மேற்குறிப்பிட்ட காலப்பாகுபாடு உணர்த்தும் சொற்கள் இத்தகையன. இரண்டாவது வகை, சில விசேட சந்தர்ப்பங்களில் மார்க்க அறிஞர்கள் போன்ற சிறு குழுவினரால் சமய, தத்துவார்த்த விஷயங்கள் பற்றி ஆழமாக விவாதிக்கும் போது பயன்படுத்தும் விசேட கடன் சொற்கள் ( Special loan words ). இவை எல்லோராலும் விளங்கிக் கொள்ளப் படுபவை அல்ல. பின்வரும் சொற்களை இதற்கு உதாரணமாகத் தரலாம். றித்தத், முஜ்மல், முபஸ்ஸல், முஸ்தஹீல், ஜாஇஸ், தம்யீஸ், மஹ்றம், அன்ஜமி, முஅக்கதா, நப்ல், ஆமில்.

இதுவரை நாம் நோக்கியதில் இருந்து தமிழ் மொழியே இலங்கை முஸ்லிம்களின் தாய் மொழியாக இருப்பினும் அறபுமொழி அவர்களின் சமய மொழியாகவும் அவர்களின் சமூக, பண்பாட்டுத் தனித்துவத்தின் அடையாளமாகவும் பயன்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி பற்றிச்சில மயக்கங்கள் நிலவுகின்றன. அறபு, அல்லது சிங்களத்தை முஸ்லிம்களின் தாய் மொழியாகக் கருதுவோரும் உளர். ஆனல் அன்ருடச் செய்தித் தொடர்புக்கு அறபுமொழி முஸ்லிம்களால் பயன் படுத்தப்படுவதில்லை. சிங்களம் பேசும் பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் சிங்கள மக்களுடன் தொடர்பு கொள்வதற்கு சிங்கள மொழியைப் பயன்படுத்தும் ஆற்றல் உடையோராய் இருப்பினும் விட்டிலும் தமதுசமுகத்தவருடனும்உரையாடுவதற்குத் தமிழ்மொழியையே பயன்படுத்துகின்றனர். இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பகுதியினர் தமிழ் மொழி மட்டுமே அறிவர். அவ்வகையில் இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ் என்பதில் ஐயத்துக்கு இடம் இல்லை. ஆயினும் மலாயர்கள், மேமன்கள், போருக்கள் போன்ற சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தினரும் இலங்கையில் வாழகின்றனர். இவர்களின் வீட்டு மொழியாக மலாய், குஜராத்தி, உருது போன்றவை வழங்குகின்றன.

2. இதுபற்றி விரிவாக அறிய பார்க்கவும். நுஃமான் எம்.ஏ (1979) **மட்டக்களப்பு முஸ்லிம் தமிழ் ஒரு சொற்தொகை ஆய்வு.** வெளியிடப்படாத முதுமானிப் பட்டத்துக்கான ஆய்வுக்கட்டுரை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

3. அறபு எழுத்தில் எழுதப்படும் முஸ்லிம் தமிழின் ஒருவகை மொழியே (variety) அறபுத்தமிழ் எனப்படுகின்றது. அறபு மொழி தமிழ் மொழி மீது ஏற்படுத்திய முக்கியமான விளைவுகளுள் ஒன்ருக அறபுத் தமிழை நாம் கருதலாம். இதுபற்றி விரிவான விளக்கத்துக்குப் பார்க்கவும், நுஃமான், எம்.ஏ.(1982) ''அறபுத்தமிழ் ஒரு விபரண ஆய்வு'' **இன்கிலாப்** தொகுதி 4. முஸ்லிம் மஜ்லிஸ் வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

4. 'ஓதுதல்' என்னும் சொல் அறபுமொழியில் அமைந்த விஷயங்களை வாசிப்பதையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிவதையும் சுட்ட முஸ்லிம் தமிழில் வழங்கப்படுகின்றது. அவ்வகையில் 'ஓதல் பள்ளி' என்பது குர்ஆனை வாசிப்பதற்குப் பயிற்றும் பாடசாலைகளைக் குறிக்கும். இத்தகைய பாடசாலைகள் ஒவ்வொரு முஸ்லிம் கிராமத்திலும் ஒன்று அல்லது பல அமைந்திருக்கக்காணலாம். பெரும்பாலும் இவை பள்ளிவாசல்களில் இதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் நடைபெறும். பெரும்பாலான கிராமங்களில் பள்ளிவாசல் நிருவாகமே இவற்றைப் பொறுப்பேற்று நடத்துகிறது. இவை 'மத்றசா' எனவும் வழங்கப்படுகின்றன.

5. உதாரணமாக 1972-ல் மொத்தம் 47 மாணவர்களும் 1973-ல் மொத்தம் 74 மாணவர்களுமே இப்பரீட்சைக்குத் தோற்றினர்.

6. இதன்பொருள் பின்வருமாறு
   1. அல்லாஹ் பெரியவன்.
   2. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு யாரும் இல்லை என நான் சாட்சியம் கூறுகின்றேன்.
   3. முஹம்மது நபி அல்லாஹ்வின் திருத்தூதராவார் என நான் சாட்சி கூறுகின்றேன்.
   4. தொழுகைக்கு விரையுங்கள்.
   5. வெற்றியை நோக்கி விரையுங்கள்.
   6. அல்லாஹ் பெரியவன் அல்லாஹ் பெரியவன்.
   7. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறுயாருமில்லை.

இதன் அறபு மூலத்தின் இப்பொருளையும் சிலர் அறபு மூலத்துடன் மனனம் செய்துள்ளனர். ஆயினும் அதைக் கூறும் போதோ கேட்கும்போதோ அதன் பொருளையும் உணர்கிறார்கள் எனக்கருத முடியாது.

7. வேறு மொழிச் சமுதாயத்தினரிடையும் இத்தகைய நிலைமையினை அவதானிக்கலாம். உதாரணமாகத் தமிழ்ப்பேசும் இந்துக்கள் தம் சமயச்சடங்குகளில் சமஸ்கிருதத்தையும், சிங்களம் பேசும் பௌத்தர்கள் பாளி மொழியையும் பயன்படுத்துவதைக் காட்டலாம்.

8. முஸ்லிம் தமிழில் அறபுக்கடன் சொற்கள் பற்றிய விரிவான விபரங்களுக்குப் பார்க்கவும்: நுஃமான், எம்.ஏ. (1984) மட்டக்களப்பு முஸ்லிம் தமிழில் அறபுக் கடன் சொற்கள் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் குறுகியகால ஆய்வு உதவித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு. தமிழ்ப்பல்கலைக்கழகம்-தஞ்சாவூர்.

---

இஸ்லாமிய ஆட்சி அறபுத் தீபகற்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டபோது அங்கே எண்ணெய்க் கிணறுகள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தனவா? அங்கே ஒட்டகங்களும் சிறியளவிலான திராட்சைச் செடிகளுமே காணப்பட்டன. ஸஹாபாக்கள் தாகித்திருந்ததையும் பசித்திருந்ததையும் நீங்கள் அறிவீர்கள். இஸ்லாமிய ஆட்சி, அகீதாவின் ஈமானிலும் அல்லாஹ்வுக்காக தூய எண்ணத்தோடு எழுந்துநிற்கின்ற உள்ளங்களின் மீதுமே கட்டி எழுப்பப்படுகின்றது. இந்த நிபந்தனைகள் நிறைவேறி ட்டால் எத்தகைய சடவாத சக்திகளின் தேவையுமின்றி இஸ்லாமிய ஆட்சி நிலை பெற்றுவிடும்.

ஒரு பேட்டியின் போது ஆப்கான் முஜாஹிதீன்களின் போராட்டக் கூட்டிணைப்புக்கு தலைமைதாங்கிய அப்துறப்புர்ரஸூல்ஸையாப் அவர்கள் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our Best Wishes to*

**"INQILAAB"**

# G. N. F. MAHROOF

★

**14 Bulugohatenna**

**AKURANA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*

# LATIFF CORPORATION

IMPORTERS AND DISTRIBUTORS OF
MASSEY FERGUSON, KUBOTA & FORD
TRACTOR SPARES

**Kaduruwela,**
**Polonnaruwa.**
**(Sri Lanka)**

*Cables: 'LATICO'* *T. Phone: 027 - 2362*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நல் வாழ்த்துக்கள்!

சகல வீட்டுப்பாவனைப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்,
றேடியோ, மணிக்கூடு, மின்சாரப் பாவனைப்
பொருட்கள் ஆகியவற்றிற்கு சிறந்த இடம்

# சக்ரியாஸ்

பெரியகடை, மன்னார்.

*With Best Compliments From:*

# COLOMBO JEWELLERY

*VISIT TO*

**For Latest Designs and**
**22 Carrat Gold Jewels**
**COLOMBO JEWELLERY**

42, Central Road,
KATTANKUDI.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் மக்களின் அறப்போராட்டம்

ஏ. ஸீ. அகார் முஹம்மத். நளீமி, B.A. (சிறப்பு)
(விரிவுரையாளர், ஜாமிஆ நளீமியா)

இக்கட்டுரை சுமார் எட்டு மாதங்களுக்கு முன்னர் எழுதப்பட்டமையினால் ஆப்கான் மக்களின் போராட்டம் சம்பந்தமான மிக அண்மைக்கால நிலை பற்றிய பல விபரங்கள் இதில் இடம் பெறவில்லை. இம் மாற்றங்கள் எவ்வாறிருந்த போதும் முஜாஹிதீன்கள் கலந்து கொள்ளாத ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளையும், அதன் முடிவுகளையும் முஜாஹிதீன்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. போராட்டம் தொடர்கிறது. முஜாஹிதின்கள் தமது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாக இருந்து வருகின்றனர். கடந்த மே மாதம் முதல் ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்களின் படைகள் படிப்படியாக ஆப்கான் மண்ணைவிட்டும் வெளியேறி வருகின்றபோதும் ஆப்கான் மக்களின் போராட்டம் ரஷ்யப்படைகளை நாட்டைவிட்டும் விரட்டுவதை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல. மாறாக ஆப்கானை, ஷைத்தானியக் கரங்களில் இருந்து மீட்டு அல்லாஹ்வின் மேன்மையான ஆட்சிக்கு அடிபணியச்செய்வதாகும். எனவே ரஷ்யர்களின் பொம்மை ஆட்சி நீங்கி அல்லாஹ்வின் மேன்மையான ஆட்சியை ஆப்கான் மண்ணில் நிலைநாட்டும் வரை இம் மக்களின் போராட்டம் தொடரவே செய்யும்.

நவீன இஸ்லாமிய மறுமலர்ச்சியின் தெளிவான வெளிப்பாடாகவும், ஈமானிய சக்திக்கு முன்னால் எத்தகைய பலம் வாய்ந்த சக்தியும் நிலைகொள்ள முடியாது அதிர்ந்து விடும் எனும் உண்மைக்குச் சான்றாகவும் வர்ணிக்கப்படுகின்றது, ஆப்கான் மக்களின் விடுதலைப் போராட்டம். ஒரு மில்லியனுக்கும் அதிகமான ஷஹீத்களின் இரத்தத்தினால் வலுவூட்டப்பெற்ற பல மில்லியன் மக்களை அகதிகளாக்கிவிட்ட ஆப்கான் மக்களின் போராட்டம் 20ம் நூற்றாண்டின் விடுதலைப் போராட்டங்களிலே இணையற்றதாகும்.

## நாடும் மக்களும்

ஆப்கான் ஜிஹாதின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக அந்த நாட்டையும் அதன் மக்களையும் விளங்கிக்கொள்ள வேண்டியது மிக அவசியமானதொன்றாகும்.

ஆப்கானிஸ்தான் நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியையும், அறிவுப் பாரம்பரியத்தையும் விழுமியதொரு நாகரீகத்தையும், பெற்ற ஒரு பூமியாகும். அது இமாம்களான அபூ ஹனிபா, அல்-பைஹகி, அல்-பல்ஹி, அல்-ஹரவி, இப்னுஹிப்பான் போன்றோரை ஈன்றெடுத்த புண்ணிய பூமியாகும். இந் நாட்டின் எல்லைப்பிரதேசத்தில் தான் இமாம்களான அத்-திர்மிதி, அல்நாஸாயீ, அல்-புஹாரி ஆகியோரின் பிறப்பிடங்கள் அமைந்துள்ளன. இந்தியாவைக் கைப்பற்றிய மாவீரர் மஹ்மூத் - அல்-கஸ்னவியின் தாயகமும் ஆப்கானிஸ்தானே. பேரறிஞர்களான அல்-பஹ்ர் அர் ராஸி, இப்னு குதைபா, இமாமுல் ஹரமைன் அல் ஜுவைனி, அல்-பராவி, அல்-பைரூனி, இப்னு ஸீனா, அல்-ஜுஸ்தானி போன்றோரைப் பெற்ற பாக்கியமும் இப்பூமியையே சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கான் மக்கள் தமக்கேயுரிய பல சிறப்பம்சங்களைப் பெற்று திகழ்கின்றனர். இந்நாட்டு மக்களில் 99% வீதமானோர் முஸ்லிம்கள்; பெரும்பாலானோர் சுன்னத் வல் ஜமா அத்தைச் சேர்ந்தவர்கள். உமர்(ரலி) அவர்களது ஆட்சிகாலத்தில் ஆஸிம் பின் அம்ர் அத்தமீமி இந்நாட்டைக்கைப்பற்றியது முதல் 1972ம் ஆண்டில் இடம்பெற்ற முஹம்மத் தாவூதின் புரட்சிவரைக்கும் இந் நாட்டின் அரசியல் யாப்பாக இஸ்லாமிய ஷரீஅத் சட்டமே இருந்து வந்துள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இந் நாட்டு மக்களை வழி நடாத்துகின்ற தனிப் பெரும் சக்தியாக இஸ்லாமே இருந்து வந்திருக்கின்றது. உலமாக்களே இம்மக்களின் வழிகாட்டிகளாகவும், தலைவர்களாகவும் அன்றும் இன்றும் இருந்துவருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேயருடன் நெருங்கிய உறவு வைத்திருந்த மன்னர் ஹபீபுல்லாஹ்வை 1916ல் ஆட்சியிலிருந்து கவிழ்த்துக் கொலை செய்தமையும் நாட்டை மேற்கத்திய மயப்படுத்த முயற்சி செய்த மன்னர் அமானுல்லாஹ் கானை 1928ல் ஒழித்துக்கட்டியமையும் இந்நாட்டு மக்களின் இஸ்லாமிய உணர்வையே எடுத்துக்காட்டுகின்றன.

ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கசப்பான பாடங்களைக் கற்பித்த பெருமையையும் ஆப்கான் பெற்றுள்ளது. இந்நாட்டைக் கைப்பற்றுவதற்கு முயன்ற பரித்தானியா பல முறை படுதோல்வி கண்டது. 1842ம் ஆண்டு ஆப்கானைக் கைப்பற்ற அனுப்பப்பட்ட 12,000 வீரர்களைக்கொண்ட பிரித்தானியப்படை முற்றாக அழிக்கப்பட்டது, ஒரே ஒரு ஆங்கில வீரருக்கே உயிர் தப்பி நாடு திரும்ப முடிந்தது.

ஏழைகளான ஆப்கான் மக்கள், ஆடம்பரத்தையும் சுகபோக வாழ்க்கையையும் கண்டறியாதவர்களாவர். எத்தகைய கஷ்டநஷ்டங்களையும் தாங்கிக்கொள்ளும் தன்மை படைத்த இவர்கள், பிறருக்கு உதவுவதிலும் வாரி வழங்குவதிலும் பெரிதும் அக்கறையுடையவர்கள்.

இவ்வாறான சிறப்புப் பண்புகளைப் பெற்ற ஆப்கான் மக்கள்தாம் கடந்த எட்டு வருடங்களாக உலகின் மாபெரும் வல்லரசு ஒன்றுடன் சளைக்காமல் போராடி வருகின்றனர்.

## ரஷ்ய ஆக்கிரமிப்பின் சுருக்க வரலாறு

979ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் ரஷ்ய இராணுவம் ஆப்கானில் காலடிவைத்தது இந்த ரஷ்ய ஆக்கிரமிப்புக்கான அடிப்படைக் காரணம் ஆப்கானில் மிக வேகமாக வளர்ந்து வரும் இஸ்லாமிய அடிப்படையிலான எழுச்சியின் தாக்கம் தமது ஆட்சியின் கீழிருக்கும் முஸ்லிம் பிரதேசங்களிலும் பரவி விடுமோ என்ற அச்சமும் கலக்கமுமாகும். ரஷ்ய ஆதிக்கத்தின் கீழ்க் காணப்படுகின்ற முஸ்லிம் பிரதேசங்களான தாஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துருக்மானிஸ்தான் ஆகிய மூன்றும் ஆப்கான் எல்லையில் அமைந்துள்ளமையும், மேலும் இரண்டு முஸ்லிம் பிரதேசங்களான கஸாகிஸ்தானும், கோகேஸியாவும் ஆப்கான் எல்லைக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில், சோவியத்தின் ஆதிக்கத்திலுள்ள மேற்குறிப்பிட்ட முஸ்லிம் பிரதேசங்களையும், ஆப்கானிஸ்தானையும் பிரிப்பது அமூர் எனும நதி மாத்திரமேயாகும்.

பலூஷிஸ்தானின் ஊடாக அரபிக்கடலையடைந்து சுடுநீர் பெறுவதும், அரபிக்கடலின் ஆதிக்கத்தைப்பெறுவதன் மூலம் பெற்றோல் போக்குவரத்துப் பாதையை அடைந்து கொள்வதும் ரஷ்ய ஆக்கிரமிப்புக்குப் பின்னணியாக உள்ள சில பொருளாதாரக் காரணிகளாகும்.

ரஷ்யா தனது நேரடி ஆக்கிரமிப்புக்கு முன்பே மறைமுகமாக ஆப்கானிஸ்தானைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கட்டுப்பாட்டினுள் வைத்துக்கொள்வதில் கூடிய அக்கறை காட்டி வந்திருக்கிறது. அதே நேரத்தில் நேரடி ஆக்கிரமிப்புக்கான முன் ஆயத்தங்களையும் செய்து வந்திருக்கிறது. ரஷ்யா ஆப்கானுடனுன நல்லுறவை பலப்படுத்திக் கொள்ளுதல் எனும் போர்வையில் சுமார் 15 வருடங்களுக்கு முன்னரே பார - வாகனங்களும், கவச வண்டிகளும் போக்குவரத்துச் செய்யக் கூடிய ஒடு பாதையை அமைத்தமை இதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

1933ம் ஆண்டில் ஆட்சிக்குவந்த மன்னர் முஹம்மத் ழாஹிர்ஷாவை ஆட்சியிலிருந்து கவிழ்த்து, அன்றைய பிரதமராக இருந்த முஹம்மத் தாவூத் (1972ல்) ஆட்சியைக் கைப்பற்ற ரஷ்யாவே பின்னணியில் இருந்து இயங்கியது. முஹம்மத் தாவூத் ரஷ்யாவிற்கு பெரிதும் விசுவாசமாக நடந்து கொண்ட ஒரு கம்யூனிஸ்வாதி. ஆப்கானின் பிற்கால கம்யூனிஸ தலைவர்களான தராகி, ஹபீஸுல்லாஹ் அமீன், பார்பக் கர்மால் போன்ரோர் இவரின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள். மன்னர் ழாஹிர் ஷாவின் ஆட்சியில் பிரதமராகவும், பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் இருந்த போதே தாவூத் இஸ்லாத்திற்கும் இஸ்லாமிய இயக்கத்துக்கும் எதிராக கடுமையாக செயல்பட ஆரம்பித்தார். பல பெயர்களில் தேவையான உதவிகளை ரஷ்யாவிடமிருந்து பெற்று கம்யூனிஸ சிந்தனைகளை மிக வேகமாகப் பரப்பி வந்தார்.

மன்னர் ழாஹிர் ஷாவினதும் குறிப்பாக அன்றைய பிரதமராகவிருந்த தாவூதினதும் இஸ்லாம் எதிர்ப்புப் போக்கைக் கண்ணுற்ற அன்று காபூல் பல்கலைக்கழகத்தில் ஷரீஆத் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் குலாம் முஹம்மத் நியாஸி இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பாதுகாக்கவும், கம்யூனிஸ ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவிக்கவும் ஓர் அமைப்பின் தேவையை உணர்ந்தார். அவ்வடிப்படையில் தனது பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில விரிவுரையாளர்களையும், மாணவர்களையும் இணைத்து ஓர் இயக்கத்தை உருவாக்கினுர். இன்றுள்ள முஜாஹிதீன் தலைவர்கள் பலர் இவ்வியக்கத்தின் ஆரம்ப அங்கத்தவர்களாக இருந்தனர்.

ழாஹிர் ஷாவைத் தொடர்ந்து பதவிக்கு வந்த முஹம்மத் தாவூத், இஸ்லாமிய இயக்கத்தை ஒழிப்பதில் தீவிரமாக ஈடுபடலானுர். இஸ்லாமிய இயக்கமும், அரசுக்கெதிராக முனைப்பாகச் செயற்படலாயிற்று. முஹம்மத் தாவூத் இஸ்லாமிய இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 600 முஸ்லிம் வாலிபர்களைப்படுகொலை செய்தாலும் அது ரஷ்யாவுக்குப் போதிய திருப்தியைக் கொடுக்கவில்லை, கம்யூனிஸ அமைப்பு ஆப்கானில் வேரூன்றி ஸ்திரமடைய தாவூத்தின் எதிர் நடவடிக்கைகள் ரஷ்யாவின் பார்வையில் போதியதாக அமையவில்லை. எனவே ஆப்கான் கம்யூனிஸ கட்சியுடன் இணைந்து ஒரு புரட்சியை ஏற்பாடு செய்தது. 1978ம் ஆண்டு தாவூதின் பிரதம ஆலோசகராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த தராகி, தாவூதுக்கு எதிராகப்புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றினுர். அவரின் குடும்பத்தையும் பூண்டோடு அழித்தார். தராகி தனது ஆட்சியின் ஆரம்ப நாட்களிலேயே 15,000 முஸ்லிம்களைக் கொன்று குவித்தார். இஸ்லாத்துக்கெதிரான பல சட்டங்களையும், நாட்டில் அறிமுகப்படுத்தினுர். வெகுசனத் தொடர்பு சாதனங்களினுடாக இஸ்லாத்தைப் பற்றிப்பேசுவதையும், எழுதுவதையும் தடை செய்தார். பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்பட்டுவந்த மதம் தொடர்பான பாடங்களை நீக்கினுர். அவற்றுக்குப் பதிலாக கம்யூனிஸ, சோஷலிஸ சித்தாந்தங்களைப் போதிக்கும் பாடங்களை அறிமுகம் செய்தார். விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள் உட்பட அனைவரும் சோஷலிஸ சித்தாந்தத்தைக் கற்பிக்கும் பயிற்சி நெறிகளில் கலந்து கொள்வதைக் கட்டாயப்படுத்தினுர். தராகியின் வெறித்தனமான போக்கை அவதானித்த உலமாக்கள் அவரைக் காபிர் எனப் பகிரங்க

மார்க்கத்தீர்ப்பு வழங்கினர். மக்களும் தராஇக் கெதிராக வெகுண்டெழுந்தனர். நாட்டில் எதிர் கிளர்ச்சிகள் பரவலாக மூண்டன. இதனைக் கண்ட தராகி முன்னரைவிடத் தீவிரமாகச் செயற்படலானார். ஒருதடவை ஒரே நாளில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிமகளை படுகொலை செய்தார். கர்களா என்ற கிராமத்தைச் சேர்ந்த அனைத்து வாலிபர்களையும் ஒரே நேரத்தில் படுகொலை செய்தார். அவர்களின் மொத்த எண்ணிக்கை 1110 எனக் கூறப்படுகின்றது. இவர் தனது ஆட்சிக்காலத்தில் 2 இலட்சம் முஸ்லிமகளைக் கொலை செய்துள்ளார்.

தராகிக்கெதிரான மக்களின் எதிர்ப்பும் இஸ்லாமிய இயக்கத்தின் ஜிஹாதும் உச்ச நிலையை அடைவதைக் கண்ட ரஷ்யா தொடர்ந்தும் அவரால் சமாளிக்க முடியாது என்பதனை கண்டு தராகியையும் தீர்த்துக்கட்டியது.

அதனை அடுத்து ஆப்கானிய கம்யூனிஸ் அமைப்பொன்றின் தலைவரான ஹபீஸுல்லா ஹஅமீன் பதவிக்கு வந்தார். கம்யூனிஸ ஆட்சிக் கெதிரான ஆப்கானியரின் ஜிஹாத் மேலும் வலுத்தது. அமீன 3 மாதங்களே ஆட்சி செய்தார். அதற்குள் ரஷ்யா தனது இராணுவ ஆக்கிரமிப்பினை மேற்கொண்டது. அமீனும தூக்கிலிடப்பட்டார். தொடர்ந்து ரஷ்ய அரசு தனது மற்றொரு கைப்பொம்மையான பாப்ரக் கர்மாலை ஆட்சியில் அமர்த்தியது. ஆப்கானில் பாகிஸ்தானைய, ஈரானைய தலையீடுகளைத் தடுக்கும் நோக்கத்துடன் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் தாம ஆப்கானிஸ்தானுக்கு வந்திருப்பதாக ரஷ்யா பொய்ப்பிரசாரம் செய்தது.

இதுவே ஆப்கான் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பின் சுருக்க வரலாறு. அன்று தொடக்கம் இன்றுவரை ரஷ்யா தனது முஸ்லிம் ஒழிப்பு இயக்கத்தை நடாத்தி வருகின்றது.

## ஆக்கிரமிப்பின் விளைவுகள்

ரஷ்யர்களின் ஆக்கிரமிப்பின் காரணமாக அல்லலுறும் ஆப்கான் மக்களின் அவல நிலையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. சர்வதேச ரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ள பயங்கர ஆயுதங்களைக்கொண்டு அவர்கள் ஆப்கானில் செய்யும் நாசகார வேலைகள் சொல்லும் தரமன்று. இவர்களது பயங்கர ஆயுதங்களுக்கும், இரசாயன குண்டுகளுக்கும், நச்சுவாயுக்களுக்கும், இதுவரை ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட ஆப்கானியர் பலியாகியுள்ளனர். ரஷ்ய கம்யூனிஸ்டுகளின் ஆக்கிரமிப்பினாலும் அட்டூழியங்களினாலும் ஆப்கானிக்குள்ளிருக்கும் அகதிகளின் எண்ணிக்கை சுமார் 3 மில்லியனகளாகும். பாகிஸ்தானில் மேலும் 3 மில்லியன் அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். ஈரானில் 2 மில்லியன் அகதிகள் இருக்கிறனர். நாட்டின் மொத்த சனத்தொகையில் அரைப் பங்கினர் ஷஹீதுகளும், அகதிகளுமாவர். இன்று உலகிலுள்ள மொத்த அகதிகளின் அரைப் பகுதியினர் ஆப்கானியர்களே. மாதாந்தம் 6,7 ஆயிரம் பேர் ஆப்கானிலிருந்து பாகிஸ்தான் எல்லைக்கு வந்து கொண்டேயிருக்கின்றனர். இவர்களில் 75 விதமானோர் பெண்களும், குழந்தைகளுமாவர். இன்று பாகிஸ்தானில் சட்டரீதியான அனுமதி பெறாத 3 இலட்சம் அகதிகள் வாழுகின்றனர். இவர்களுக்கு எத்தகைய நிவாரண உதவிகளும் கிடைப்பதில்லை. அகதிகளாகவிருக்கும் தங்கள் உறவினர்களது தயவிலேயே இவர்கள் வாழ வேண்டியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் தாபனத்திலிருந்து அண்மையில் வெளிவந்த அறிக்கையின்படி ஆப்கான் அகதிகளில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆயிரம் பேருக்கு375 என்ற விகிதத்தில் மரணமாகின்றனர் எனவும், பெண்கள் பிள்ளைப் பேற்றின் போது ஓர் இலட்சத்துக்கு 1176 பேர் என்ற விகிதத்தில் மரணமடைகின்றனர் என்றும் தெரியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

